| 24 | கே.எம். சகுபார் ஹுசேன்,<br>மண்டலம்–6 | 09.02.2009 | **ஆம்** | தனியர் வரையறுக்கப்பட்டுள்ள அனைத்து தகுதிகளும் பெற்றுள்ளதாலும் மேலும் தனியர் மீது இன்றைய தேதியில் ஒழுங்கு நடவடிக்கை நிலுவை ஏதும் இல்லை என்பதாலும் தனியரின் பெயரை **இத் தகுதிபட்டியலில் சேர்க்க பரிசீலிக்கலாம்.** |
| 25 | கே.சுந்தரராஜன்,<br>கட்டடத் துறை | 06.02.2009 | **ஆம்** | தனியர் வரையறுக்கப்பட்டுள்ள அனைத்து தகுதிகளும் பெற்றுள்ளதாலும் மேலும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | தனியர் மீது இன்றைய தேதியில் ஒழுங்கு நடவடிக்கை நிலுவை ஏதும் இல்லை என்பதாலும் தனியரின் பெயரை **இத் தகுதிபட்டியலில் சேர்க்க பரிசீலிக்கலாம்.** |
| 26 | ஆர். சுபாஷ்,<br>மண்டலம்–11 | 06.02.2009 | **இல்லை** | தனியர் மீது சென்னை மாநகராட்சி பணி (கட்டுப்பாடு, வகைபாடு மற்றும் மேல்முறையீடு) 1970 விதி 10(எ)ன் கீழ் (பொ.து.ந.க.எண்.ஈ1/ 43244/2012)ல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு ஒழுங்கு நடவடிக்கை தொடரப்பட்டு 22.11.2013 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி '**கண்டனம்**' என , இறுதி ஆணை வழங்கப்பட்டுள்ளது. |
| 27 | வி. சாந்தி,<br>தெற்கு வட்டார அலுவலகம் (பூங்கா) | 10.02.2009 | **ஆம்** | தனியர் வரையறுக்கப்பட்டுள்ள அனைத்து தகுதிகளும்பெற்றுள்ளதாலும் மேலும் தனியர் மீது இன்றைய தேதியில் ஒழுங்கு நடவடிக்கை நிலுவை ஏதும் இல்லை என்பதாலும் தனியரின் பெயரை **இத் தகுதிபட்டியலில் சேர்க்க பரிசீலிக்கலாம்.** |

உதவி செயற்பொறியாளர் பதவியில் 5 ஆண்டுகள் தகுதிப்பணி முடித்து செயற் பொறியாளராக பதவி உயர்வு பெறுவதற்கு கீழ்கண்ட 12 உதவி செயற் பொறியாளர்கள் தகுதி பெறுகிறார்கள்.

| வ. எண். | உதவி செயற் பொறியாளரின் பெயர் (திருவாளர்கள்) | உதவி செயற் பொறியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாள் |
|---|---|---|
| 01 | டி.சரவணபவாநந்தம்<br>மண்டலம்–14 | **16.06.2003** |
| 02 | ஆர்.நேருகுமார்,<br>பணித்துறை. | **16.06.2003** |
| 03 | ஆர்.முரளி,<br>மண்டலம்–12 | **06.02.2009** |
| 04 | கே.சுந்தரேசன்,<br>மண்டலம்–3 | **06.02.2009** |
| 05 | ஏ.பி. ஸ்ரீகுமார்,<br>தெற்கு வட்டார அலுவலகம் (கட்டடம்) | **(கருத்தியலாக பதவி உயர்வு ) 10.06.2010** |
| 06 | ப்பி.எஸ். சீனிவாசன்,<br>ஒருங்கிணைப்பு பிரிவு தலைமையிடம் | **09.02.2009** |
| 07 | டி.கே.கணேசன்,<br>தலைமையிடம் (தெற்கு) | **(கருத்தியலாக பதவி உயர்வு )<br>09.02.2010** |
| 08 | எம்.காமராஜ்,<br>தரக்கட்டுப்பாடு பிரிவு தலைமையிடம் | **06.02.2009** |
| 09 | கே.ஜெயகாந்த்,<br>பாலங்கள் துறை | **06.02.2009** |
| 10 | கே.எம். சகுபார் ஹுசேன்,<br>மண்டலம்–6 | **09.02.2009** |
| 11 | கே.சுந்தரராஜன்,<br>மழைநீர் வடிகால் துறை | **06.02.2009** |
| 12 | வி. சாந்தி,<br>தெற்கு வட்டார அலுவலகம் (பூங்கா) | **10.02.2009** |

செயற்பொறியாளர் தெரிவுப்பட்டியல் தயாரிப்பதற்கு மைய நாள்:01.04.2014 ஆகும். இத்தெரிவுப்பட்டியல் ஒப்புதல் பெற்று காலிப்பணியிடங்களை நிரப்புவதற்கு காலதாமதம் ஏற்படும் நிலை உள்ளதாலும், அனைத்து நிர்வாக மற்றும் வளர்ச்சி பணிகளை கண்காணிக்க செயற்பொறியாளர்களின் பணி அவசியம் தேவைப்படுவதாலும், மேலும் பாராளுமன்ற தேர்தல் பணியின் போது இவர்களின் பணி மிகவும் அவசியமாக தேவைப்படும் என்பதால், அன்றைய தேதியில் ஏற்பட்டுள்ள 8 காலிப்பணியிடங்களை உடன் நிரப்ப வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்ட விதி 1919ல் விதி எண்.87(1 )ன்படி **"If a vacancy occurs in any office inculded in Class-IB and II are any new office in Class-IB or Class-II is created, the Council shall within three months appoint any qualified and suitable person to hold such office"**

சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்ட விதி 1919ல் விதி எண்.87( 4 )ன்படி "**Pending an appoinment under sub-section (1) or sub-section (2), the council may appoint a person to hold the office temporarily and assign to him such salary as it may think fit"**

எனவே, மேற்கண்ட சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்ட விதி 1919ல் விதி எண்.87 (1) மற்றும் 87(4)ன்படி செயற் பொறியாளர் பதவியில் ஏற்பட்ட 8 காலிப்பணியிடங்களை உடனே நிரப்ப தற்காலிக தெரிவுப்பட்டியல் (Temporary Panel) தயாரித்து மன்றத்தின் ஒப்புதல் பெற்று தற்காலிகமாக பதவி உயர்வு வழங்கப்பட்டது.

இத்தற்காலிக பட்டியல் தயாரிக்கப்படும் நாளில் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள உதவி செயற் பொறியாளர்களின் மீது ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை. எனினும் முறையான பட்டியல் தயாரிக்கப்படும் நாளன்று மேற்படி நபர்கள் மீது குற்றச்சாட்டுகள் ஏதேனும் இருப்பின் அந்நபர்களுக்கு முறையான பதவி உயர்வு வழங்கப்படமாட்டாது என்ற நிபந்தனையின் அடிப்படையிலும்,

தற்போது செயற்பொறியாளர் பதவி உயர்வுக்கு அனைத்து தகுதிகளையும் பெற்றுள்ள வரிசை எண்.1 முதல் 8 வரை இடம்பெற்றுள்ள உதவி செயற்பொறியாளர்களுக்கு தமிழ்நாடு சார்நிலை பணிவிதிகள் 39(a),39(c) மற்றும் சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்ட விதி 1919ல் விதி எண்.87 (1) மற்றும் (4)ன்படி தற்காலிக பதவி உயர்வு வழங்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி பெற்று, தெரிவுப்பட்டியலில் இடம்பெற்றுள்ள முதல் 8 தகுதிவாய்ந்த உதவி செயற் பொறியாளர்களுக்கு தற்காலிகமாக மேற்படி நிபந்தனைகளின் அடிப்படையில் செயற் பொறியாளராக பதவி உயர்வு அளிக்கப்பட்டது.

தற்போது 01.04.2014ஐ மைய நாளாக வைத்து செயற் பொறியாளர் பதவிக்கு கீழ்கண்ட உதவி செயற் பொறியாளர்களைக் கொண்டு முறையான தெரிவுப்பட்டியல் தயாரிப்பதற்கு மீண்டும் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி பெறப்படவேண்டும்.

எனவே, கீழ்கண்ட இனங்களின் மீது நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

01.04.2014ஐ மைய நாளாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள தகுதியான உதவி செயற் பொறியாளர்களைக் கொண்ட முறையான தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதலும்;

| வ. எண். | உதவி செயற் பொறியாளரின் பெயர் (திருவாளர்கள்) | உதவி செயற் பொறியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாள் | குறிப்பு |
|---|---|---|---|
| 01 | டி.சரவணபவாநந்தம்<br>மண்டலம்–14 | 16.06.2003 | தற்காலிகமாக செயற் பொறியாளர் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. |
| 02 | ஆர்.நேருகுமார்,<br>பணித்துறை. | 16.06.2003 | தற்காலிகமாக செயற் பொறியாளர் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. |
| 03 | ஆர்.முரளி,<br>மண்டலம்–12 | **06.02.2009** | தற்காலிகமாக செயற் பொறியாளர் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. |
| 04 | கே.சுந்தரேசன்,<br>மண்டலம்–3 | **06.02.2009** | தற்காலிகமாக செயற் பொறியாளர் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. |
| 05 | ஏ.பி. ஸ்ரீகுமார்,<br>தெற்கு வட்டார அலுவலகம் (கட்டடம்) | (கருத்தியலாக பதவி உயர்வு )<br>**10.06.2010** | தற்காலிகமாக செயற் பொறியாளர் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. |
| 06 | ப்பி.எஸ். சீனிவாசன்,<br>ஒருங்கிணைப்பு பிரிவு தலைமையிடம் | **09.02.2009** | தற்காலிகமாக செயற் பொறியாளர் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. |
| 07 | டி.கே.கணேசன்,<br>தலைமையிடம் (தெற்கு) | (கருத்தியலாக பதவி உயர்வு )<br>**09.02.2010** | தற்காலிகமாக செயற் பொறியாளர் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. |
| 08 | எம்.காமராஜ்,<br>தரக்கட்டுப்பாடு பிரிவு தலைமையிடம் | **06.02.2009** | தற்காலிகமாக செயற் பொறியாளர் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| 09 | கே.ஜெயகாந்த்,<br>பாலங்கள் துறை | **06.02.2009** | - |
| 10 | கே.எம். சகுபார் ஹுசேன்,<br>மண்டலம்–6 | **09.02.2009** | - |
| 11 | கே.சுந்தரராஜன்,<br>மழைநீர் வடிகால் துறை | **06.02.2009** | - |
| 12 | வி. சாந்தி,<br>தெற்கு வட்டார அலுவலகம்<br>(பூங்கா) | **10.02.2009** | - |

2. அடுத்து வரும் மைய நாளுக்கு முன்பு ஏற்பட்டுள்ள/மைய நாளுக்கு பின்பு ஏற்படவுள்ள காலிப்பணியிடங்களை இந்த முறையான தேர்ந்த பெயர்ப்பட்டியலிருந்து ரூ.15600–39100+ 6600 தர ஊதியம் என்ற ஊதிய விகிதத்தில் செயற்பொறியாளர்களாக பதவி உயர்வு வழங்கவும்.

2. ஏற்கனவே, தற்காலிகமாக செயற் பொறியாளர்களாக பதவி உயர்வு பெற்றுள்ள வரிசை எண்.1 முதல் 8 வரை உள்ள நபர்களுக்கு தற்போது நியமனக்குழு மூலமாக மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்ட பின் வழங்கப்படவிருக்கும் முறையான பதவி உயர்வுக்கு பின்னர் செயற் பொறியாளர் பதவியில் ரூ.15600 – 39100 + 6600 தர ஊதியம் என்ற ஊதிய விகிதத்தில் விதிகளின்படி ஊதிய நிர்ணயம் செய்யவும், பணிவரன்முறைப்படுத்தவும்.

“ இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**பொ.து.ந.க.எண்.ஈ1/38341/2012**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 23.06.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.337/2014 **பொருள் எண்.19**

**ஒழுங்கு நடவடிக்கையில் கைவிடப்பட்ட இளநிலை பொறியாளர்களின் பெயர்களை கருத்தியலான பதவி உயர்வு (உதவி செயற்பொறியாளர்களாக) வழங்க அனுமதி**

சென்னை மாநகராட்சியில் 2012–2013ஆம் ஆண்டிற்கான உதவி செயற்பொறியாளர் பதவிக்கு தெரிவுப்பட்டியல் தயாரிக்கும் போது திரு.கே.அமிர்தலிங்கம் மற்றும் திரு.ஆர்.பூபதி, ஆகிய இளநிலை பொறியாளர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் இருந்ததால், 2012–2013ஆம் ஆண்டிற்கான உதவி செயற்பொறியாளர் பதவிக்கான தெரிவுப்பட்டியலில், இவர்களது பெயர்களை சேர்க்காமல் ஒத்தி வைக்கப்பட்டது.

26.04.2013, 28.09.2013 மற்றும் 11.05.2013, 29.10.2013 ஆகிய மன்றத் தீர்மானங்கள் மற்றும் செயல்முறை ஆணைகளின்படி, தெரிவுப்பட்டியலில் இடம்பெற்றிருந்த 52 பொறியாளர்களுக்கு உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வு வழங்கப்பட்டது.

திரு.கே.அமிர்தலிங்கம் மற்றும் திரு.ஆர்.பூபதி, ஆகிய இளநிலை பொறியாளர்கள் மீது சென்னை மாநகராட்சி வகுப்பு 3 மற்றும் 4ம் நிலை பணியாளர்கள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகள் 1983 துணை விதி எண்.9(2)ன் கீழ் தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை கைவிடப்பட்டு 26.12.2013 மற்றும் 29.01.2013 ஆகிய செயல்முறை ஆணைகளின் மூலமாக இறுதியாணை பிறப்பிக்கப்பட்டது.

திரு.கே.அமிர்தலிங்கம், இளநிலை பொறியாளர் அவர்கள் மீதான ஒழுங்கு நடவடிக்கை கைவிடப்பட்டதால், 2012–2013ஆம் ஆண்டிற்கான உதவி செயற்பொறியாளர் பதவிக்கான தெரிவுப்பட்டியலில், வரிசை எண்.15ல் உள்ள திரு.எ.மோகன் அவர்களின் பெயருக்கு பின்னரும் வரிசை எண்.16ல் உள்ள திரு.எஸ்.தேவபாலன் அவர்களின் பெயருக்கு முன்னால் வரிசை எண்.15-Aல் மூப்புநிலை நிர்ணயம் செய்து திரு.கே.அமிர்தலிங்கம், இளநிலை பொறியாளர் அவர்களின் உடனடி இளையவர் (Immediate Junior) திரு. எஸ்.தேவபாலன் அவர்கள், உதவி செயற் பொறியாளராக பதவி உயர்வு வழங்கப்பட்டு, உதவி செயற்பொறியாளராக பணியேற்ற நாள் முதல், முன்தேதியிட்டு (with retrospective effect from the date on which his juniors were promoted) அரசாணை எண்.368 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த துறை நாள் 18.10.93ல் தெரிவித்துள்ளவாறு மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டு ரூ.15600 – 39100 + 5400 தர ஊதியம் என்ற ஊதிய விகிதத்தில் உதவி செயற் பொறியாளராக தனியருக்கு கருத்தியிலான (Notional Promotion) பதவி உயர்வு வழங்கி, தனியர் உதவி செயற் பொறியாளராக பணியில் சேர்ந்த நாள் முதல் பணப்பயன்கள் வழங்க 25.01.2014 நாளிட்ட செயல்முறை ஆணை பிறப்பிக்கப்பட்டு தனியர் 29.01.2014பிற்பகல் முதல் உதவி செயற்பொறியாளராக பணியில் சேர்ந்துள்ளார்.

திரு.ஆர்.பூபதி, இளநிலை பொறியாளர் அவர்கள் மீதான ஒழுங்கு நடவடிக்கை கைவிடப்பட்டதால், 2012–2013ஆம் ஆண்டிற்கான உதவி செயற்பொறியாளர் பதவிக்கான தெரிவுப்பட்டியலில், வரிசை எண்.43ல் உள்ள திரு.என்.பாண்டியன் அவர்களின் பெயருக்கு பின்னரும் வரிசை எண்.44ல் உள்ள திரு.எ.கோபாலகிருஷ்ணன் அவர்களின் பெயருக்கு முன்னால் வரிசை எண்.43Aல் மூப்புநிலை நிர்ணயம் செய்து திரு.ஆர்.பூபதி, இளநிலை பொறியாளர் அவர்களின் உடனடி இளையவர் (Immediate Junior) திரு. எ.கோபாலகிருஷ்ணன் அவர்கள், உதவி செயற் பொறியாளராக பதவி உயர்வு வழங்கப்பட்டு, உதவி செயற்பொறியாளராக பணியேற்ற நாள் முதல், முன்தேதியிட்டு (with retrospective effect from the date on which his juniors were promoted) அரசாணை எண்.368 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த துறை நாள் 18.10.93ல் தெரிவித்துள்ளவாறு மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டு ரூ.15600 – 39100 + 5400 தர ஊதியம் என்ற ஊதிய விகிதத்தில் உதவி செயற் பொறியாளராக தனியருக்கு கருத்தியிலான (Notional Promotion) பதவி உயர்வு வழங்கி, தனியர் உதவி செயற் பொறியாளராக பணியில் சேர்ந்த நாள் முதல் பணப்பயன்கள் வழங்க 14.02.2014 நாளிட்ட செயல்முறை ஆணை பிறப்பிக்கப்பட்டு தனியர் 21.02.2014முற்பகல் முதல் உதவி செயற்பொறியாளராக பணியில் சேர்ந்துள்ளார்.

எனவே, தனியர்களுக்கு உதவி செயற் பொறியாளர் பதவியில் கருத்தியலான(Notional Promotion) பதவி உயர்வு வழங்கியமைக்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

'' இதனை நியமனக்கழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது''

''இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது''

*******

**<u>ம.அ.6.ந.க.எண்.அ7/5951/2013</u>**

**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 21.6.2014 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.338/2014 **பொருள் எண்.20**

**<u>மண்டலம்–6 – பகுதி–15, 16 மற்றும் 17, வார்டு–64 முதல் 78–வரையிலும் ஆட்டிறைச்சி கூடம் மற்றும் ஓட்டேரி குப்பை கொட்டும் வளாகத்திலும் சுவர்ண ஜெயந்தி நிலை–II தினக்கூலி அடிப்படையில் அண்டை வீட்டுக் குழுக்களைக் கொண்டு தூய்மைப் பணிக்கு நிர்வாக – அனுமதி</u>**

மண்டலம்–6ல் பகுதி–15,16 மற்றும் 17 (வார்டு–64 முதல் 78 வரை) ஆட்டிறைச்சி கூடம் மற்றும் ஓட்டேரி குப்பை கொட்டும் வளாகம் ஆகிய பகுதிகளில் சுவர்ண ஜெயந்தி திட்டம் நிலை–II அண்டை வீட்டுக் குழுக்களைக் கொண்டு தூய்மைப் பணி திட்டம் செயல்படுத்தப்பட்டு சுமார் 270 பணியாளர்கள் பணி செய்திட மாமன்றத்தின் தீர்மானம் பெறப்பட்டு நடைமுறையில் உள்ளது.

மண்டலம்–6ல் உள்ள மொத்த பணியாளர்களின் எண்ணிக்கை 1785 ஆகும். 10.06.2014 வரையிலான (தற்போதைய நிலவரம்) நிரந்தர பணியாளர்கள் 1311 போக 474 காலிப்பணியிடங்கள் ஆகும். இந்நிலையில் நிலை–I சுவர்ண ஜெயந்தி திட்டம் அண்டை வீட்டுக் குழுக்களின் மூலம் பணிபுரிபவர்கள் 270 நபர்கள் ஆவர். இதன் அடிப்படையில் நிலை–IIல் கீழ்கண்ட அட்டவணையில் கண்டுள்ளவாறு 204 தூய்மை பணியாளர்கள் தற்சமயம் தேவைப்படுகின்றனர்.

| வ. எண் | வார்டு எண் | மொத்தம் தேவைப்படும் பணியாளர் களின் எண்ணிக்கை | தற்போது பணிபுரியும் நிரந்தரப் பணியாளர்கள் | 10.06.2014 வரை ஏற்பட்டுள்ள காலி பணியிடம் | தற்போது ஒப்பந்ததாரர் மூலம் பணியமர்வு செய்யப்பட்டுள்ள பணியாளர்களின்எண்ணிக்கை | | மீதம் தேவைப் படும் பணியாளர் களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | சுவர்ண ஜெயந்தி (அண்டை வீட்டு குழுக்கள் ) பணியாளர்கள் | ஒப்பந்ததாரர் D. கந்தன் (பணி முடிவடையும் நாள். 14.03.2014) | |
| 1 | 64 | 187 | 166 | 21 | 09 | 7 | 05 |
| 2 | 65 | 149 | 116 | 33 | 10 | 16 | 07 |
| 3 | 66 | 169 | 123 | 46 | 13 | 32 | 01 |
| 4 | 67 | 88 | 79 | 09 | 03 | 5 | 01 |
| 5 | 68 | 107 | 86 | 21 | 10 | 10 | 01 |
| 6 | 69 | 117 | 96 | 21 | 07 | 11 | 03 |
| 7 | 70 | 117 | 57 | 60 | 60 | – | 00 |
| 8 | 71 | 68 | 45 | 23 | 09 | 14 | 00 |
| 9 | 72 | 130 | 44 | 86 | 66 | 15 | 05 |
| 10 | 73 | 106 | 54 | 52 | 51 | – | 01 |
| 11 | 74 & ODG | 137 | 125 | 12 | 4 | 6 | 02 |
| 12 | 75 | 48 | 35 | 13 | 3 | 10 | 00 |
| 13 | 76 | 86 | 72 | 14 | – | 14 | – |
| 14 | 77 | 115 | 73 | 42 | 5 | 37 | 00 |
| 15 | 78 | 102 | 102 | 00 | – | 8 | –8 |
| 16 | S.H. | 59 | 38 | 21 | 20 | – | 01 |
| மொத்தம் | | 1785 | 1311 | 474 | 270 | 185 | 19 |

மண்டலம்–6ல் உள்ள வார்டு 64 முதல் 78 வரை உள்ள பகுதிகளில் வசிக்கும் பொது மக்களுக்கு சுகாதார சீர்கேடு ஏற்படாதவாறு சென்னை மாநகராட்சி திடக்கழிவு மேலாண்மைத் துறையின் மூலமாக நிரந்தர தூய்மைப் பணியாளர்களை பணியமர்த்தும் வரை குப்பைகளை அகற்றிட தூய்மைப்பணி செய்திட திட்ட இயக்குநர், சுவர்ண ஜெயந்தி நகர்புற வேலைவாய்ப்பு (அண்டை வீட்டுக் குழுக்கள்) திட்டத்தின் கீழ் ஊதியம் வழங்கும் பொருட்டு நிதி ஒதுக்கீடும் தேவைப்படுகிறது. 31.05.2014 அன்று நடைபெற்ற சுவர்ண ஜெயந்தி அண்டை வீட்டுக் குழுக்களுக்கான பயிற்சி வகுப்பு முகாமில் மத்திய வட்டார துணை ஆணையர் அவர்களின் வாய்மொழி உத்தரவுக்கிணங்க திட்ட அலுவலர் அவர்களிடம் குழுக்களுக்கான சம்பளம் பட்டுவாடாவை செய்திட உத்திரவிட்டுள்ளார்கள் என்பதையும் இதன் மூலம் தெரிவித்து கொள்ளப்படுகிறது.

எனவே,

1. மண்டலம்–6ல் உள்ள பகுதி–15,16 மற்றும் 17–க்குட்பட்ட வார்டு 64 முதல் 78 வரை உள்ள 15 வார்டுகளில் வாழும் பொது மக்களுக்கு சுகாதாரம் சீர்கெடாத வகையில் சுவர்ண ஜெயந்தி நகர்புற வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் பதிவு செய்துள்ள அண்டை வீட்டு குழுக்கள் (மகளிர் சுய உதவி குழுக்கள்) மூலமாக தூய்மை பணிகளை தொடர்ந்து மேற்கொள்ளவும் ஆட்டு இறைச்சி கூடம் மற்றும் ஒட்டேரி குப்பை கொட்டும் வளாகத்திற்கும் சேர்த்து 204 பணியாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.295/– வீதம் 365 நாட்களுக்கு (12 மாதங்களுக்கு) ஆகும் செலவினத் தொகை ரூ.2,19,65,700/– தொகைக்கு நிர்வாக அனுமதியும்,
2. மேற்கண்ட பணிக்கான ரூ.2,19,65,700/– செலவினத்தை கணக்கு தலைப்பு தனியார் மயம் துப்புரவு (Privatization of Conservancy) வரவு செலவு திட்ட மதிப்பீடு 2014–2015 ஆம் நிதியாண்டில் பிரிவு எண்.40–41–03 கணக்கு தலைப்பு எண். 230–15–01–00 தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்திடவும்,
3. மேற்காணும் தொகை ரூ.2,19,65,700/– நிதி ஆலோசகர் மூலமாக பெறவும்,
4. மேற்காணும் சொர்ண ஜெயந்தி நகர்புற வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் பதிவு செய்துள்ள அண்டை வீட்டு குழுக்கள் மூலமாக பணியாளர்களின் குழுக்களுக்கு திட்ட அலுவலர் சுவர்ண ஜெயந்தி வேலைவாய்ப்பு திட்டம் அவர்களின் மூலமாக ஊதியம் பட்டுவாடா செய்யவும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரையுள்ள இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 19.06.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 25.06.2014 அன்று தீர்மான எண்.294/2014ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 20.06.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 25.06.2014 அன்று தீர்மான எண்.299/2014ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலமாக பெருபான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**ம.அ.10.ந.பி.ந.க.எண்.13894/2013**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் 19.06.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.339/2014 **பொருள் எண்.21**

**தானபத்திரம்**

திரு. என். ஹரிஹரன், புதிய கதவு எண்.31, பழைய க.எண்.10, ஆரிய கௌடா ரோடு, மேற்கு மாம்பலம், சென்னை–600 033 பிளாக் எண்.47, சர்வே எண்.31, என்ற இடத்திற்கு கட்டட அனுமதி வேண்டி சென்னை மாநகராட்சி, மண்டலம்–10ல் விண்ணப்பித்துள்ளார். அவர் கட்ட அனுமதி வேண்டி விண்ணப்பித்த இடத்தினை ஒட்டிய சாலை ''சென்னை முழுமை வளர்ச்சித் திட்டம்–II'' ன் மூலம் 18.29 மீ அகலம் உள்ள சாலையாக விரிவாக்கம் செய்யப்பட வேண்டும். இதில் மனையின் உரிமையாளர் சாலை விரிவாக்கத்திற்காக 1.75மீ நீளம் x 32.61மீ அகலம் = 57.10ச.மீ பரப்பளவு நிலத்தினை தானபத்திரம் மூலம் சென்னை மாநகராட்சிக்கு தானமாக கொடுக்க இசைவு தெரிவித்துள்ளார். மேலும், அவர் வழங்கிய தான பத்திரத்தின் வரைவை 10வது மண்டல வார்டு குழு பரிந்துரை செய்து (தீர்மானம் எண்.1095 நாள்.17.12.2013 ) தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

எனவே,

1. கட்டட உரிமையாளர் திரு.என்.ஹரிஹரன் அவர்களிடமிருந்து இசைவு பெற்ற தானபத்திரம் மூலம் 57.10 ச.மீ நிலத்தினை சென்னை மாநகராட்சிக்கு தானமாக பெறவும்,
2. தானமாக வழங்கப்பட்ட பகுதியில் சாலை விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ள செலவாகும் செலவீனம் ரூ.69,000/–ஐ கட்டட உரிமையாளரிடம் ''ஆணையர் சென்னை மாநகராட்சி'' என்ற பெயரில் காசோலையாக பெறவும்,
3. கட்டட உரிமையாளருக்கு தானமாக பெறப்படும் இடத்திற்கு ''வளர்ச்சி உரிமை சான்றிதழை'' சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் மூலம் வழங்க பரிந்துரை செய்யவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''ஏற்கனவே நிலைக்குழு(நகரமைப்பு) கூட்டம் 13.06.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தினை கருத்தில் கொண்டு 24.06.2014 அன்று தீர்மான எண்.05/2014–ன்படி நிலைக்குழு(நகரமைப்பு)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**ம.அ.13.ந.க.எண்.சி2/5451/2014**

**முதன்மைச் செயலாளர் மற்றும் ஆணையர் அவர்களின் 13.06.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.340/2014 **பொருள் எண்.22**

**பொதுக்கழிப்பிடம் இடிக்க அனுமதி**

| வ. எண் | வார்டு.170 | மண்டலம்–13 |
|---|---|---|
| 1. | இடிக்கப்படவேண்டிய கட்டிடத்தின் விவரம் | மண்டலம்–13, வார்டு–170ல் நாகிரெட்டி தோட்டத்தில் மிகவும் பழுதடைந்து உபயோகிக்க இயலாத நிலையில் உள்ள பொதுக்கழிப்பிடம். |
| 2. | கட்டிடம் கட்டப்பட்ட துறை மற்றும் வருடம் | 1998ம் ஆண்டு கட்டப்பட்டது |
| 3. | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ரூ. 1,92,243.92 |
| 4. | கட்டிடம் இடிப்பதற்கான காரணம் | மிகவும் பழுதடைந்து உபயோகிக்க இயலாததால் |
| 5. | கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக | தரைதளம் 33 சதுர மீ |
| 6. | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் பரப்பளவு | 354.75 சதுர அடி |
| 7. | அந்த கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது | பொதுக்கழிப்பிடம் |
| 8. | திட்ட முன் மொழிதல் | மிகவும் பழுதடைந்து உபயோகிக்க இயலாத நிலையில் உள்ள பொதுக்கழிப்பிடத்தை இடித்து விட்டு அவ்விடத்தில் புதியதாக பொதுக்கழிப்பிடம் கட்டும் பணி. |
| 9. | கட்டிடத்தை இடிக்க பரிந்துரை செய்தது | 170வது வார்டு மன்ற உறுப்பினர் |
| 10. | வார்டு குழு தீர்மான எண் மற்றும் நாள் | 13வது மண்டல வார்டு குழு தீர்மான எண். 403/2014, நாள்.17.12.2013 |

எனவே, மண்டலம்–13, வார்டு–170ல் நாகிரெட்டி தோட்டத்தில் மிகவும் பழுதடைந்து உபயோகிக்க இயலாத நிலையில் உள்ள பொதுக்கழிப்பிடத்தை இடிப்பதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“17.6.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தின் தீர்மான எண்.18/2014, நாள்.17.6,2014ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“19.06.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டத்தின் தீர்மான எண்.292/2014, நாள்.19.06.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**ம.அ.13.ந.க.எண்.சி2/5452/2014**

**முதன்மைச் செயலாளர் மற்றும் ஆணையர் அவர்களின் 13.06.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.341/2014 **பொருள் எண்.23**

**பொதுக்கழிப்பிடம் இடிக்க அனுமதி**

| வ. எண் | வார்டு.170 | மண்டலம்–13 |
|---|---|---|
| 1. | இடிக்கப்படவேண்டிய கட்டிடத்தின் விவரம் | மண்டலம்–13, வார்டு–170ல் அருளாயம்மன் பேட்டை 1வது தெருவில் மிகவும் பழுதடைந்து உபயோகிக்க இயலாத நிலையில் உள்ள பொதுக் கழிப்பிடம். |
| 2. | கட்டிடம் கட்டப்பட்ட துறை மற்றும் வருடம் | 1983ம் ஆண்டு கட்டப்பட்டது |
| 3. | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ரூ. 44,362.30 |
| 4. | கட்டிடம் இடிப்பதற்கான காரணம் | புதியதாக பொதுக்கழிப்பிடம் கட்டும் பணி. |
| 5. | கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக | தரைதளம் 127 சதுர மீ |
| 6. | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் பரப்பளவு | 1367.03 சதுர அடி |
| 7. | அந்த கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது | பொதுக்கழிப்பிடம் |
| 8. | திட்ட முன் மொழிதல் | மிகவும் பழுதடைந்து உபயோகிக்க இயலாத நிலையில் உள்ள பொதுக்கழிப்பிடத்தை இடித்து விட்டு அவ்விடத்தில் புதியதாக பொதுக்கழிப்பிடம் கட்டும் பணி. |
| 9. | கட்டிடத்தை இடிக்க பரிந்துரை செய்தது | 170வது வார்டு மன்ற உறுப்பினர் |
| 10. | வார்டு குழு தீர்மான எண் மற்றும் நாள் | 13வது மண்டல வார்டு குழு தீர்மான எண். 403/2014, நாள்.17.12.2013 |

எனவே, மண்டலம்–13, வார்டு–170ல் அருளாயம்மன்பேட்டை 1வது தெருவில் மிகவும் பழுதடைந்து உபயோகிக்க இயலாத நிலையில் உள்ள பொதுக்கழிப்பிடத்தை இடிப்பதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"17.6.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தின் தீர்மான எண்.19/2014, நாள்.17.6,2014ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"19.06.2014 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டத்தின் தீர்மான எண். 293/2014 நாள்.19.06.2014–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின்அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**இ.டி.பி.சி. எண் சி1/1448/2014**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 24.06.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.342/2014 **பொருள் எண்.24**

**இடிபி செல் – சென்னை மாநகராட்சியில் உள்ள அனைத்து கணினிகள் மற்றும் அதன் சம்மந்தப்பட்ட கருவிகளின்(வன்பொருள் மற்றும் மென் பொருள் உள்ளிட்டு) வசதி மேலாண்மை சேவை ஜூன் மாதம் 2014யுடன் முடிவு–பின் ஒரு வருட காலத்திற்கான வசதி மேலாண்மை சேவை ஒப்பந்தம் மேற்கொள்ள திறந்த ஒப்பங்கள் கோர –அனுமதி**

சென்னை மாநகராட்சியில் ரிப்பன் மாளிகை மற்றும் மூன்று வட்டார அலுவலகம், மண்டலம், கோட்டம், பகுதி அலுவலகம், மருத்துவமனை மற்றும் இதர இடங்களிலுள்ள அனைத்து கணினி மென்பொருள் மற்றும் வன் பொருள் பராமரிப்புக்காக Facility Management Services ஒருவருடத்திற்கு வழங்குவதற்காக ஒப்பந்தம் கோரப்பட்டு, அதில் கலந்து கொண்ட மூன்று நிறுவனங்களில் குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த M/s. CMS Info System Pvt Ltd, என்ற நிறுவனத்திற்கு 15.06.2013 முதல் 14.06.2014 வரை ஒரு வருட காலத்திற்கு ஆணை அளிக்கப்பட்டது. மேலும் இந்த ஒப்பந்த காலம் முடிவற்றபின் தேவைப்படின் ஒரு வருட காலத்திற்கு உரிய அனுமதியுடன் நீடிக்கவும் முடிவு செய்து இவை அனைத்திற்கும் மன்றத்தின் தீர்மான எண் 317/2013 நாள் 22.05.2013 ன்படி அனுமதியும் பெறப்பட்டது.

| SL. NO | DESCRIPITION | Ripon Buildings Assest QTY(A) | 3 Regions, Zones Assests | Total Assest QTY (C=A+B) | ELCOT RATE PER UNIT/ YEAR | FMS TOTAL AMOUNT ELCOT |
|---|---|---|---|---|---|---|
| **A** | To Provide comprehensive preventive and corrective maintenance of service for all multi-vendor hardware items like PCs,associated peripheral and other equipments at each location | | | | | |
| | 1.No.of Sever | 8 | 5 | 13 | 5700 | 74100 |
| | 2.No.of Laptop | 206 | 20 | 226 | 1700 | 384200 |
| | 3.No.of printers-Dot-matrix | 82 | 226 | 308 | 495 | 152460 |
| | 4.No.of printers-LaserJet | 416 | 623 | 1039 | 1600 | 1662400 |
| | 5.Pentium dual core/core 2 duo | 349 | 657 | 1006 | 740 | 744440 |
| | 6.No.of Line Printers | 4 | 2 | 6 | 4500 | 27000 |
| | 7.Plotters | 1 | 10 | 11 | 12000 | 132000 |
| | 8.No.of U.P.S. | | | | | |
| | i) 5.0 K.V.A. | 1 | 13 | 14 | 3000 | 42000 |
| | ii) 3.0 K.V.A. | 1 | 1 | 2 | 2500 | 5000 |
| | iii) 1.5. K.V.A. | 58 | | 58 | 1500 | 87000 |
| | iv) 1.0 K.V.A. | | 29 | 29 | 800 | 23200 |
| | v) 0.5 K.V.A. | | 7 | 7 | 300 | 2100 |
| | vi) 0.6 K.V.A. | 231 | 707 | 938 | 300 | 281400 |
| | 9.No.of Scanner | 17 | 13 | 30 | 500 | 15000 |
| | 10.No.of Router | 4 | 28 | 32 | 3900 | 124800 |
| | 11.No.of Switch | 61 | 27 | 88 | 800 | 70400 |
| | 12.No.of Modem | 7 | 26 | 33 | 500 | 16500 |
| | **Dot matrix printer head** | | | 0 | | 0 |
| | a) Repair / Recondition | 50 | 100 | 150 | 1400 | 210000 |
| | b)Replacement | 50 | 50 | 100 | 4700 | 470000 |
| **B** | 1.Network administration which includes<br>internal and external telecommunication<br>Management. | 3 | 3 | 6 | 240000 | 1440000 |
| | 2.Server management with online back-up | 2 | 0 | 2 | 300000 | 600000 |
| | 3.Os Management which will include server desktop / work place operations Management. | 1 | 0 | 1 | 240000 | 240000 |
| | 4.Database administration support | 1 | 0 | 1 | 300000 | 300000 |
| | 5.Application / Maintenance support and training which include generation of various MIS reports as per user requirements. | 2 | 0 | 2 | 300000 | 600000 |
| | 6.Help desk Management | 1 | 0 | 1 | 120000 | 120000 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 7.Project Leader | 1 | 0 | 1 | 288,000 | 288000 |
| | 8.Service Engineer (1 FOR SERVER AND 4 FOR DESKTOP) | 1 | 0 | 1 | 3,00,000 | 300000 |
| | | 4 | 18 | 22 | 180000 | 3960000 |
| | 9.Team Leader +Help Desk | 0 | 3 | 3 | 240000 | 720000 |
| C | Laying and fixing network cables including | | | | | |
| | cables including cable and PVC Pipe, duct, | | | | | |
| | clamps, etc, | | | | | |
| | (Rate is Quoted for 1M) | | | | | |
| | 2.CAT 6 CABLE | 3000 | 2000 | 5000 | 22.5 | 67500 |
| | 3.OFC CABLE | 3000 | 500 | 3500 | 75 | 225000 |
| D | 24 X 7 support for one year | | | | | |
| | **TOTAL(A+B+C+D)** | | | | | **13384500.00** |
| | service Tax 12.36% | | | | | 1654324.2 |
| | **GROSS TOTAL (in Figures)** | | | | | **15038824.2** |

இந்த ஒப்பந்த காலம் **14.06.2014** அன்றுடன் முடிவு பெறவுள்ளதால் Facility management serviceன் முக்கியத்துவம் கருதி புதிய ஒப்பந்தம் கோர முடிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் புதிய ஒப்பந்தம் அழைப்பு மற்றும் அதனை முடிவு செய்யும் நடவடிக்கைகள் முழுமையாக முடிவுற்றது குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளிக்கும் நிறுவனத்திற்கு ஆணை வழங்க சற்று காலம் தேவைப்படுவதால் தற்பொழுது பராமரிப்பு பணியினை மேற்கொள்ளும் நிறுவனமான M/s. CMS Info System Pvt Ltd க்கு **15.06.2014** முதல் **14.09.2014** வரை மூன்று மாதங்கள் நீடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சியில் உள்ள அனைத்து கணினிகள் மற்றும் இதர சாதனங்களின் வசதி மேலாண்மை சேவைக்கான தோராய மதிப்பிடு ELCOT நிறுவனத்தின் விலைவீதம் அடிப்படையில் ரூ. **1,60,00,000** என கணக்கிடப்பட்டுள்ளது.

புதிய ஒப்பந்தம் அழைப்பு மற்றும் அந்தப்பணிகள் இந்த நீடிப்பு காலத்திற்குள் முடிவுற்றால் உடனடியாக ரத்து செய்யப்பட்டு புதிய நிறுவனத்திற்கு ஆணை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகின்றது. இந்த பணிக்கான செலவினம் இடிபி செல்லின் **2014–2015** ஆண்டிற்கான நிதி ஒதுக்கீட்டின் கீழ் மேற்கொள்ளப்படும்.

1) சென்னை மாநகராட்சியில் உள்ள கணினிகள், பிரிண்டர், சர்வர், பிளாட்டர், வலையமைப்பு மற்றும் அதன் சம்மந்தப்பட்ட சாதனங்களின் (வன்பொருள் மற்றும் மென் பொருள்) தொடர்ச்சியான செயல்பாட்டுக்கு **14.09.2014** இருந்து ஒரு வருட காலத்திற்கு வசதி மேலாண்மை சேவை ரூ. **1,60,00,000** தோராய மதிப்பில் செய்யவும் அதற்கான திறந்த ஒப்பங்கள் கோரவும்.
2) புதிய ஒப்பந்தம் அழைப்பு மற்றும் அந்தப்பணிகள் இந்த நீடிப்பு காலத்திற்குள் முடிவுற்றால் உடனடியாக ரத்து செய்யப்பட்டு புதிய நிறுவனத்திற்கு ஆணை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகின்றது.
3) இப்பணிக்கான செலவினத்தை இடிபி செல்லின் **2014–2015** ஆண்டிற்கான நிதி ஒதுக்கீட்டின் கீழ் மேற்கொள்ளவும்.

எனவே, மேற்காணும் இனங்களுக்கு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தபுள்ளி சட்டம் **1998** பிரிவு **7(1)** & **(2)–**ன்படி படி நிலைக்குழு (பணிகள்)வின் மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் **19.06.2014** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **25.06.2014** அன்று தீர்மான எண்.**295/2014**ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் **20.06.2014** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **25.06.2014** அன்று தீர்மான எண். **300/2014**ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலமாக பெருபான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

<u>ம.நீ.வ.து.ந.க.எண்.பி5/1524/2014</u>

<u>முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 24.06.2014 நாளிட்ட குறிப்பு</u>

தீர்மான எண்.343/2014 பொருள் எண்.25

<u>நீர்வழிகால்வாய்களில் ஆக்கிரமித்துள்ள குடிசைவாசிகளுக்கு மறு குடியமைப்பு சம்பந்தமான நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு அனுமதி</u>

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ் (JNNURM) சென்னை மாநகராட்சியும் பொதுப்பணித்துறையும் சேர்ந்து சென்னையில் உள்ள நீர்வழிக்கால்வாய்களை முறையாக ஆழப்படுத்தி கால்வாயின் இருபுறமும் கான்கிரீட் வெள்ளத்தடுப்புச்சுவர் அமைக்கும் பணி மற்றும் மேம்படுத்தும் பணிக்காக ரூ.1447 கோடி திட்டமிடப்பட்டு பணிமேற்கொள்ளப்பட்டு வருகிறது. பணிகள் நடைப்பெற்று வரும்பொழுது கால்வாய்களில் இருபுறமுள்ள ஆக்கிரமிப்புகளால் பணிகள் மேற்கொள்வதில் தடை ஏற்பட்டது.

எனவே இப்பணிகளை தடையில்லாமல் மேற்கொள்ளுவதற்கு ஏதுவாக கால்வாய் கரையோரமுள்ள குடிசைகள் அகற்றப்பட்டு குடிசைவாசிகளை தமிழ்நாடு குடிசைமாற்றுவாரிய அடுக்கு மாடி குடியிருப்புகளில் குடியமர்த்த ஒப்புதல் பெறப்பட்டது. இதன் தொடர்ச்சியாக மண்டலம்–4,6,9,10 மற்றும் 13ல் உள்ள கொடுங்கையூர் எழில்நகர், வியாயசர்பாடி இந்திரா நகர், ஏகாங்கிபுரம், மாம்பலம் கால்வாய் மற்றும் ஜாபர்கான்பேட்டை கால்வாய் ஆகிய கால்வாய் பகுதிகளில் குடியிருக்கும் தோராயமாக 2962 குடும்பங்கள் பயோமெட்ரிக் முறையில் கணக்கிடப்பட்டு அவற்றில் முதற்கட்டமாக 1563 பயனாளிகளுக்கு ஒக்கியம் துரைப்பாக்கத்தில் JNNURM திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட அடுக்குமாடி குடியிருப்புகளில் வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம் ஒவ்வொரு ஒதுக்கீடு தாரர்களிடமும் இருந்து மாத தவணையாக ரூ.500/–வீதம் 5மாதம் முன்வைப்புத்தொகை வசூலித்து அத்தொகையினை வாரியத்தலைவர் பெயரில் காசோலை மூலம் செலுத்தும் பட்சத்தில் ஒதுக்கீடுகள் வழங்கப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் பொருட்டு தெரிவிப்பது யாதெனில், கால்வாய் கரை ஓரம் உள்ள மக்கள் அடிதட்டு வகுப்பை சார்ந்தவர்கள் என்பதனால் அவர்களால் குடிசைமாற்று வாரியம் குறிப்பிட்ட தொகையை செலுத்த இயலாததாலும், மேலும் மறுகுடியமைப்பு மேற்கொள்ள காலதாமதம் ஏற்படும் பட்சத்தில் JNNURM திட்டத்தில் கீழ் மேற்கொள்ளப்படும் கால்வாய் பணிகளில் தொய்வு ஏற்படும் என்பதனை கருத்தில் கொண்டு ஒவ்வொரு பயனாளிகளும் தமிழ்நாடு குடிசைமாற்று வாரியத்திற்கு செலுத்த வேண்டிய முன்பண தொகையான ரூ.74,05,000/– (2962X2500=74,05000/–) சென்னை மாநகராட்சி மூலம் செலுத்தி பின்னர் அதனை தமிழ்நாடு அரசிடமிருந்து திரும்ப பெற வேண்டி உத்தேசிக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி எல்லையிருந்து வெளியேற்றப்படவுள்ள மேற்குறிப்பிட்ட 1563 குடும்பங்களுக்கு ஒக்கியம் துரைப்பாக்கத்தில் குடியிருப்புகள் ஒப்படைக்கும் பணி யாதொரு தங்குதடையின்றி சுமூகமாக நடைபெற அவர்களை அந்தந்த மண்டல அலுவலர்கள் வாகங்கள் அமர்த்தி எவ்வித பிரச்சனையும் இன்றி ஒக்கியம் துரைப்பாக்கம் திட்டப்பகுதிக்கு அழைத்துச்செல்ல திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும் இவ்வாறு வெளியேற்றப்படவுள்ள 1563 குடும்பதாரர்களுக்கும் ஒரு நாளைக்கு மூன்று வேளைவீதம் மூன்று நாட்களுக்கு உணவு அளிக்கும் பணியை சுகாதார துறைமூலம் மேற்கொள்ளத்திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும் CMRL பணிக்காக மேற்கொள்ளப்படும் மறு குடியமைப்புதாரர்களுக்கு ஒரு குடும்பத்திற்கு ரூ.20,000/–வீதம் பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு ஊக்கத்தொகையாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்தினை சென்னை மாநகராட்சி மூலம் மேற்கொள்ளப்படும் மறு குடியமைப்புதாரர்களுக்கும் நடைமுறைப்படுத்துவதன் மூலம் மறு குடியமைப்பு செய்வதில் ஏற்படும் சிரமங்கள் பிரச்சனைகள் தவிர்க்கப்படுவதுடன் மனித உரிமைகள் காக்கப்படும்.

இவ்வாறு மேற்குறிப்பிட்ட வகையில் குடிசைவாசிகளை மறு குடியமைப்பு செய்யும் பட்சத்தில் JNNURM கால்வாய் திட்டப்பணிகள் காலதாமதமின்றி முடிக்கப்படும். மேலும் கட்டுமான விலையேற்றத்தினால் (Price excalation) ஏற்படும் திட்ட மதிப்பீடுகள் உயர்வு தடுக்கப்பட்டு திட்டமிட்ட மதிப்பீடுகளின்படி பணிகள் முடிவடைவதுடன், சென்னை புறநகர் பகுதியில் உள்ள நீர்வழிகால்வாய்கள் ஆக்கிரமிப்பு அகற்றப்பட்ட தடையற்ற பொளிவுப்பெற்ற நீர்வழிதடங்களாக அமைவதுடன் மழைகாலங்களில் வெள்ளப்பெருக்கினால் ஏற்படும் உயிர் சேதங்கள் முழுமையாக அகற்றப்பட்டு பாதுகாப்பான, சுகாதாரமான நீர்வழிதடங்கள் அமையபெரும்.

எனவே, மறு குடியமைப்பு செய்வதால் ஏற்படும் மேற்குறிப்பிட்ட நன்மைகளை ஒப்பிடும் பட்சத்தில் மறுகுடியமைப்புக்காக நாம் செலவிடும் தொகை மிககுறைவு என்பதனால் கீழ்கண்ட இனங்களுக்கு மாமன்ற ஒப்புதல் வேண்டியும் மேலும் இக்கொள்கைகளையே இனி வரும் காலங்களில் வழிகாட்டுதல்களாக பின்பற்றபட மாமன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

எனவே,

1. மறுகுடியமைப்பு பயனாளிகளுக்காக தமிழ்நாடு குடிசைமாற்று வாரியத்திற்கு செலுத்த வேண்டிய முன்வைப்பு தொகை (EMD) ரூ.74,05000/- (2962 குடிசைகளுக்கு தலா ரூ.**2500/–**வீதம்) சென்னை மாநகரட்சி மூலம் செலுத்தவும் அந்த தொகை பின்னர் தமிழக அரசிடமிருந்து சென்னை மாநகராட்சி பெற வேண்டியும்,
2. குடிசைவாசிகள் தங்கள் உடமைகளை எடுத்துச்செல்ல வசதியாக தேவையான வாகன வசதிகளை சம்மந்தப்பட்ட மண்டலங்கள் மூலமாக மேற்கொள்ளவும்,
3. குடிசைவாசிகள் மறு குடியமர்த்தியவுடனே, முதல் **3** நாட்களுக்கு **3** வேளைவீதம் உணவு வழங்க சம்மந்தப்பட்ட மண்டல சுகாதார அலுவலர் மூலமாக மேற்கொள்ளவும்,
4. மறுகுடியமைப்புதாரர்களின் நலன்கருதி பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு சிறப்பு திட்டத்தின் மூலம் இடமாற்று பயனுட்டுத்தொகையாக (Shifting Allowance) தலா ரூ.20.000/- அவரவருக்கான வங்கி கணக்குகளில் தமிழ்நாடு குடிசைமாற்று வாரியத்தின் மூலம் துவங்கப்படும் வங்கி கணக்குகளில் செலுத்தவும்,

மேற்கண்ட **1** முதல் **4** வரையிலான இனங்களுக்கு நிலைக்குழுக்கள் (பணிகள்) மற்றும் (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் **19.06.2014** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **25.06.2014** அன்று தீர்மான எண். **298/2014**ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் **20.06.2014** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **25.06.2014** அன்று தீர்மான எண்.**303/2014**ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலமாக பெருபான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.''‘

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**சா(ம)பாலங்கள் து.ந.க.எண்.பி1/1601/2014**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 24.06.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.344/2014 **பொருள் எண்.26**

**சாலைகளைஅகலப்படுத்துதல் – போக்குவரத்து நெரிசலுக்கு தீர்வு காணும் நோக்கில் சென்னை மாநகரின் எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள அவசியமான மற்றும் பிரதான சாலைகளை அகலப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள – அனுமதி**

சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலுக்கு தீர்வு காணும் வகையில் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் 2–வது முழுமைத் திட்டத்தில் (Second Master Plan) தெரிவு செய்யப்பட்டுள்ள பிரதான சாலைகளையும் மற்றும் மாநகராட்சியால் அவசியம் மற்றும் சாத்தியக்கூறுகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்படும் இதர சாலைகளையும் அகலப்படுத்துவதற்கான முயற்சிகளை சென்னை மாநகராட்சி மேற்கொண்டுவருகிறது.

மன்றத்தீர்மானங்களின் அடிப்படையில் கீழ்க்கண்ட சாலைகள் தெரிவு செய்யப்பட்டு, முதற்கட்ட நடவடிக்கையான நில அளவை அட்டவணை (Land Plan Schedule) தயாரிக்கும் பணியை தகுதி வாய்ந்த தனியார் நிறுவனங்கள் (Private Consultancy) மூலமாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

| வ. எண் | மண்டலம் / வார்டு எண் | சாலையின் பெயர் | நீளம் (தோராயமாக) மீட்டரில் | தற்போதைய அகலம் (சராசரி) (மீட்டரில்) | உத்தேசிக்கும் அகலம் (மீட்டரில்) |
|---|---|---|---|---|---|
| 1 | 6 / 68, 69, 66 மற்றும் 64 | பேப்பர் மில்ஸ் சாலை மற்றும் செம்பியம் ரெட்ஹில்ஸ் சாலை | 4015 | 12–15 | 18.00 |
| 2 | 10 / 127 மற்றும் 128 | காளியம்மன் கோயில் தெரு | 3100 | 5.90–27 | 1140 மீட்டர் நீளத்திற்கு 27 மீட்டர் மற்றும் 1950 மீட்டர் நீளத்திற்கு 24 மீட்டர் |
| 3 | 8 /106 மற்றும் 109 | நெல்சன் மாணிக்கம் சாலை | 1526 | 18–20 | 24.00 |
| 4 | 10 / 128, 129, 130, 131, 133 மற்றும் 134 | என்.எஸ் கே சாலை (ஆற்காடு சாலை) | 4770 | 14–30.50 | 30.50 |
| 5 | 9 / 125 மற்றும் 126 | சாந்தோம் நெடுஞ்சாலை (காரணீஸ்வரம் பகோடா சாலை முதல் டி.ஜி.எஸ் தினகரன் சாலை சந்திப்பு வரை) | 1630 | 18.00 | 24.00 |
| 6 | 13 / 171 மற்றும் 172 | சர்தார் பட்டேல் சாலை (அண்ணா சாலை முதல் மத்திய கைலாஷ் வரை) | 3200 | 24.00 | 30.50 |
| 7 | 13 / 175 மற்றும் 180 | டாக்டர் முத்துலட்சுமி சாலை (எல்.பி.ரோடு) மற்றும் கல்கி கிருஷ்ணமூர்த்தி சாலை (சர்தார் பட்டேல் சாலை முதல் பழைய மகாபலிபுரம் சாலை வரை) | 2860 | 24.00 | 30.50 |
| 8 | 140 (ம) 142 | கோடம்பாக்கம் சாலை, ஜெயராமன் தெரு மற்றும் மசூதி தெரு – மேற்கு சைதாப்பேட்டை (மசூதி தெரு முதல் மேற்கு ஜோன்ஸ் தெரு வரை) | 1420 | 9 – 11 | 18.00 |

பட்டாளம் பொது மக்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் திரு.V.நீலகண்டன், திரு.வி.க சட்டமன்ற தொகுதி, அவர்களின் கோரிக்கைகளின் மீது வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் பரிந்துரை செய்துள்ள பெரம்பூர் பேரக்ஸ் சாலை மற்றும் ஸ்ட்ரஹான்ஸ் சாலைகளின் சராசரி அகலம் முறையே 12மீட்டர் மற்றும் 15மீட்டர் அகலம் ஆகும். இவற்றில் ஸ்ட்ரஹான்ஸ் சாலையில், பெரம்பூர் பேரக்ஸ் சாலை

சந்திப்பிலிருந்து அங்காளம்மன் கோயில் தெரு சந்திப்பு வரையில் உள்ள சாலைப் பகுதியின் அகலம் 10.50 மீட்டர் ஆகும். இச்சாலைப் பகுதியின் அகலம் மிகவும் குறைவாக இருப்பதால் இப்பகுதியில் போக்குவரத்து ஒரு வழி பாதையாக பயன்பாட்டில் உள்ளது. இச்சாலை பகுதியில் அமைந்துள்ள சாலையோர பூங்காவை சாலை விரிவாக்கம் செய்ய பயன்படுத்தலாம், மேலும் தனியருக்கு சொந்தமான நிலப்பகுதியை கையகப்படுத்தி சாலையை அகலப்படுத்தலாம் என்ற கருத்துக்கள் பணிவுடன் சமர்ப்பிக்கப்படுகிறது.

மேலும், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் 2வது முழுமைத் திட்டத்தின்படி பெரம்பூர் பேரக்ஸ் சாலை மற்றும் ஸ்டரஹான்ஸ் சாலை இவைகளை 24.00மீட்டர் அகலத்திற்கு விரிவுபடுத்த உத்தேசம் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. மேலும், போக்குவரத்து நெரிசல் அதிகமாக உள்ள இரண்டு சாலைகளையும் அகலப்படுத்துதல் மிகவும் அவசியமானதாகும்.

மேற்கூறிப்பிட்டுள்ள கருத்துக்களின் அடிப்படையில் விரிவாக்கம் செய்ய உத்தேசிக்கப்படும் மேற்குறிப்பிட்டுள்ள சாலைகளின் விவரங்கள் பின்வருமாறு

| வ. எண் | மண்டலம் / வார்டு எண் | சாலையின் பெயர் | நீளம் (தோராயமாக) மீட்டரில் | தற்போதைய அகலம் (சராசரி) (மீட்டரில்) | உத்தேசிக்கும் அகலம் (மீட்டரில்) |
|---|---|---|---|---|---|
| 1 | 5 / 58 மற்றும் 6 / 76 | பெரம்பூர் பேரக்ஸ் சாலை (புரசைவாக்கம் நெடுஞ்சாலை சந்திப்பு முதல் புளியாந்தோப்பு நெடுஞ்சாலை சந்திப்பு வரை) | 1420 | 12.00 | 24.00 |
| 2 | 6 / 76 மற்றும் 73 | ஸ்ட்ராஹான்ஸ் சாலை (அங்காளம்மன் கோயில் தெரு சந்திப்பு முதல் பிரிக்கிலின் சாலை சந்திப்பு வரை) | 1250 | 10.50–17.00 | 24.00 |

1. பெரம்பூர் பேரக்ஸ் சாலை (புரசைவாக்கம் நெடுஞ்சாலை சந்திப்பு முதல் புளியாந்தோப்பு நெடுஞ்சாலை சந்திப்பு வரை) மற்றும் ஸ்டரஹான்ஸ் சாலை (அங்காளம்மன் கோயில் தெரு சந்திப்பு முதல் பிரிக்கிலின் சாலை சந்திப்பு வரை) 24.00 மீட்டர் அகலத்திற்கு அகலப்படுத்துதல்
2. இச்சாலைகளை அகலப்படுத்தும் உத்தேசம் குறித்து சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கும் மற்றும் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்கும் தகவல் தெரிவிக்கவும்
3. கட்டுமான உரிமை வசதி அளித்தல் (Transfer of Development Rights) மூலமாக நிலத்தைக் கையகப்படுத்த சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மற்றும் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ஆகிய துறைகளுடன் ஒருங்கிணைந்து இப்பணியினை மேற்கொள்ளவும்,
4. இப்பணியில் முதற்கட்டமாக மேற்கொள்ள வேண்டிய பணியான நில அளவை அட்டவணையை (Land Plan Schedule ) தயாரிக்கும் பணியை தனியார் நிறுவனம் மூலமாக மேற்கொள்ளவும் மற்றும் இதற்கான செலவீனத்தை சென்னை மாநகராட்சி முலதன நிதியிலிருந்து பெறவும்,

எனவே, மேற்குறிப்பிட்டுள்ள இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

‘‘ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 19.06.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 25.06.2014 அன்று தீர்மான எண்.297/2014ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 20.06.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 25.06.2014 அன்று தீர்மான எண். 302/2014ன் படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலமாக பெருபான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.’’

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**ம.அ.6.ந.க.எண்.இ3/ 8996 /2013**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் 25–06–2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.345/2014 **பொருள் எண்.27**

**ஒப்பம் – 2013–14 – மண்டலம்–6, பகுதி–15 மற்றும் 16, வார்டு–66 மற்றும் 67, தொகுப்பு–5, தார்சாலை அமைக்கும் பணி – ஒப்பம் பெறப்பட்டது – ஒப்பம் திருவாளர்கள். சண்முகவேல் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களுக்கு ஒப்பம் வழங்க – அனுமதி**

01. பணியின் பெயர்:– **தொகுப்பு–5 தார்சாலை அமைக்கும் பணி**

| வ. எண் | வார்டு எண் | சாலையின் பெயர் | பணியின் விவரம் | நீளம் (மீ) | பரப்பளவு | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|---|---|---|---|
| 1. | 66 மற்றும் 67 | தொகுப்பு 5 – மண்டலம்–6, பகுதி–15, 16 வார்டு–66,67ல் உள்ள 32 சாலைகள் / தெருக்கள் | தார்சாலை அமைக்கும் பணி | 4891.00 | 27631.00 | 3,52,50,000/– |
| | | | மொத்தம் | 4891.00 | 27631.00 | 3,52,50,000/– |

02. மதிப்பீட்டின் எண்.குழுவின்/ மன்றத்தின் ஒப்புதல் தீர்மான எண்/ நாள் : 1) வார்டு குழுவின் தீர்மான எண். நாள்.
2) ஒப்ப குழுமத்தின் ஒப்புதல் நாள் தீர்மான எண்.

03. திட்ட குறியீட்டு எண் : பின்னர் பெறப்படும்

04. ஒப்புதல் பெற்ற மதிப்பீட்டின் தொகை அலுவலக விலைப்பட்டியல் எடுத்துக் கொள்ளப்பட்ட ஆண்டு : 2013 – 2014

| | | |
|---|---|---|
| அ) | பணியின் செலவினம் | 3,03,11,427.31 |
| ஆ) | மேற்பார்வை செலவு | 30,31,142.73 |
| இ) | சில்லரை மேற்பார்வை செலவு | 7,57,785.68 |
| ஈ) | தரக்கட்டுப்பாடு செலவு | 3,03,114.27 |
| உ) | மற்ற எதிர்பாரா செலவு | 7,55,595.73 |
| ஊ) | தொழிலாளர் நல நிதி | 90,934.28 |
| | மொத்தம் | 3,52,50,000.00 |

05. எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் : சென்னை மாநகராட்சி செய்தி மலர் நாள் 19.12.2013
இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழ் நாள் 20.12.2013
மக்கள் குரல் நாளிதழ் நாள் 20.12.2013

06. ஒப்ப படிவம் பெற குறிக்கப்பட்ட நாள் : 12.02.2014

07. ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்வதற்கான கடைசி நாள் : 14.02.2014

08. ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து ஒப்பம் பெறுவதற்கு குறைந்தது 15 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா இல்லை எனில் உரிய அலுவலரின் ஒப்புதல் பெற்ற விவரம் குறிப்பிடவும். : பெறப்பட்டது.

09. எத்தனை ஒப்பங்கள் விற்பனை செய்யப்பட்டன ? : பொருந்தாது

10. எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன ? : 1 (கணினி மூலம் பதிவிறக்கம்)

11. ஒப்பத்தில் பங்கேற்றவர் விவரம் :

| வ. எண் | ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர் (திரு. / திருவாளர்கள்) | தொழில்நுட்ப ஒப்பத்தில் தேர்ச்சி பெற்றுள்ளனரா ஆம் (அ) இல்லை |
|---|---|---|
| 1. | **திருவாளர்கள். சண்முகவேல் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்** | ஆம் |

குறிப்பு : Two Cover System என்பதால் தொழில் நுட்ப ஒப்பத்தில் **திருவாளர்கள். சண்முகவேல் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்** ஒப்பந்ததாரர் மட்டுமே தேர்ச்சி பெற்றுள்ளார்.

| வ. எண் | ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர் (திரு. / திருவாளர்கள்) | பணியின் அலுவலக மதிப்பு ரூ. | ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகை ரூ. | 2013–14ம் ஆண்டு விலையோடு ஒப்பிடுகையில் ஒப்பந்ததாரரின் % அதிகம் / குறைவு |
|---|---|---|---|---|
| 1. | **திருவாளர்கள். சண்முகவேல் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்** | 3,03,11,427.31 | 3,13,10,598.80 | (+) 3.29 % அதிகம் |

குறிப்பு: **திருவாளர்கள். சண்முகவேல் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்** ஒப்பந்ததாரர் குறைந்த விலைபுள்ளியாக (+) 3.29 % அதிகம் அளித்துள்ளார்.

12. குறைந்த ஒப்பம் அளித்தவருடன் பேச்சு வார்த்தை தேவையா ? ஆம் எனில் நடத்தப்பட்ட நாள் : ஆம், 26.05.2014 அன்று மேலும் விலை குறைப்பு அளிக்க இயலாது என கடிதம் அளித்துள்ளார்.

13. பேச்சுவார்த்தைக்குப்பின் ஒப்பத் தொகை: ஒப்ப சதவீதம் ரூ.3,13,10,598.80 (+) 3.29% அதிகம்

14. குறைந்த ஒப்ப சதவீதம் அளித்த ஒப்பந்ததாரரின் பதவின் நிலை பதிவு நாள் : பே.சா.து 1ம் வகுப்பு நாள். 28.04.2010<br>க.து. 1ம் வகுப்பு நாள்.10.05.2010<br>பொது பணித் துறை 1ம் வகுப்பு நாள்.25.4.12

15. கூடுதல் பிணை வைப்புத் தொகை செலுத்தப்பட்ட விவரம் : –<br>அ) கேட்பு காசோலை எண்/நாள் வங்கியின் பெயர்

16. பணிக்கான நிதி ஆதாரம் உள்ளதா ? : ஆம், மூலதன நிதி<br>அ) வரவு செலவுத்திட்ட தலைப்பு

17. ஒப்பந்தப்புள்ளி செல்லத்தக்க காலம் 12.08.2014 வரை கால நீட்டிப்பு கடிதம் பெறப்பட்டது.

மேற்குறிப்பிட்ட பணிக்காக பெறப்பட்ட ஒற்றை ஒப்பத்தில் பேச்சுவார்த்தைக்குப்பின் **திருவாளர்கள். சண்முகவேல் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்** அவர்கள் அளித்த ஒப்ப விழுக்காடு 2013–14 ஆம் ஆண்டின் அலுவலக விலையைவிட (+) 3.29% அதிகம் ஆகும். இதன்படி அவர் அளித்த ஒப்பத் தொகை ரூ.3,13,10,598.80 ஆகும்.

மன்றத் தீர்மானத்தின்படி (தீர்மான எண்.512/2007 நாள்.25.09.07)

1. அடிப்படை இனங்கள் தொழிலாளர்களின் ஊதியம் மற்றும் பொருட்களின் சந்தை விலைகள் கொண்டு சந்தை விலை விவரப்பட்டியல் தயாரிப்பதற்கும் (Source-Builders Association of India – Southern Centre) இந்து நாளிதழில் வெளியிடப்பட்டது.
2. அவ்வாறு, தயாரிக்கப்பட்ட சந்தை விவரப்பட்டியல் கொண்டு, ஒப்பந்தங்கள் பெறப்படும் பொழுது, ஒப்பீடு (Comparison) செய்து அதற்கேற்றவாறு ஒப்பந்தங்களைக் கையாளவும்,
3. மேலும், சந்தை விலைகளின் மாற்றங்கள் நிகழும் பொழுது, அதற்கேற்றவாறு சந்தை விலை விவரப்பட்டியல் மாற்றியமைத்து ஒப்பீடு (Comparison) செய்து ஒப்பந்தங்களைக் கையாளவும் மன்றம் அனுமதி அளித்துள்ளது.

எனவே, இப்பணிகளின் தன்மையை (Nature of Work) கருத்தில் கொண்டு சந்தை விலைப்படி கணக்கிட்டு ஒப்பிட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| பணியின் அலுவலக மதிப்பு | : ரூ.3,03,11,427.31 |
| பணியின் சந்தை விலைப்படி மதிப்பு | : ரூ.3,31,59,832.80 |
| ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகை | : ரூ.3,13,10,598.80 |
| ஒப்ப சதவீதம் 2013–14 அலுவலக மதிப்பு | : (+)3.29% அதிகம் |
| சந்தை விலைப்படி ஒப்பந்ததாரர் ஒப்ப சதவீதம் மற்றும் நாள் | : (–) 5.57% குறைவு 12.02.2014 |
| ஒப்பங்கள் பெறப்பட்ட நாள் | : 14.02.2014 |
| ஒப்பீட்டுத் தாள் பக்கம் | நடப்புக் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது. |

எனவே, இப்பணிக்கான ஒப்பத்திற்கு குறைந்த விலைப்புள்ளி அளித்த**திருவாளர்கள். சண்முகவேல் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்** அவர்களின் ஒப்ப தொகை ரூ.3,13,10,598.80ஐ பேச்சுவார்த்தைக்குப்பின் விலை குறைப்பு செய்து விலை குறைப்பு செய்ய இயலாது என கடிதம் அளித்துள்ளார். எனவே பணியின் அவரசம் மற்றும் அவசியம் கருதி ரூ.3,13,10,598.80, 2013–2014ஆம் ஆண்டின் அலுவலக விலையைவிட (+)3.29% அதிகமாகவும், சந்தை விலையோடு ஒப்பிடுகையில் (–) 5.57% குறைவு ஆகும்.

கீழ்காணும் விவரங்கள் மண்டல அலுவலர்–6 அவர்களால் ஒப்ப குழுமத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

1. இந்த ஒப்பந்தப்புள்ளியானது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர் கலந்து கொண்ட ஒப்பந்தப்புள்ளி ஆகும். குறைந்த ஒப்பந்ததாரரான **திருவாளர்கள். சண்முகவேல் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்** அவர்களின் ஒப்பத்தொகை ரூ.**3,13,10,598.80** ஆகும். குறைந்த பணிக்காலமான **6** மாதங்கள் மற்றும் சந்தை நிலவரத்தை கருத்தில் கொண்டால் குறைந்த ஒப்பந்ததாரர் குறிப்பிட்டுள்ள ஒப்பந்ததொகையானது ஏற்றுக்கொள்ள தக்க நிலையில் உள்ளது.
2. இவ்வொப்பத் தொகையானது **2013–14** ஆம் ஆண்டு விலை விவரப்படியான அலுவலக மதிப்பீட்டு தொகையைவிட (+)**3.29**% விழுக்காடு அதிகமாகும். சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் (–)**5.57**% குறைவு ஆகும்.

மேற்குறிப்பிட்ட காரணங்களை கருத்தில் கொண்டு குறைந்த ஒப்பந்ததாரரான **திருவாளர்கள். சண்முகவேல் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்** அவர்களுக்கு **2013–14**ஆம் ஆண்டு விலை விவரப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (+) **3.29**% அதிகமான ஒப்பத்தொகை ரூ.**3,13,10,598.80**க்கு பணியை வழங்க ஒப்பக்குழும கூட்டத்தின் பரிந்துரை வேண்டி சமர்ப்பிக்கப்பட்டது.

ஒப்ப குழுமம் கீழ்க்கண்ட விவரங்களை விரிவாக விவாதித்தது.

1. இந்த ஒப்பந்தப்புள்ளியானது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர் கலந்து கொண்ட ஒப்பந்தப்புள்ளி ஆகும். குறைந்த ஒப்பந்ததாரரான **திருவாளர்கள். சண்முகவேல் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்** அவர்களின் ஒப்பத்தொகை ரூ.**3,13,10,598.80** ஆகும். குறைந்த பணிக்காலமான **6** மாதங்கள் மற்றும் சந்தை நிலவரத்தை கருத்தில் கொண்டால் குறைந்த ஒப்பந்ததாரர் குறிப்பிட்டுள்ள ஒப்பந்ததொகையானது ஏற்றுக்கொள்ள தக்க நிலையில் உள்ளது.
2. பணிகள் முன்னேற்றம் கருதி ஒப்பம் திறக்கப்படும் வாரத்தில் வெளியிடப்பட்ட அடிப்படை பொருட்கள் மற்றும் தொழிலாளர்களின் ஊதியம் ஆகியவற்றிற்கான விலை விவரங்களின் அடிப்படையில் பணிகளுக்கான மதிப்பீட்டு தொகை மற்றும் துறை விலை விவர அடிப்படையிலான மதிப்பீட்டு தொகை ஆகிய இரண்டினையும் ஒப்பிட்டு, ஏற்படும் வித்தியாச சதவீகத்தில் பணிகள் வழங்கலாம் என **17.08.2013** நாளிட்ட தீர்மான எண்.**512/2007**ன்படி மன்றம் அனுமதி அளித்துள்ளது
3. இவ்வொப்பத் தொகையானது **2013–14**ஆம் ஆண்டு விலை விவரப்படியான அலுவலக மதிப்பீட்டு தொகையைவிட (+) **3.29** % விழுக்காடு அதிகமாகும். சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் (–) **5.57** % குறைவு ஆகும்.

மேலும் இவ்வொப்பந்தமானது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர் பங்கேற்ற ஒப்பந்தப்புள்ளி என்பதாலும், விலை குறைப்பு பேச்சு வார்த்தைக்கு பின் குறைந்த ஒப்பந்ததாரரான **திருவாளர்கள். சண்முகவேல் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்** அவர்கள் அளித்துள்ள விலைப்புள்ளியான ரூ.**3,42,79,068.00**, **2013–14**ஆம் ஆண்டு விலைவிவரப்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகையைவிட (+) **3.29**% அதிகம் மற்றும் சந்தைவிலையைவிட (–) **5.57** % குறைவு உள்ளது, ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் உள்ளதாலும் ஒப்பக்குழுமம் இதனை கவனமாக ஆராய்ந்து பணியினை காலம் தாழ்த்தாமல் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ள வேண்டியிருப்பதையும் கருத்தில் கொண்டு சிப்பம்–5க்கு குறைந்த ஒப்பத்ததாரரான **திருவாளர்கள். சண்முகவேல் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்** அவர்கள் அளித்துள்ள ஒப்பத்தொகையான ரூ. **3,13,10,598.80**க்கு பணியினை வழங்க ஒப்பக்குழுமம் பரிந்துரை செய்துள்ளது.

எனவே, இப்பணிக்கான ஒப்பத்தினை **திருவாளர்கள். சண்முகவேல் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்** அவர்களுக்கு **2013–14**ஆம் ஆண்டு விலை விவரப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (+) **3.29** % அதிகமான ஒப்பத்தொகை ரூ. **3,13,10,598.80**க்கு பணியை வழங்க ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் **1998** பிரிவு **7(1)** மற்றும் **7(2)**ன்படி, நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் **19.06.2014** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **25.06.2014** அன்று தீர்மான எண். **299/2014**ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

> ‘‘ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் **20.06.2014** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **25.06.2014** அன்று தீர்மான எண். **304/2014**ன் படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலமாக பெருபான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.’’

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**ம.அ.8.ந.க.எண். சி1/4748/2014**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் 25–06–2013 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.346/2014 பொருள் எண்.28

**சென்னை மாநகராட்சி – மண்டலம் – 8 – பகுதி 21, 22, 23 – வார்டுகள் 94 முதல் 108 வரை – துப்புரவு பணி – தற்போது பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் கூடுதலாக தேவைப்படும் பணியாளர்கள் – விவரம் சமர்ப்பித்தல் – கூடுதல் பணியாளர்கட்கு ஏற்கனவே கோரப்பட்டு வழங்கப்பட்டட ஒப்பம் 30.06.2014 உடன் முடிவடைவதால் – 01.07.2014 முதல் 30.06.2015 வரை சுவர்ணஜெயந்தி மூலமாக பணியாட்களை அமர்த்த அனுமதி**

சென்னை மாநகராட்சிக்குட்பட்ட அண்ணாநகர் மண்டலம் (மண்டலம்–8) 415.22 சதுர .கி.மீ பரப்பளவுள்ள 15 வார்டுகளை உள்ளடக்கிய பகுதியாகும். இந்த மண்டலத்தில் 54 எண்ணிக்கையிலான பேருந்து சாலைகளும் மற்றும் 2378 எண்ணிக்கையில் உட்புற சாலைகளும் சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. எனவே இம்மண்டலத்தின் மக்கள் தொகை 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின் படி 643895 இருப்பினும் முக்கிய பிரமுகர்கள் அடங்கிய பகுதியாக இம்மண்டலம் விளங்குவதால் நாளுக்கு நாள் இம்மண்டலத்தில் மக்கட் தொகை வளர்ச்சி அடைந்து வருகிறது.

மண்டலம் – 8 (அண்ணாநகர்) பகுதிகளில் 465 மெ.டன் குப்பைகள் தினமும் சேகரிக்கப்படுகிறது. சென்னை மாநகராட்சி மூலம் 15 வார்டுகள் (வார்டு 94 முதல் 108 வரை) துப்புரவு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது . மேலும் இப்பணியினை திறம்பட செய்ய வேண்டி ஒரே நாளில் அனைத்து வார்டுகளிலும் சென்னை மாநகராட்சியின் பணியாளர்களால் இப்பணியினை செய்து விட முடியாது என்ற நிலையில் நிரந்திர பணியாளர்களுடன் மேலும் தினக்கூலி பணியாளர் மூலம் துப்புரவு பணியினை மேற்கொள்ள வேண்டியுள்ளது. ஏனவே தற்போது பகுதி 21, 22, 23க்கு (வார்டுகள் 94 முதல் 108 வரை) கீழ்க்கண்ட விவரங்களின் அடிப்படையில் பணிகளை மேற்கொள்ள பணியாளர்கள் தேவை பின்வருமாறு கணக்கிடப்பட்டுள்ளது.

தற்போது உள்ள பணியாளர்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லாத காரணத்தால் இன்றைய நிலைகளுக்கு ஏற்ப, தேவைகளை கண்டறிய நடைபெற்ற ஆய்வு கூட்டத்தின்படி படிவம் 1ல் குறிப்பிள்ளவாறு

1) மறு ஆய்வின்படி மண்டலம் -8க் உட்பட்ட பகுதி 21, 22, 23க்கு தேவைப்படும் மொத்த பணியாளர்களின் எண்ணிக்கை – 2192

2) தற்போது பகுதி 21, 22, 23ல் உள்ள நிரந்திர பணியாளர்களின் எண்ணிக்கை – 1956

3) மறு ஆய்வின் படி பகுதி 21, 22, 23க்கு தேவைப்படும் பணியாளர்களின் எண்ணிக்கை – 236

மேலும் மண்டலம் - 8ல் இரவு துப்புரவு பணி 8 காம்பாக்டர் லாரி மூலமாக சில முக்கிய பேரூந்து சாலைகளும் மார்கெட் பகுதிகளிலும் இரவு துப்புரவு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்காக 170 துப்புரவு பணியாளர்கள் ஒப்பந்ததாரர் மூலம் துப்புரவு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணி தொடர்ந்து நடைபெற்று வருவதற்கு தேவைப்படும் 170 துப்புரவு பணியாளர்கள் சுவர்ணஜெயந்தி மூலமாக தினசரி கூலி அடிப்படையில் பணியாட்களை நியமிக்கப்பட வேண்டி உள்ளது.

பகல் துப்புரவு பணிக்காக 236 துப்புரவு பணியாளர்களும் இரவு துப்புரவு பணிக்காக 170 துப்புரவு பணியாளர்களும் ஆக மொத்தம் 406 துப்புரவு பணியாளர்கள் சுவர்ணஜெயந்தி மூலமாக பணியாட்களை தினசரி கூலி அடிப்படையில் அமர்த்த ஆணை வேண்டப்படுகிறது.

தற்போது இப்பணிக்கு திருவாளர் கந்தன் ஒப்பந்ததாரர் மூலமாக பகல் துப்புரவு பணிக்கு 98 நபர்களுக்கு 24.12.2012 முதல் 23.12.2013 வரை பணி மேற்கொள்ளப்பட்டது, மேலும் பணியின் அவசியம் கருதி 24.12.2013 முதல் 12.06.2014 வரை பணிபுரிய அனுமதி பெறப்பட்டுள்ளது. இரவு துப்புரவு பணிக்காக 170 நபர்களுக்கு 25.04.2013 முதல் 24.04.2014 வரை பணி மேற்கொள்ளப்பட்டது, மேலும் பணியின் அவசியம் கருதி பகுதி 22ல் 65 நபர்களுக்கு 12.06.2014 வரையிலும் பகுதி 23ல் 60 நபர்களுக்கு 15.06.2014 வரையிலும் பகுதி 21ல் 45 நபர்களுக்கு 30.06.2014 வரையிலும் பணிபுரிய அனுமதி பெறப்பட்டுள்ளது. எனவே, இப்பபணி முடியும் தருவாயில் உள்ள காரணத்தினால் 01.07.2014 முதல் மேற்படி பணியினை மேற்கொள்வதற்கு பின்வருமாறு கணக்கிடப்பட்டுள்ளது. அட்டவணை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | வார்டு எண் | தேவையான பணியாளர்கள் | தற்போது பணிபுரிபவர்கள் நிரந்தரம் | குறைவு | இரவு துப்புரவு பணி |
|---|---|---|---|---|---|
| 1 | 94 | 165 | 131 | 34 | 10 |
| 2 | 95 | 172 | 138 | 34 | 15 |
| 3 | 96 | 111 | 104 | 7 | 10 |
| 4 | 97 | 100 | 76 | 24 | 0 |
| 5 | 98 | 81 | 65 | 16 | 0 |
| 6 | 99 | 133 | 114 | 19 | 10 |
| 7 | 100 | 172 | 144 | 28 | 17 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 8 | 101 | 161 | 131 | 30 | 18 |
| 9 | 102 | 181 | 181 | 0 | 15 |
| 10 | 103 | 165 | 161 | 4 | 20 |
| 11 | 104 | 161 | 161 | 0 | 15 |
| 12 | 105 | 163 | 152 | 11 | 11 |
| 13 | 106 | 96 | 94 | 2 | 7 |
| 14 | 107 | 123 | 115 | 8 | 10 |
| 15 | 108 | 123 | 104 | 19 | 12 |
| 16 | A/R | 85 | 85 | 0 | 0 |
| | | 2192 | 1956 | 236 | 170 |
| | | | | **236+170=406** | |

தற்பொழுது பணி மேற்கொள்ள **406** எண்ணிக்கை துப்புரவு பணியாளர் தேவை என கணக்கிட்டு பணியமர்த்த வேண்டியுள்ளது.

இதனை தொடர்ந்து தெரிவிப்பது எதிர்வரும் காலங்களில் பொது சுகாதாரம் சீர்கெடாத வகையில் துப்புரவு பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும் பார்வையில் கண்ட கூட்ட நடவடிக்கை குறிப்பில் அறிவுறுத்தியபடி எந்த ஒரு தெருவும் விடுபடாமல் ஆய்வு மற்றும் அளவீடு செய்து அதன்பின்னர் ஒருங்கிணைந்து அதன் அடிப்படையில் ஏற்கனவே நடைமுறையில் உள்ள வழி காட்டுதல்களின் அடிப்படையில் மண்டலம்–8ல் மேற்படி பணியினை திறம்பட செயல்படுத்த தலைமை பொறியாளர் அவர்களின் சுற்றறிக்கையின்படி அங்கீகரிக்கப்பட்ட விலைப்படி நாள் ஒன்றுக்கு ரூ,**295/–** வீதம் **406** பணியாளர்களுக்கு ஆகும் தோராய செலவு ரூ.**295** X **406** X **365** என ஓர் ஆண்டிற்கு ரூ **4,37,16,050/–** தொகை தேவைப்படுகிறது.

மேற்கண்ட **406** எண்ணிக்கை சுவர்ணஜெயந்தி நகர்ப்புற வேலை வாய்ப்பு திட்டத்தின் குழுக்கள் மூலமாக தினக்கூலி அடிப்படையில் புதியதாக துப்புரவு பணியாளர்களை நியமிக்கலாம்.

1. மேற்கண்ட நிகழ்வுகளை கருத்தில் கொண்டு சுவர்ணஜெயந்தி நகர்ப்புற வேலை வாய்ப்பு திட்டத்தின் குழுக்கள் மூலம் தேவையான பணியாளர்கள் தினக்கூலி அடிப்படையில் பகுதி **21, 22, 23**க்கு **406** எண்ணிக்கை பணியாளர்கள் வீதம் பணியமர்த்தவும். (சுவர்ணஜெயந்தி நகர்ப்புற வேலை வாய்ப்பு திட்டம் குழுக்கள்)
2. மேற்கண்ட தொழிலாளர்களுக்கான குறைந்த பட்ச அடிப்படை ஊதியமாக ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.**295/–** வீதம் என்ற அடிப்படையில் அதற்கான தேவையான தோராய செலவினம் ரூ. **4,37,16,050/–** க்கு நிர்வாக அனுமதி வேண்டியும்
3. இப்பணிக்கான தொகைக்கு கணக்கு குறியீட்டு எண் **40–41–03** கணக்கு தலைப்பு எண் **230–15–01–00** மேற்கொள்ளவும்,

மேற்கண்ட **1** முதல் **3** வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் **19.06.2014** அன்று முடிவடைந்தநிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **25.06.2014** அன்று தீர்மான எண்.**300/2014**ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் **20.06.2014** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **25.06.2014** அன்று தீர்மான எண்.**305/2014**ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலமாக பெருபான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**<u>ப.து.ந.க.எண்.அ3/1416/2014</u>**

**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 24.06.2014 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.347/2014 **பொருள் எண்.29**

**<u>வயது முதிர்வு ஓய்வு பின்னேற்பு அனுமதி</u>**

திரு.ஆர்.சீனிவாசன், தலைமை பொறியாளர் (திட்டம், தரக்கட்டுப்பாடு மற்றும் சிறப்பு திட்டங்கள்) அவர்கள் வயது முதிர்வு காரணமாக **30.04.2014**பிற்பகல் முதல் ஓய்வு பெற்றார்.

திரு.ஆர்.சீனிவாசன், அவர்கள் சென்னை மாநகராட்சியில் உதவி பொறியாளராக **04.06.1979** அன்று பணியில் சேர்ந்துள்ளார். தற்போது தலைமை பொறியாளர் (திட்டம் தரகட்டுப்பாடு மறறும் சிறப்பு திட்டங்களாக) பதவி உயர்வு பெற்று **30.04.2014** முதல் பணித்துறையில் பணிபுரிந்து அன்றைய தினமே ஓய்வு பெற்றார்.

மேலும் தனியர் சென்னை மாநகராட்சியில் பணிபுரிந்த கீழ்க்குறிப்பிட்ட அனைத்து துறை/மண்டலங்களிலிருந்து தனியரை பொறுப்பாக்கும் தணிக்கைத் தடை மற்றும் முன்பணங்கள்/அலுவலக முன்பணங்கள் நேர்செய்யப்படாத விவரங்கள் மற்றும் ஒழுங்கு நடவடிக்கைகள் ஏதும் நிலுவையில் இல்லை என சான்றுகள் பெறப்பட்டுள்ளது.

மேலும், **17.04.2014** நாளிட்ட நிதி ஆலோசகரின் குறிப்பின்படி தனியர் உதவி செயற் பொறியாளராக பணியாற்றிய அனைத்து துறைகள் மற்றும் மண்டலங்களின் தணிக்கை அறிக்கை, தணிக்கை குறிப்பு குறித்த பத்திகள் இவ்வலுவலகத்தில் உள்ள உள்ளாட்சி நிதித் தணிக்கை அறிக்கைகளின் படி கீழ்கண்ட விவரப்படி மொத்தம் ரூ.**27,71,147/–** உள்ளடக்கிய **24** தணிக்கைத் தடைகள் கூட்டுப்பொறுப்பில் உள்ளதாக தணிக்கை அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்கண்ட கூட்டு பொறுப்பில் தனியருக்கு மட்டும் ரூ.**9,23,716/–** உள்ளடக்கிய **24** தணிக்கை தடைகள் நிலுவையில் உள்ளது எனவும், மேலும் திரு.ஆர்.சீனிவாசன், தலைமை பொறியாளர் (திட்டம், தரக்கட்டுப்பாடு மற்றும் சிறப்பு திட்டங்கள்) அவர்கள் மீது மேலே கூறப்பட்ட தணிக்கை தடைகள் உட்பட, மேலும் தணிக்கை தடைகள், நேர் செய்யப்படாத முன்பணங்கள் மற்றும் மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு இருப்பது ஏதேனும் பின்னர் தெரியவரும் நிலையில் அல்லது இதன் மீதான தணிக்கைத் தடைகளை நீக்க தவறும் நிலையில் அவற்றிற்கு தனியரை முழுப்பொறுப்பாக்கி தனியருக்கு வழங்கப்படும் பணிக்கொடை மற்றும் ஓய்வூதிய அகவிலைப்படியிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்று நிதி ஆலோசகர் அவர்களின் செயற்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<u>தனியர் பணிபுரிந்த துறை மற்றும் மண்டலங்களின் விவரங்கள் கீழ்கண்டவாறு அளிக்கப்படுகிறது.</u>**

| வ. எண். | பதவி | மண்டலம் / துறை | பணியாற்றிய காலம் | |
|---|---|---|---|---|
| | | | முதல் | வரை |
| 01 | உதவி பொறியாளர் | பணித்துறை | 04.06.1979 | 31.07.1984 |
| 02 | உதவி பொறியாளர் | பேருந்து சாலைகள் துறை | 01.08.1984 | 30.09.1985 |
| 03 | உதவி பொறியாளர் | மாவட்ட அலுவலகம் (வடக்கு) (தற்போது புதிய மண்டலம்–05) | 01.10.1985 | 14.07.1990 |
| 04 | உதவி பொறியாளர் | மண்டலம்–06 (தற்போது புதிய மண்டலம்–04) | 15.07.1990 | 06.06.1991 |
| 05 | உதவி செயற் பொறியாளர் | பேருந்து சாலைகள் துறை | 07.06.1991 | 22.03.1993 |
| 06 | உதவி செயற் பொறியாளர் | பணித்துறை (தனியார் தெருக்கள்) | 23.03.1993 | 18.04.1993 |
| 07 | உதவி செயற் பொறியாளர் | பாலங்கள் துறை | 19.04.1993 | 01.12.1993 |
| 08 | உதவி செயற் பொறியாளர் | திடக்கழிவு மேலாண்மைத்துறை | 02.12.1993 | 23.08.1994 |
| 09 | உதவி செயற் பொறியாளர் | மண்டலம்–8 | 24.08.1994 | 31.03.1995 |
| 10 | உதவி செயற் பொறியாளர் | மண்டலம்–10 | 01.04.1995 | 26.09.1995 |
| 11 | உதவி செயற் பொறியாளர் | மழைநீர் வடிகால் துறை | 27.09.1995 | 18.08.2000 |
| 12 | உதவி செயற் பொறியாளர் | பழைய மண்டலம்–6 (தற்போது புதிய மண்டலம்–09) | 19.08.2000 | 11.04.2001 |

| | | | | |
|---|---|---|---|---|
| 13 | உதவி செயற் பொறியாளர் | கட்டிடத்துறை | 12.04.2001 | 16.10.2002 |
| 14 | செயற் பொறியாளர் | மழைநீர் வடிகால் துறை | 17.10.2002<br>18.05.2005 | 17.05.2005<br>13.09.2007<br>(ப.மா.அ.ம–5) |
| 15 | செயற் பொறியாளர் | பேருந்து சாலைகள் துறை<br>(பணிமாற்று அடிப்படையில்<br>கட்டிடத்துறை) | 14.09.2007 | 22.09.2011 |
| 16 | கண்காணிப்பு பொறியாளர் | பணித்துறை<br>(திட்டம் மற்றும் ஆய்வு / பணிமாற்று<br>அடிப்படையில் மின்துறை) | 23.09.2011<br>02.02.2012 | 01.02.2012<br>01.04.2012 |
| 17 | கண்காணிப்பு பொறியாளர் | பாலங்கள் துறை | 02.04.2012 | 23.01.2014 |
| 18 | கண்காணிப்பு பொறியாளர்<br>(பொது) | வட்டார துணை ஆணையர்<br>(மத்தியம்) அலுவலகம் | 23.01.2014 | 30.04.2014 |
| 19 | தலைமை பொறியாளர்<br>(பணிகள்) | பணித்துறை | 30.04.2014 | அன்றைய<br>தினமே ஓய்வு. |

திரு.ஆர்.சீனிவாசன், தலைமை பொறியாளர் (திட்டம், தரக்கட்டுப்பாடு மற்றும் சிறப்பு திட்டங்கள்) அவர்கள் மீது இன்றைய தேதியில் சென்னை மாநகராட்சி விழிப்பு குழுமத்தில் விசாரணைகள் ஏதும் நிலுவையில் இல்லை என அறிக்கை பெறப்பட்டுள்ளது. தனியர் மீது துறை சார்ந்த ஒழுங்கு நடவடிக்கைகளோ அல்லது விசாரணைகளோ நிலுவை ஏதும் இல்லை எனத் தெரிவித்து கொள்ளப்படுகிறது. தனியர் சென்னை மாநகராட்சி அலுவலர் கூட்டுறவு சங்கத்திற்கு செலுத்த வேண்டிய நிலுவை தொகை ஏதும் இல்லை என அறிக்கை பெறப்பட்டுள்ளது.

தனியர் வகித்துவரும் தலைமை பொறியாளர் (திட்டம், தரக்கட்டுப்பாடு மற்றும் சிறப்பு திட்டங்கள்) பதவி வகுப்பு–1A ன் கீழ்வருவதால் இப்பதவியில் உள்ளவர்களை வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்கும் அதிகாரம் அரசிடம் உள்ளதால் அரசாணை 2(ப) எண்.40 நாள்.30.04.2014ன்படி தனியரை ஓய்வில் செல்ல அரசாணை வழங்கப்பட்டது. தற்போது நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

எனவே, திரு.ஆர்.சீனிவாசன், தலைமை பொறியாளர்(திட்டம் தரக்கட்டுப்பாடு மற்றும் சிறப்பு திட்டங்கள்) அவர்கள் மீது தணிக்கை தடைகள், நேர் செய்யப்படாத முன்பணங்கள் மற்றும் மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு ஏதேனும் இருப்பது பின்னர் தெரிவரும் பட்சத்தில் அவற்றிற்கு தனியரை முழுபொறுப்பாக்கி தனியருக்கு வழங்கப்படும் பணிக்கொடை மற்றும் ஓய்வூதிய அகவிலைப்படியிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்படுத்தி 30.04.2014 பிற்பகல் முதல் பணியிலிருந்து ஓய்வுபெற அரசாணை (2ப) எண்.40. நாள்.30.04.2014 மூலமாக அனுமதி அளித்ததற்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் ஆணை பெறப்பட வேண்டி ஆணையர் (பொ) அவர்களின் ஆணை பெறப்பட்டு மன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது. நியமனக்குழு தீர்மான எண்.61/2014 தீர்மானத்தின்படி “இப்பொருள் குறித்து கூர்ந்தாய்வு செய்து பின்னர் முடிவெடுக்கலாம் என கருதி இதனை நியமனக்குழு ஒத்திவைத்தது” எனவே, தனியரை பணியிலிருந்து ஓய்வு பெற அனுமதி அளித்ததற்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி மீள சமர்ப்பிக்கப்படுகிறது.

“ இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது”

*******

**<u>ம.வ.அ.ந.க.எண்.அ2/3362/2014</u>**
**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 24.06.2014 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.348/2014 **பொருள் எண்.30**

**<u>வயது முதிர்வு ஓய்வு பின்னேற்பு அனுமதி</u>**

திரு.மு.செல்வராஜ், மேற்பார்வை பொறியாளர் வட்டார துணை ஆணையர் (மத்தியம்) அலுவலகம் அவர்கள், வயது முதிர்வு ஓய்வு நாள் 31.05.2014 ஆகும்.

திரு.மு.செல்வராஜ் அவர்கள் சென்னை மாநகராட்சியில் வரைவாளராக 27.02.1978 அன்று பணியில் சேர்ந்துள்ளார். மேற்பார்வை பொறியாளராக பதவி உயர்வு பெற்று 22.01.2014 முதல் வட்டார துணை ஆணையர் (மத்தியம்) அலுவலகத்தில் பணிபுரிந்து வந்தார். மேலும், தனியர் சென்னை மாநகராட்சியில் பணிபுரிந்த கீழே குறிப்பிட்ட அனைத்து துறை, மண்டலங்களிருந்து தனியரை பொறுப்பாக்கும் தணிக்கைத் தடை மற்றும் முன்பணங்கள் / அலுவலக முன்பணங்கள் நேர் செய்யப்படாத விவரங்கள் மற்றும் ஒழுங்கு நடவடிக்கைகள் ஏதும் நிலுவையில் இருப்பின், அதன் விவரங்களை கோரி சான்றுகள் பெறப்பட்டுள்ளது.

| வ. எ. | மண்டலம் / துறை | பணியாற்றிய காலம் | | பதவி |
|---|---|---|---|---|
| | | முதல் | வரை | |
| 1 | பணித்துறை | 27.02.1978 | 04.08.1980 | வரைவாளர் |
| 2 | சட்டக்குழுமம் | 05.08.1980 | 19.05.1982 | சர்வேயர் |
| 3 | D.O.(S) மண்டலம் – 13 | 20.05.1982 | 04.12.1983 | ஓவர்சியர் |
| | D.O.(S) மண்டலம் –13 | 05.12.1983 | 22.12.1984 | இளநிலை பொறியாளர் |
| | D.O.(S) மண்டலம் – 13 | 23.12.1984 | 02.04.1990 | உதவி பொறியாளர் |
| 4 | மண்டலம் – 13 | 02.04.1990 | 31.07.1991 | உதவி பொறியாளர் |
| 5 | மண்டலம் – 9 | 31.07.1991 | 20.07.1994 | உதவி பொறியாளர் |
| | மண்டலம் – 9 | 10.12.1997 | 11.07.2000 | உதவி செயற்பொறியாளர் |
| | மண்டலம் – 9 | 24.10.2007 | 16.06.2008 | உதவி செயற்பொறியாளர் |
| | மண்டலம் – 9 | 11.01.2013 | 06.03.2013 | செயற் பொறியாளர் |
| 6 | மண்டலம் – 4 | 20.07.1994 | 05.12.1996 | உதவி பொறியாளர் |
| 7 | மண்டலம் – 8 (பழைய மண்டலம் – 5) | 06.12.1996 | 23.04.1997 | உதவி பொறியாளர் |
| | மண்டலம் – 8 | 11.07.2000 | 23.10.2007 | உதவி செயற்பொறியாளர் |
| 8 | பாலங்கள் துறை | 24.04.1997 | 10.12.1997 | உதவி செயற்பொறியாளர் |
| | பாலங்கள் துறை | 07.03.2013 | 22.01.2014 | செயற் பொறியாளர் |
| 9 | மண்டலம் – 10 | 02.04.1990 | 31.07.1991 | உதவி பொறியாளர் |
| | மண்டலம் – 10 | 19.09.2011 | 04.01.2013 | செயற் பொறியாளர் |
| 10 | மழைநீர் வடிகால்வாய் துறை | 17.06.2008 | 19.09.2011 | உதவி செயற் பொறியாளர் |
| 11 | மத்திய வட்டார அலுவலகம் | 22.01.2014 | இந்நாள்வரை | மேற்பார்வை பொறியாளர் |

இவர் மீது தணிக்கைத் தடை ஏதும் நிலுவையில் இல்லை என்ற விவரம் பணித்துறை, சட்டக்குழுமம், பாலங்கள் துறை, மண்டலம்–4,8,10 மற்றும் 13, மழைநீர் வடிகால் துறை ஆகிய துறைகளிலிருந்தும், மண்டலம்–9ல் உதவி பொறியாளர் மற்றும் உதவி செயற் பொறியாளராக பணிபுரிந்த காலத்தில், தனியர் மீது 1998 – 1999ல் பத்தி எண்.68அ, 69,82, 1999–2000ல் பத்திஎண்.43 2000–2001ல் பத்திஎண்.32 2007–2008ல் பத்திஎண்.58 2008–2009ல் பத்தி எண்.28 ஆகிய தணிக்கைத் தடைகள் நிலுவையில் உள்ளது எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரு.மு.செல்வராஜ், மேற்பார்வை பொறியாளர் அவர்கள் மீது சென்னை மாநகராட்சி விழிப்பு குழுமத்தில் விசாரணைகள் ஏதும் நிலுவையில் இல்லை என அறிக்கை பெறப்பட்டுள்ளது. தனியர் மீது துறை சார்ந்த ஒழுங்கு நடவடிக்கைகளோ அல்லது விசாரணைகளோ நிலுவை ஏதும் இல்லை எனத் தெரிவித்து கொள்ளப்படுகிறது. தனியர் சென்னை மாநகராட்சி அலுவலர் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினர் இல்லை என அறிக்கை பெறப்பட்டுள்ளது.

தனியர் உதவி செயற் பொறியாளர் மற்றும் செயற் பொறியாளராக பணியாற்றிய அனைத்து துறைகள் மற்றும் மண்டலங்களின் தணிக்கை அறிக்கை, தணிக்கை குறிப்பு குறித்த பத்திகள் இவ்வலுவலகத்தில் உள்ள உள்ளாட்சி நிதி தணிக்கை அறிக்கைகளின்படி கீழ்க்கண்ட விவரப்படி மொத்தம் ரூ.**13,79,700/–** உள்ளடங்கிய **29** தணிக்கைத் தடைகள் கூட்டுப்பொறுப்பில் உள்ளதாக தணிக்கை அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்கண்ட கூட்டுப்பொறுப்பில் தனியருக்கு மட்டும் ரூ.**6,87,121/–** உள்ளடங்கிய **29** தணிக்கைத் தடைகள் நிலுவையில் உள்ளது என நிதி ஆலோசகர் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**03.05.2014** மற்றும் **30.05.2014** நாளிட்ட அரசாணை மற்றும் அரசு கடிதத்தில் திரு.மு.செல்வராஜ், மேற்பார்வை பொறியாளர் (நகரமைப்பு, திடக்கழிவு மேலாண்மை மற்றும் இயந்திரம்), வட்டார துணை ஆணையர் (மத்தியம்) அலுவலகம், சென்னை மாநகராட்சி அவர்களை **31.05.2014** பிற்பகல் முதல் சென்னை மாநகராட்சி பணியிலிருந்து வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெற அனுமதி அளித்து ஆணையிடப்பட்டுள்ளது.

மேற்கண்ட அரசாணை மற்றும் அரசு கடிதத்தின்படி திரு.மு.செல்வராஜ், மேற்பார்வை பொறியாளர் (நகரமைப்பு, திடக்கழிவு மேலாண்மை மற்றும் இயந்திரம்), வட்டார துணை ஆணையர் (மத்தியம்) அலுவலகம், சென்னை மாநகராட்சி அவர்கள் மீது தனி பொறுப்பில் தணிக்கைத் தடையாக உள்ள ரூ. **6,87,121/–** உட்பட சென்னை மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு ஏற்படுத்தும் தணிக்கைத் தடைகள் ஏதேனும் இருப்பது பின்னர் தெரியவரின், அதற்கு தனியரை பொறுப்பாக்கி அதற்குண்டான தொகையினை தனியரின் பணிக்கொடை மற்றும் ஓய்வூதிய அகவிலைப்படியிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்படுத்தி, தனியரை **30.05.2014** நாளிட்ட முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் ஆணையின்படி **31.05.2014** பிற்பகல் முதல் வயது முதிர்வு அடிப்படையில் பணியிலிருந்து ஓய்வு பெற அனுமதி அளித்து பணியிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

எனவே, திரு.மு.செல்வராஜ், மேற்பார்வை பொறியாளர், (நகரமைப்பு, திடக்கழிவு மேலாண்மை மற்றும் இயந்திரம்) வட்டார துணை ஆணையர் (மத்தியம்) அலுவலகம் அவர்களை அரசாணையின்படி **31.05.2014** பிற்பகல் முதல் வயது முதிர்வு அடிப்படையில் பணியிலிருந்து ஓய்வில் செல்ல அனுமதிக்கப்பட்டதற்கு நியமனக் குழுவின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘ இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது’’

‘‘இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது’’

*******

**மி.து.ந.க.எண்.அ1/17066/2013**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 14.02.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.349/2014 **பொருள் எண்.31**

**சென்னை மாநகராட்சி பொறியியல் பணி விதிகள்–1969ல் உதவி கோட்ட மின்பொறியாளர் பதவிக்கான கல்வித்தகுதி பணிஅனுபவம் ஆகியவற்றில் சில திருத்தங்கள் மேற்கொண்டு அரசுக்கு முன்மொழிவு அனுப்ப அனுமதி**

சென்னை மாநகராட்சி மின்துறையில் மேற்பார்வை பொறியாளர் (மின்சாரம்), கோட்ட மின் பொறியாளர் உதவி கோட்ட மின் பொறியாளர், உதவி மின் பொறியாளர், மற்றும் இளநிலை மின் பொறியாளர் ஆகிய அலுவலர்கள் மூலமாக தெருவிளக்கு பராமரிப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன.

இவற்றில் உதவி கோட்ட மின் பொறியாளர் பதவி உயர்விற்கு சென்னை மாநகராட்சி பொறியியல் பணி விதிகள் 1969–ல் நெறிமுறைகள் வரையறுக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி மின்துறையில் 1981 ஆம் ஆண்டு கம்பியில்லாத் தொடர் அமைப்பு ஏற்படுத்தி 1994 ஆம் ஆண்டு சில அலுவலர்கள் கம்பியில்லா தொடர் அமைப்பில் தற்காலிகமாக பணியமர்த்தப்பட்டு, 1996 ஆம் ஆண்டு முதல் காலமுறை ஊதியத்தில் பணிபுரிந்து வந்து, அதன் பின்னர் ஒவ்வொரு ஆண்டும் பணி நீட்டிக்கப்பட்டு 2006 ஆம் ஆண்டு வரை அனுமதி பெற்று அதனை தொடர்ந்து மின்துறையில் பணிபுரிந்து வருகின்றனர். இவர்களுக்கு கம்பியில்லா தொடர் அமைப்பில் 2006 ஆம் ஆண்டிற்கு பிறகு பணி நீட்டிப்பிற்கு அரசின் ஆணையும், மேலும், இவர்கள் 1996 ஆம் ஆண்டு முதல் உதவி பொறியாளர் பதவியில் பணி வரன்முறை செய்தமைக்கு அரசின் பின்னேற்பு ஆணையும் பெறப்படவேண்டும்.

தற்போது சென்னை மாநகராட்சி மின்துறையில் பணிபுரியும் உதவிப்பொறியாளர்கள் பல்வேறு பாடங்களில் கல்வித்தகுதி உடையவர்களாக உள்ளனர். இந்நிலையில் சென்னை மாநகராட்சியில் பயன்பாட்டில் இருந்து வரும் பொறியியல் பணிவிதிகளில் The Chennai Corporation Engineering service rules, 1969 –ல் உள்ள கல்வித்தகுதிகள் திருத்தி அமைக்கப்பட வேண்டியது அவசியமாகிறது. மேலும் தற்போது மின்துறையில் பட்டப்படிப்பு படித்த உதவி பொறியாளர்களுக்கு 5 வருடங்கள் பணிஅனுபவமும், பட்டயப்படிப்பு படித்த இளநிலை பொறியாளர்களுக்கு 15 வருடங்கள் பணி அனுபவமும் உதவி கோட்ட மின் பொறியாளர் பதவி உயர்வுக்கு கடைபிடிக்கப்பட்டு வருகிறது. இதனை எதிர்த்து பல்வேறு வழக்குகள் தொடரப்பட்டன. அந்த வழக்குகளில் தீர்ப்பாக சென்னை மாநகராட்சி பொறியியல் பணிவிதிகள் 1969–ல் தெரிவிக்கப்பட்ட பணிவிதிகளில் தெரிவித்துள்ள உதவி பொறியாளர்களுக்கு 5 வருடங்களும், பட்டயப்படிப்பு படித்த இளநிலை பொறியாளர்களுக்கு 15 வருடங்களும் பதவி உயர்வுக்கு கடைபிடிக்கப்பட்டு வரும் நெறிமுறைகளையே பின்பற்றுமாறு நீதிமன்ற தீர்ப்பில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஆனால் தற்போது சென்னை மாநகராட்சி பணிவிதிகளில் மின்துறை சாராத சிவில் சார்ந்த உதவி பொறியாளர்கள் மற்றும் இளநிலை பொறியாளர்களுக்கு பதவி உயர்வினை பரிசீலிக்கப்படும் போது தற்போது 3 : 1 விகிதாச்சாரம் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. மேலும் மின்துறை சார்ந்த உதவி பொறியாளர்கள் மற்றும் இளநிலை பொறியாளர்களின் நேரடி நியமனத்திலும் 3 : 1 விகிதாச்சாரமே கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

எனவே, சென்னை மாநகராட்சி பொறியியல் (மின்துறை சார்பான) பணிவிதிகளில் மின்துறை உதவி பொறியாளர் மற்றும் இளநிலை பொறியாளர்களுக்கு முறையே 3 : 1 விகிதாச்சாரம் கடைப்பிடிக்கப்படவேண்டும் என்பதின் பொருட்டும், மேலும், மின்துறையில் பட்டப்படிப்பு படித்த உதவி பொறியாளர்களுக்கு 5 வருடங்கள் பணிஅனுபவமும், பட்டயப்படிப்பு படித்த இளநிலை பொறியாளர்களுக்கு 10 வருடங்கள் பணி அனுபவமும் உதவி கோட்ட மின் பொறியாளர் பதவி உயர்வுக்கு கடைபிடிக்கப்படவும் சென்னை மாநகராட்சி மின்துறை உதவி கோட்ட மின் பொறியாளர் பதவிக்கு தற்போது பயன்படுத்தப்பட்டு வரும் The Chennai Corporation Engineering service rules, 1969–ன் பணி விதிகளை பின்வருமாறு திருத்தி மாற்றியமைக்கலாம். திருத்தி அமைக்கப்பட்ட பணிவிதிகளின் பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

மேற்கண்டவாறு சென்னை மாநகராட்சி பொறியியல் பணிவிதிகள் 1969–ல் உதவி கோட்ட மின் பொறியாளர் பதவியின் பெயர் மாற்றம் மற்றும் கல்வித்தகுதி, பணி அனுபவம், விகிதாச்சாரங்கள் மற்றும் சதவீதம் ஆகிய மாற்றங்கள் செய்து நியமனக்குழு மூலம் மன்றத்தீர்மானம் பெற்று அரசுக்கு பரிந்துரை செய்ய மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**சா.(ம)பா.து.ந.க. எண்.பி1/0426/2013**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 12–6–2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.350/2014 **பொருள் எண்.32**

**பேருந்து சாலைகள் துறை – சில பேருந்து சாலைகளை சுற்றுப்புற சூழலுக்கு ஏற்றவாறு சுத்தம் செய்து பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்காக CREDAI CHENNAI ரியல் எஸ்டேட் அபிவிருத்தி சங்கத்திற்கு ஒப்படைத்தது – திருத்திய நிபந்தனைகளுக்கு (REVISED) – அனுமதி**

மன்றத் தீர்மானத்தின் படி CREDAI CHENNAI சங்கம் சென்னை மாநகரில் உள்ள கீழ்காணும் 12 பேருந்து சாலைகளை சுற்றுப்புற சூழலுக்கு ஏற்றவாறு சுத்தம் செய்து பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கு CREDAI CHENNAI சங்கம் சென்னை மாநகராட்சியுடன் ஒப்பந்த உடன்படிக்கை (MOA) (Memorandum of Agreement ) மேற்கொள்ளப்பட்டுள்ளது.

| வ.எண். | மண்டலம் | சாலையின் பெயர் |
|---|---|---|
| 1 | VIII | புரசைவாக்கம் நெடுஞ்சாலை |
| 2 | VIII | கங்காதீஸ்வரர் கோயில் தெரு |
| 3 | VIII | ராஜா அண்ணாமலை சாலை |
| 4 | VIII | நாராயண குரு சாலை |
| 5 | V | ஈ.வி.கே.சம்பத் சாலை |
| 6 | V | ஜோதி வெங்கடாசலம் சாலை |
| 7 | V | வேப்பேரி நெடுஞ்சாலை |
| 8 | V | ராசா முத்தையா சாலை |
| 9 | V | காந்தி இர்வின் சாலை |
| 10 | V | போலீஸ் கமிஷனர் ஆபிஸ் சாலை |
| 11 | V | பாந்தியன் சாலை |
| 12 | V | வேனல்ஸ் சாலை |

மேலும் தற்போது இச்சங்கம் கேட்டுக்கொண்டுள்ளபடி கீழ்க்கண்ட 6 சாலைகளுக்கும் சுற்றுப்புற சூழலுக்கு ஏற்றவாறு சுத்தம் செய்து ஏற்கனவே ஒப்பந்தம் செய்துக்கொண்ட நிபந்தனைகளின் படி பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கு அனுமதி கேட்டுக் கொண்டுள்ளது.

1.டேங்க் பண்டு ரோடு, மண்டலம் – 9
2.கான்ட்ரான் ஸ்மித் ரோடு, மண்டலம் – 9
3.கவிஞர் பாரதிதாசன் சாலை, மண்டலம் – 9
4.தெற்கு உஸ்மான் ரோடு, மண்டலம் – 10
5.டாக்டர் நாயர் ரோடு, மண்டலம் – 10
6.போட் கிளப் ரோடு, ஆர்.ஏ.புரம் மண்டலம் – 9

**சென்னை மாநகராட்சி நடைமுறைபடுத்தும் பணிகள்**

1. மாநகராட்சி சிறிய குப்பை தொட்டிகளை கொடுக்கும்.
2. சுத்தம் செய்யும் பணிக்கு மாநகராட்சி நிதியுதவி செய்யாது.
3. மாநகராட்சி ஆட்கள் ஏதும் நியமனம் செய்து தராது.
4. மாநகராட்சி இதற்கான ஒரு நடைமுறையை தயாரித்து கொடுக்கும்.
5. அவ்வாறு பணி மேற்கொள்ளும் சாலைகளில் இச்சாலையை துாய்மைபடுத்தும் பணி CREDAI CHENNAI என்ற நிறுவனத்தால் மேற்கொள்ளப்படுகிறது என்ற 3அடி X2அடி அளவுள்ள அறிவிப்பு பலகை செய்து 250 மீட்டருக்கு ஒன்று என்ற அடிப்படையில் சாலையின் இருபக்க நடைபாதைகளிலும் பாதசாரிகளுக்கு இடையூறு இல்லாத வகையில் அமைத்துக் கொள்ளலாம்.
6. மாநகராட்சி இச்சாலைகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றும்.
7. செய்தி தெரிவித்த இரண்டு நாட்களில் உபரிமண் அகற்றப்படும்.
8. எரியாத தெரு விளக்குகளை எரியவைக்கும்.

**CREDAI CHENNAI –க்கு நிர்ணயிக்கும் நிபந்தனைகள்**

1. சாலையின் இருபுறமும் (end to end) நடைபாதைகளும் சேர்த்து தினமும் குறைந்தபட்சம் ஓரிருமுறை சுத்தம் செய்ய வேண்டும்.
2. எச்சில்கள் துடைத்தெடுக்கப்பட வேண்டும்.
3. மையத்தடுப்புகள், பூங்கா வேலிகள், போக்குவரத்து திட்டுகள், தெரு பெயர் பலகைகள், குப்பை தொட்டிகள் சுத்தம் செய்யப்பட வேண்டும்.
4. மாநகராட்சி குப்பை தொட்டிகளில் குப்பை சேகரிக்கப்பட வேண்டும்.
5. அவ்வாறு பணி மேற்கொள்ளும் சாலைகளில் இச்சாலையை தூய்மைபடுத்தும் பணி என்ற நிறுவனத்தால் மேற்கொள்ளப்படுகிறது என்ற 3அடிx2அடி அளவுள்ள அறிவிப்பு பலகை செய்து 250 மீட்டருக்கு ஒன்று என்ற அடிப்படையில் சாலையின் இருபக்க நடைபாதைகளிலும் அமைத்துக் கொள்ளலாம்.
6. மாநகராட்சி அறிவுரையின்படி மரக்கிளைகள் வெட்டும்பணி செய்ய வேண்டும்.
7. தேவையான இடங்களில் தண்ணீர் ஊற்றி கழுவி சுத்தம் செய்ய வேண்டும்.
8. கிரானைட் கற்கள் பழுதடைந்தால் மாற்ற வேண்டும்.
9. மழைநீர் செல்லும் குழாய்கள் (Inlets) சுத்தம் செய்யப்படும்.
10. மையத்தடுப்புகள் (Centre Median) மற்றும் போக்குவரத்து திட்டுகள் (Traffic Island)ல் செடிகளுக்கு லாரி மூலம் தண்ணீர் ஊற்றி செடிகள் பராமரிக்கப்பட வேண்டும்.
11. அனுமதியில்லாத சுவரொட்டிகள், கொடிகள், பேனர்கள், மாநகராட்சியின் அறிவுரையை கேட்டு அகற்றப்பட வேண்டும்.
12. பணிகள் விவரம் பற்றி பதிவேடுகள் பராமரிக்கப்படும். மூன்று மாதத்திற்கு ஒரு தடவை அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

சென்னை மாநகராட்சி இப்பணிகளை கண்காணிக்க ஒரு குழு அமைக்கும். மூன்று மாதத்திற்கு ஒரு தடவை பணியை ஆய்வு செய்யும். சங்கம் தெரிவிக்கும் மூலதன பராமரிப்பு பணிகளை மாநகராட்சி செய்து கொடுக்கும். மழைக்காலங்களில் சங்கம் தெரிவித்தவுடன் கால்வாய் அடைப்புகளை மாநகராட்சி சரி செய்து கொடுக்கும். முறையில்லாமல் வாகனங்கள் நிறுத்துவது சம்மந்தமாக சங்கம் தெரிவித்தவுடன் அவற்றை அகற்ற மாநகராட்சி நடவடிக்கை எடுக்கும். சங்கம் செய்கிற பணி திருப்திகரமாக இல்லையெனில் மாநகராட்சி குறிப்பாணை (Notice) கொடுக்கும். இவ்வாறு மூன்று முறை குறிப்பாணை (Notice) கொடுத்தும் பணி சரியாக செய்யவில்லையெனில் ஒப்பந்தத்தை ரத்து செய்யப்படும். இவ்வொப்பந்தம் மூன்று வருடம் வரை செல்லத்தக்கதாகும்.

எனவே, மேற்கூறிய நிபந்தனைகளுக்குட்பட்டு CREDAI CHENNAI சங்கத்திற்கு மேற்காணும் 18 சாலைகளை ஏற்கனவே கொடுக்கப்பட்ட (12 சாலைகள் மற்றும் இப்பொழுது கொடுக்கப்படும் 6 சாலைகள்) பராமரிப்பு பணி மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி CREDAI CHENNAI சங்கத்திற்கு அனுமதி வழங்கியதற்கு, மன்றத்தின் பின்னேற்பு அனுமதி மற்றும் அனுமதி பெற்றப்பின் அதன் அடிப்படையில் புதிய புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் உடன்படிக்கை (Memorandum of Agreement ) மேற்கொள்வதற்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 19.06.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 25.06.2014 அன்று தீர்மான எண்.296/2014ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 20.06.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 25.06.2014 அன்று தீர்மான எண். 301/2014ன் படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலமாக பெருபான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**ம.அ.13.ந.க.எண்.சி1/6308/2014**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் 24.06.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.351/2014 **பொருள் எண்.33**

**மண்டலம்–13, பகுதி–40(அ), வார்டு–174ல் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் சீரிய முயற்சியினால் ரேஸ் கோர்ஸ் சாலையில் சாலையினை அகலப்படுத்த மெட்ராஸ் ரேஸ் கிளப்பிற்கு சொந்தமான 2220 சதுர மீட்டர் (23896 சதுர அடி) அதாவது தோராயமாக 10 கிரவுண்ட் நிலத்தை நிலம் மற்றும் உடைமைத்துறை மூலம் சென்னை மாநகராட்சி கையகப்படுத்த அனுமதி.**

மண்டலம்–13, பகுதி–40(அ), வார்டு–174ல் ரேஸ் கோர்ஸ் சாலையில் போக்குவரத்து நெரிசல் தவிர்க்கும் பொருட்டு சாலையினை அகலப்படுத்த மெட்ராஸ் ரேஸ் கிளப்பிற்கு சொந்தமான 2220 சதுரமீட்டர் (23,896 சதுர அடி) அதாவது தோராயமாக 10 கிரவுண்ட் நிலத்தை வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் சீரிய முயற்சியினால் சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைக்க கூடுதல் செயலாளர், மெட்ராஸ் ரேஸ் கிளப் அவர்கள் இசைவு தெரிவித்துள்ளார்.

மேலும், அதற்கு ஈடாக பொருத்தமான இழப்பீடு வழங்குமாறும், சென்னை மாநகராட்சி கையகப்படுத்தும் நிலத்தில் தற்போது உள்ள சுற்று சுவர், நுழைவு வாயில் மற்றும் கார் பார்கிங் ஷெட்டிற்கு மாற்றாக, சென்னை மாநகராட்சி கையகப்படுத்தும் நிலம் போக மீதமுள்ள மெட்ராஸ் ரேஸ் கிளப்பிற்கு சொந்தமான இடத்தில் சுற்று சுவர், நுழைவு வாயில் மற்றும் கார் பார்கிங் ஷெட் அமைத்து கொடுக்குமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

மேற்குறிப்பிட்ட விவரப்படி, மண்டலம்–13, பகுதி–40(அ), வார்டு–174ல் ரேஸ் கோர்ஸ் சாலையில் போக்குவரத்து நெரிசலை தவிர்க்கும் பொருட்டு சாலையினை அகலப்படுத்த மெட்ராஸ் ரேஸ் கிளப்பிற்கு சொந்தமான 2220 சதுர மீட்டர் (23,896 சதுர அடி) அதாவது தோராயமாக 10 கிரவுண்ட் நிலத்தை நிலம் மற்றும் உடைமைத்துறை மூலம் சென்னை மாநகராட்சி கையகப்படுத்த நிலைக்குழு (நகரமைப்பு) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

‘‘ஏற்கனவே நிலைக்குழு(நகரமைப்பு) கூட்டம் 13.06.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தினை கருத்தில் கொண்டு 24.06.2014 அன்று தீர்மான எண்.06/2014–ன்படி நிலைக்குழு(நகரமைப்பு)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 20.06.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 25.06.2014 அன்று தீர்மான எண்.306/2014ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலமாக பெருபான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.’’

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**பொ.து.ந.க.எண்.ஈ3 / 31350 / 2002**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 24.06.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.352/2014 **பொருள் எண்.34**

**பணியமைப்பு**

**26.12.2009** நாளிட்ட அரசாணையில் 42 உள்ளாட்சி அமைப்புகளை சென்னை மாநகராட்சி எல்லைக்குள் சேர்த்தல் மற்றும் எல்லையை விரிவுபடுத்தியதன் மூலம் சென்னை மாநராட்சியின் எல்லை 426 சதுர கிலோ மீட்டராக விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. இதனால் 15 மண்டலங்கள் மற்றும் 200 வார்டுகள் என சென்னை மாநகராட்சி விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

**10.09.2011** நாளிட்ட அரசாணை (ப) எண்.134, ந.நி.ம.வ.கு (மா.ந.3) துறை, நாள் 10.09.2011ன் படி, சென்னை மாநகராட்சி, விழிப்பு குழுமத்திற்கு 14 பணியிடங்களாக கீழ்கண்டவாறு திருத்தி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிட்டுள்ளது.

| வ.எண். | பணியிடத்தின் பெயர் | திருத்தி ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை | மாதாந்திர செலவு (தோராயமாக) |
|---|---|---|---|
| 1. | விழிப்பு பணி அலுவலர் (காவல் துறை துணை கண்காணிப்பாளர் தகுதியில்) | 1 | 55,441 |
| 2. | விழிப்பு பணி ஆய்வாளர் (காவல் துறை ஆய்வாளர் தகுதியில்) | 2 (ஒரு பதவி சிறப்பு காவல் படை பிரிவிலிருந்து ஒதுக்கப்பட்டுள்ளது) | 81,745 |
| 3. | தலைமை காவலர் | 5 (ஐந்து பதவிகளும் சிறப்பு காவல் படை பிரிவிலிருந்து ஒதுக்கப்பட்டுள்ளது) | 82,250 |
| 4. | கண்காணிப்பாளர் (அலுவலகம்) | 1 | 29,050 |
| 5. | உதவியாளர் | 1 | 16,320 |
| 6. | இளநிலை உதவியாளர் | 1 | 15,560 |
| 7. | தட்டச்சர் | 1 | 15,620 |
| 8. | அலுவலக உதவியாளர் | 2 | 26,510 |
| | **மொத்தம்** | **14** | **3,22,496/–** |
| | **வருடாந்திர செலவு** | | **38,69,952/–** |

சென்னை மாநகராட்சி எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டதினால் விழிப்பு குழுமத்தில் பணிச்சுமைகள் அதிகமாக உள்ளது. ஆகவே, விழிப்பு குழுமத்தில் பணியிடங்களின் எண்ணிக்கை திருத்தியமைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

மாண்புமிகு முதலமைச்சரின் தனிப்பிரிவு, வணக்கத்திற்குரிய மேயர், ஆணையர் மற்றும் பொதுமக்களிடம் பெறப்படும் மனுக்கள் தினமும் அதிகமான அளவில் பெறப்படுவதால் அம்மனுக்களின் மீது கூர்ந்தாய்வு செய்து உரிய நடவடிக்கை மேற்கொள்வதற்கு விழிப்பு குழுமத்தில் போதிய காவலர்கள் இல்லாத சூழ்நிலை உள்ளது. சென்னை மாநகராட்சி விழிப்பு குழுமம் காவல் துறையின் உறுதுணையில் சில விழிப்பு பணிகள் செயல்படுத்தப்பட்டு வருவதாலும், சென்னை மாநகராட்சியின் நிலங்களை ஆக்கிரமிப்பு செய்பவர்களின் மீது நடவடிக்கை எடுக்கும் பொருட்டு சட்டம் மற்றும் ஒழுங்கு பிரிவின் துணையுடன் விழிப்பு குழுமம் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருவதாலும் மற்றும் ரிப்பன் மாளிகையின் பாதுகாப்புப் பணியினை மேற்பார்வை செய்து வருவதாலும் விழிப்பு குழுமத்தின் பணியிடங்களின் எண்ணிக்கை கீழ்கண்ட அட்டவணைப்படி திருத்தியமைக்கப்படவுள்ளது.

## FUNCTIONS CHART




சென்னை மாநகராட்சி தலைமையிடம் மற்றும் வட்டார துணை ஆணையர் அலுவலகங்களில் ‘‘விழிப்பு மற்றும் பாதுகாப்பு’’ குழுமம் என தோற்றுவித்து மாநகராட்சியின் வருவாயை அதிகரிப்பதற்கான எல்லா சூழ்நிலைகளிலும் சிறப்பான முறையில் செயல்படுவதற்கு சென்னை மாநகராட்சி விழிப்பு குழுமத்தில் உள்ள தற்காலிக பணியிடங்களின் எண்ணிக்கையை கீழ்கண்டவாறு திருத்தியமைத்து ஆணை பிறப்பிக்குமாறு அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பப்பட்டுள்ளது.

**<u>சென்னை மாநகராட்சி தலைமையிடத்தில் உத்தேசிக்கப்படும் பணியிடங்களின் எண்ணிக்கை</u>**

| வ. எண் | பணியிடத்தின் பெயர் | விழிப்பு குழுமத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ள பணியிடங்களின் எண்ணிக்கை | மாதாந்திர செலவு (தோராயமாக) |
|---|---|---|---|
| 1. | தலைமை விழிப்பு அலுவலர் (காவல் துறை கண்காணிப்பாளர் தகுதியில்) | 1 | 78,631 |
| 2. | காவல் துறை ஆய்வாளர் | 2 | 73,320 |
| 3. | காவல் துறை உதவி ஆய்வாளர் | 4 | 1,09,120 |
| 4. | தலைமை காவலர் | 8 | 1,32,720 |
| 5. | கண்காணிப்பாளர் (அலுவலகம்) | 1 | 29,050 |
| 6. | உதவியாளர் | 1 | 16,320 |
| 7. | இளநிலை உதவியாளர் | 1 | 15,560 |
| 8. | தட்டச்சர் | 1 | 15,620 |
| 9. | அலுவலக உதவியாளர் | 2 | 26,510 |
| | **மொத்தம்** | **21** | **4,96,851/–** |
| | **வருடாந்திர செலவு** | | **59,62,212/–** |

**சென்னை மாநகராட்சி வட்டார அலுவலகத்திற்கு உத்தேசிக்கப்படும் பணியிடங்களின் எண்ணிக்கை**

| வ. எ ண். | பணியிடத்தின் பெயர் | வடக்கு வட்டார விழிப்பு குழுமத்திற்கு உத்தேசிக்கப் பட்டுள்ள பணியிடங்களின் எண்ணிக்கை | மத்திய வட்டார விழிப்பு குழுமத்திற்கு உத்தேசிக்கப் பட்டுள்ள பணியிடங்களின் எண்ணிக்கை | தெற்கு வட்டார விழிப்பு குழுமத்திற்கு உத்தேசிக்கப் பட்டுள்ள பணியிடங்களின் எண்ணிக்கை | மாதாந்திர செலவு (தோராயமாக) |
|---|---|---|---|---|---|
| 1. | விழிப்பு அலுவலர் (காவல் துறை துணை கண்காணிப்பாளர் தகுதியில்) | 1 | 1 | 1 | 1,66,323 |
| 2. | காவல் துறை ஆய்வாளர் | 1 | 1 | 1 | 1,09,980 |
| 3. | காவல் துறை உதவி ஆய்வாளர் | 2 | 2 | 2 | 1,63,680 |
| 4. | தலைமை காவலர் | 4 | 4 | 4 | 1,99,080 |
| 5. | உதவியாளர் | 1 | 1 | 1 | 48,960 |
| 6. | இளநிலை உதவியாளர் | 1 | 1 | 1 | 46,680 |
| 7. | அலுவலக உதவியாளர் | 1 | 1 | 1 | 39,765 |
| | **மொத்தம்** | **11** | **11** | **11** | **7,74,468/–** |
| | **வருடாந்திர செலவு** | | | | **92,93,616/–** |

**சென்னை மாநகராட்சி தலைமையிடம் மற்றும் வட்டார அலுவலகங்களுக்கு உத்தேசிக்கப்பட்டுள்ள மொத்த பணியிடங்களின் எண்ணிக்கை**

| வ. எண். | பணியிடத்தின் பெயர் | விழிப்பு குழுமத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ள பணியிடங்களின் எண்ணிக்கை | மாதாந்திர செலவு (தோராயமாக) |
|---|---|---|---|
| 1. | தலைமை விழிப்பு அலுவலர் (காவல் துறை கண்காணிப்பாளர் தகுதியில்) | 1 | 78,631 |
| 2. | விழிப்பு அலுவலர் (காவல் துறை துணை கண்காணிப்பாளர் தகுதியில்) | 3 | 1,66,323 |
| 3. | காவல் துறை ஆய்வாளர் | 5 | 1,83,300 |
| 4. | காவல் துறை உதவி ஆய்வாளர் | 10 | 2,72,800 |
| 5. | தலைமை காவலர் | 20 | 3,31,800 |
| 6. | கண்காணிப்பாளர் (அலுவலகம்) | 1 | 29,050 |
| 7. | உதவியாளர் | 4 | 65,280 |
| 8. | இளநிலை உதவியாளர் | 4 | 62,240 |
| 9. | தட்டச்சர் | 1 | 15,620 |
| 10. | அலுவலக உதவியாளர் | 5 | 66,275 |
| | **மொத்தம்** | **54** | **12,71,319/–** |
| | **வருடாந்திர செலவு** | | **1,52,55,828/–** |

ஆகவே, சென்னை மாநகராட்சி விழிப்பு குழுமத்தில் உள்ள தற்காலிக பணியிடங்களின் எண்ணிக்கையை மேற்கண்டவாறு திருத்தியமைக்க வேண்டி அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பப்பட்டதற்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு ஆணை வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

'' இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது''

''இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது''

*******

**க.து.ந.க.எண். AEE/drg/3100/2014**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 24.06.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.353/2014 **பொருள் எண்.35**

**கலந்தறிதற்குரியர் தெரிவு பட்டியலுக்கு அனுமதி**

மன்றத்தீர்மானங்களின்படி, ஏற்கனவே 10 கட்டடக் கலைஞர்கள், சென்னை மாநகராட்சியால் தெரிவு செய்யப்பட்டு 2007 முதல் இன்று வரை அமுலில் இருந்தது. தற்சமயம் வடிவமைப்பு பெறுவதில் நீண்ட நாட்கள் ஆவதாலும், புதிதாக பலரும் சேரும் எண்ணத்தில் கோரியதாலும் புதிதாக பட்டியல் தயாரிக்க மன்றத்தில் அறிவிப்பு செய்யப்பட்டு 21.05.2014 ஆம் தேதி ஒப்பந்தம் கோரப்பட்டது.

அதில் கட்டடக் கலைஞர்கள் பலர் கலந்து கொண்டனர். அதன் Technical bid open செய்யப்பட்டு பிறகு ஆணையரின் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. அதில் அனைத்து கட்டடக் கலைஞர்களும் கலந்து கொண்டு, அனைத்து ஒப்பந்தங்களைப் போல இந்தப் பட்டியல் தயாரிக்கப்படும் பொது L1 முறையை கடைபிடிக்க தேவையில்லை எனவும், Council of Architectன் விதிமுறையின்படி (Council of Architect norms) கொடுக்கப்படும் தொகையை கட்டட வரைவாளர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என முடிவு செய்யப்பட்டது. மேலும் ஒரே பட்டியலாக தயார் செய்யாமல், அந்தந்த பணிகளில் சிறப்பு தன்மை வாய்ந்தவர்களை மட்டும் தனியே Building, Landscape, Interior, conservation மற்றும் urban design என வகைப்படுத்தலாம் என முடிவு செய்யப்பட்டது.

அதன்பிறகு, அறிவிப்பு செய்து மிகுந்த எண்ணிக்கையில் விண்ணப்பங்கள் வருவதாக எதிர்பார்த்து மற்றும் தனித்தன்மையை வகைப்படுத்தி மீண்டும் நாளிதழ்களில் ஒப்பந்தங்கள் கோர ஆணையரின் அனுமதி பெற்று விளம்பரம் கொடுக்கப்பட்டது. அந்த விளம்பரத்தில் ஒப்ப இறுதி நாளன்று 21 ஒப்பந்தங்கள் பெறப்பட்டது. அதனை தேர்தல் நடத்தை விதிமுறைகள் நடைமுறையில் இருந்ததால், தேர்தல் முடிந்தவுடன் 21/05/2014 அன்று திறக்கப்பட்டது.

மொத்தம் 21 ஒப்பந்தங்கள் பெறப்பட்டு அதில் மூன்று கம்பெனிகள், ஆர்சி ஸ்டுடியோ, சிமாகா, ஐகோர் ஆகியோர்கள் தகுதி அடிப்படையை (Eligibility criteria) சமன் செய்யாததால், அவர்களை நீக்கிவிட்டு மீதமுள்ளவர்களின் ஒப்பந்தங்கள் ஏற்கப்பட்டது.

இந்த ஒப்பந்தங்கள் பரிசீலிக்கவும், ஒவ்வொருவர்களின் தனித் தன்மையை கண்டறியவும் இணை ஆணையர் (பணிகள்) தலைமையில் ஒரு குழு ஆணையரின் அனுமதி பெற்று அமைக்கப்பட்டு, அக்குழு 13.06.2014 அன்று கூடியது. அதில், ஒவ்வொருவருடைய Profileஐ ஆய்வு செய்து எந்த, எந்த fieldல் சிறந்தவர்கள் என கண்டறியப்பட்டது. மேலும் தகுதி இல்லாதவர்களை நீக்கவும், Landscape போன்றவற்றில் அனுபவம் மட்டுமல்லாமல் அவர்களுடைய கல்வி தகுதிகளையும் ஆய்வு செய்து கீழ்க்கண்டவாறு அந்தந்தப் பணிகளில் சிறப்பு தன்மை வாய்ந்த கலந்தறிவாளர்கள் பட்டியல் தயாரிக்கப்பட்டது.

<u>கட்டடங்கள்</u>

1. இராஜேந்திரன் அசோசியேட்ஸ்
2. நந்தா அசோசியேட்ஸ்
3. ஆஸ்கார் கன்சஸ்யோ இண்டர்நேஷனல்
4. அமுதசுரபி ஆர்கிடெக்ட்ஸ்
5. பேட்குரோ கன்சல்டண்ட்
6. பித்தாவாடியன் பார்ட்னர்ஸ்
7. அனாமிகா ஆர்கிடெக்ட்ஸ்
8. சி.ஆர். நாராயணராவ் ஆர்கிடெக்ட்ஸ்
9. சி.எஸ். ஆர்கிடெக்ட்ஸ்
10. கே. செந்தில்குமார்
11. ஸ்டப் டிசைன் போரம்
12. நெக்சஸ் கிரியேசன்ஸ்
13. சிஓஎஸ் கன்சல்டன்சி
14. பி.எஸ்.பி ஆர்கிடெக்ட்ஸ்
15. கே.ரகுராமன் ஆர்க்கிடெக்ட்ஸ்

<u>Interior</u>

1. பித்தாவாடியன் பார்ட்னர்ஸ்
2. நந்தா அசோசியேட்ஸ்
3. ஆஸ்கார் கன்சஸ்யோ இண்டர்நேஷனல்
4. இராஜேந்திரன் அசோசியேட்ஸ்
5. அமுதசுரபி ஆர்கிடெக்ட்ஸ்
6. பேட்குரோ கன்சல்டண்ட்
7. அனாமிகா ஆர்கிடெக்ட்ஸ்

8. சி.ஆர். நாராயணராவ் ஆர்கிடெக்ட்ஸ்
9. சி.எஸ். ஆர்கிடெக்ட்ஸ்
10. பி.எஸ்.பி ஆர்கிடெக்ட்ஸ்

Landscape

1. இராஜேந்திரன் அசோசியேட்ஸ்
2. கே. செந்தில்குமார்
3. அமுதசுரபி ஆர்கிடெக்ட்ஸ்
4. நெக்சஸ் கிரியேசன்ஸ்
5. பேட்குரோ கன்சல்டண்ட்
6. சி.எஸ். ஆர்கிடெக்ட்ஸ்
7. கே. ரகுராமன் ஆர்கிடெக்ட்ஸ்
8. அனாமிகா ஆர்கிடெக்ட்ஸ்
9. ஆஸ்கார் கன்சஸ்யோ இண்டர்நேஷனல்
10. ஸ்டப் டிசைன் போரம்

Urban design

1. பேட்குரோ கன்சல்டண்ட்

மேற்கண்ட பட்டியலில் Conservation பணிக்கு யாரும் விண்ணபிக்காததாலும், Urban Design பணிக்கு குறைந்த அளவே விண்ணப்பித்திருப்பதால் அதற்கு தனியே ஒப்பந்தங்கள் கோரலாம் என முடிவு எடுக்கப்பட்டது.

இதில் ராகா கன்சல்டன்சி அவர்கள் சிங்கப்பூரிலிருந்து விண்ணப்பித்திருப்பதால், அவர்கள் மேற்கண்ட பட்டியலில் இல்லாத சென்னையில் உள்ள ஒருவரின் இருப்பிட முகவரிக்கான கடிதமும், மேலும் அவருடைய வெளிநாட்டுக் கல்வித் தகுதிக்கு Council of Architectன் ஒப்புதல் பெறப்பட்டவுடன் கட்டடம், Interior மற்றும் Urban design பட்டியலில் இணைக்கலாம் என கருதி முடிவு எடுக்கப்பட்டது.

TATA கம்பெனி அவர்களுடைய Profileல் Civil வேலைகளுடன் கூடிய அனுபவ சான்றிதழ் இணைத்துள்ளனர். ஆனால் Architect வேலைகள் மட்டும் செய்வதற்கான அனுபவ சான்றிதழ் மற்றும் அவர்களிடம் உள்ள தகுதிபெற்ற Architect team இருப்பதற்கான ஒப்புதல் கடிதம் பெற்ற பின்னர் பட்டியலில் இணைத்துக் கொள்ளலாம் என முடிவு எடுக்கப்பட்டது.

மெடிசியா கம்பெனியின் Profileஐ ஆராயும் போது அதில் ஆர்கிடெட்க்சுரல் கன்சல்டன்சியாக பணிகள் இல்லாமல், மற்ற கன்சல்டன்சி பணிகள் மட்டுமே இருப்பதால் அதனை நிராகரிக்கலாம் என தேர்வுகுழுவினால் முடிவு செய்யப்பட்டது.

ஒவ்வொரு வருடமும் ஏப்ரல் மற்றும் செப்டம்பர் மாத இறுதியில் மேற்கண்ட தகுதி அடிப்படைகளை (Eligibility Criteria) சமன் செய்யும் விருப்பமுள்ள கட்டடக்கலைஞர்களை மேற்கண்ட பட்டியலில் இணைக்க மன்ற ஒப்புதல் பெற்று நடவடிக்கை எடுக்கலாம் எனவும் கருதப்படுகிறது.

இப்பட்டியலில் உள்ளவர்களுக்கு Council of Architect ன் விதிப்படி கீழ்க்கண்டவாறு Consultancy fees வழங்கலாம் என ஏற்கனவே **08.02.2014** அன்று முதன்மைச் செயலர்/ஆணையர் அவர்களின் ஆணை பெறப்பட்டது.

| | Building | Landscape | Interior | Conservation | Urban Design |
|---|---|---|---|---|---|
| Architectural services, MEP, Structural design (as applicable) | 3% | 4.5% | 4.5% | 4.50% | 0.6% |
| Preparation of Detail specification, Rate Analysis, Estimate, BOQ and tender document | 1% | 1.5% | 1.5% | 1.50% | 0.2% |
| Periodic Inspection Evaluation of work at site, Co-ordination drawing, variations due to design change | 1% | 1.5% | 1.5% | 1.50% | 0.2% |
| Total Architectural Fees | 5% | 7.5% | 7.5% | 7.50% | 1% |

இப்பட்டியல் ஒப்புதல் பெறப்பட்டவுடன், அந்தந்த தேவைகளுக்கு அப்பட்டியலில் உள்ளவர்களை மட்டுமே உபயோகிக்க வேண்டும் என கருத்தில் கொண்டு மேற்படி பட்டியல் தயாரிக்கட்டுள்ளன. எனவே

1. மேற்கண்ட பட்டியலில் உள்ள தகுதி வாய்ந்த கட்டடக் கலைஞர்களை அவர்களின் தகுதிக்கு ஏற்ப பிரிக்கப்பட்ட பட்டியலுக்கு ஒப்புதல் அளிக்கவும்
2. தகுதியற்றவர்களின் ஒப்பந்தகளை ரத்து செய்யவும்
3. பட்டியலில் உள்ளவர்களை, வேலை செய்தவுடன் தேர்வு செய்யப்பட்ட அனைத்து கட்ட கலைஞர்களுக்கும், கட்டடத்துறையின் மூலம் உடன்படிக்கை நிறைவேற்றவும்.
4. அனைத்து வேலைகளுக்கு பட்டியலில் உள்ள Council of Architectன் norms படி பணம் பட்டுவாடா செய்யவும்
5. மன்ற ஒப்புதல் பெற்றவுடன் தெரிவு செய்யப்பட்ட பட்டியல்களை அனைத்து வட்டார மண்டல அலுவலகங்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பவும்
6. விருப்பமுள்ள தகுதி அடிப்படைகளை (Eligibility Criteria) சமன் செய்யும் கட்டடக்கலைஞர்களை வருடம் இருமுறை ஏப்ரல் மற்றும் செப்டம்பர் மாத இறுதியில் மன்றத்தின் ஒப்புதல் பெற்று பட்டியலில் இணைக்கவும்

எனவே, மேற்கண்ட தெரிவு பட்டியலுக்காக நிலைக்குழுக்கள் (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 19.06.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 25.06.2014 அன்று தீர்மான எண்.301/2014ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 20.06.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 25.06.2014 அன்று தீர்மான எண்.307/2014ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலமாக பெருபான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**தி.க.மே.து.ந.க.எண்.அ3/ 1521/2014**
**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 25.06.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.354/2014 **பொருள் எண்.36**

**மண்டலம் 1 முதல் 15க்குட்பட்ட தேவைப்படும் பகுதிகளுக்கு அடர்த்திமிகு பிளாஸ்டிக் குப்பை தொட்டிகள் (HDPE) 2500 எண்ணிக்கையில் கொள்முதல் செய்வதற்கு ஆகும் மொத்த மதிப்பு தொகை ரூ.4,25,00,000/–க்கு மன்றத்தின் அனுமதி**

சென்னை மாநகராட்சி மண்டலம் **1** முதல் **15**க்குட்பட்ட பகுதிகளுக்கு துப்புரவு பணிகளுக்கு தேவைப்படும் பொருட்களை வட்டார அளவில் கொள்முதல் மற்றும் விநியோகம் செய்ய வேண்டும் என மாற்றியமைக்கப்பட்ட நிர்வாக அமைப்பின்படி முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. ஆனால் வட்டார அலுவலகங்கள் மூலமாக கொள்முதல் மற்றும் விநியோகம் செய்ய இந்நாள்வரை எவ்வித நடவடிக்கையும் துவங்கவில்லை என **13.06.2014** அன்று நடைபெற்ற கூட்டத்தின் மூலம் அறியப்படுகிறது.

சென்னை மாநகராட்சி விரிவாக்கப்பட்ட பின் உருவாகும் ஏராளமான குப்பைகளில் சுகாதாரக் கேடு ஏற்படாவண்ணம் உடனுக்குடன் அப்புறப்படுத்த வேண்டியது அவசியம் ஆகும். தற்போது தேவைப்படும் குப்பை தொட்டிகளில் எண்ணிக்கை வட்டார அலுவலகங்கள் குறிப்பிட்டுள்ளபடி தோராயமாக **2500** எண்ணிக்கை ஆகும்.

**13.06.2014** அன்று துணை ஆணையர் (சுகாதாரம்) அவர்களால் நடத்தப்பட்ட கூட்டத்தில் திடக்கழிவு மேலாண்மை துறை சம்பந்தப்பட்ட **3** வட்டார அலுவலக பொறியாளர்கள் கலந்து கொண்டனர். அக்கூட்டத்தில் பிளாஸ்டிக் குப்பைத் தொட்டிகள், இரும்பு உலோக குப்பை தொட்டிகளின் பயன்பாட்டில் காணப்படும் குறைநிறைகள் பற்றிய கருத்து பரிமாற்றத்தின்போது, மேற்பார்வை பொறியாளர் தி.க.மே/ துறை (தலைமையகம்) அவர்கள் கருத்துப்படி பிளாஸ்டிக் குப்பை தொட்டிகள் அடிக்கடி எளிதில் சேதமடைவதாகவும், மேலும் அவைகள் தீப்பொறி மூலம் சேதமடைய வாயப்புள்ளதாகவும், ஆனால் தற்பொழுது பயன்பாட்டில் உள்ள இரும்பு உலோக குப்பை தொட்டிகள் அவ்வாறில்லை எனவும், வடிவமைப்பில் சிறிது மாற்றம் செய்து எடையளவு குறைக்கப்பட்டால் நிறைவான பலன் ஏற்படும் என்பதாகும். துணை ஆணையர் (சுகாதாரம்) அவர்கள் இரும்பு உலோக குப்பை தொட்டிகள் தற்போது சரியான முறையில் கையாளப்படுவது இல்லை என்ற காரணத்தினால் அடிக்கடி சேதமடைவதாகவும், பணிகளின் போது வடிவமைப்பால் சிரமம் ஏற்படுவதாகவும் பழுது பார்க்கும் பணிகளுக்கென தேவையற்ற அதிக செலவீனம் ஏற்படும் என்பதாகவும் எடுத்துரைத்து, இனி வரும் காலங்களில் தற்போது பயன்படுத்தப்பட்டு வரும் இரும்பு உலோக குப்பை தொட்டிகளுக்கு பதிலாக அடர்த்திமிகு பிளாஸ்டிக் குப்பை தொட்டிகள் (HDPE) உலகத் தரத்தில் தரக் குறியீட்டுக்குட்பட்டு கொள்முதல் செய்யப்படவேண்டும் எனவும் உத்தரவிடப்பட்டது.

மேலும், அக்கூட்டத்தின் போது தேவைப்படும் குப்பை தொட்டிகள் கொள்முதல் செய்வதற்கு மேற்பார்வை பொறியாளர் தி.க.மே/ துறை (தலைமையகம்) மூலமாக நடவடிக்கை மேற்கொள்ளவும் உத்தரவிட்டார். வட்டார அலுவலகங்கள் (வடக்கு, மத்தியம், தெற்கு) தெரிவித்துள்ளபடி தேவைப்படும் குப்பை தொட்டிகளின் எண்ணிக்கை ஏறக்குறைய **2500** ஆகும் இவைகளின் மொத்த மதிப்பு தோரயமாக **2500**×ரூ.**17,000** = ரூ.**4,25,00,000/–** ஆகும்.

எனவே,

1. சென்னை மாநகராட்சிக்குட்பட்ட **1** முதல் **15** மண்டலங்களுக்கு தேவையான மேற்குறிப்பிட்ட பிளாஸ்டிக் குப்பை தொட்டிகள் **2500** எண்ணிக்கையில் கொள்முதல் செய்ய நிர்வாக அனுமதி பெறுவதற்கும்,

2. தேவைக்கேற்ப பிளாஸ்டிக் குப்பை தொட்டிகள் அந்தந்த வட்டாரங்களிலேயே ஒப்பங்கள் கோரி கொள்முதல் செய்வதற்கும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழுக்கள் (சுகாதாரம்) (பணிகள்) மற்றும் (வதிவிதிப்பு(ம)நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் கூட்டம் 17.06.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 25.06.2014 அன்று தீர்மான எண். 20/2014ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு(வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 19.06.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 25.06.2014 அன்று தீர்மான எண்.302/2014ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 20.06.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 25.06.2014 அன்று தீர்மான எண். 308/2014ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலமாக பெருபான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**<u>நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ12/1797/2014</u>**

**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 25.06.2014 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.355/2014 **பொருள் எண்.37**

**<u>மண்டலம்–11, வார்டு–154 – மத்திய சென்னை கோட்டம்– விருகம்பாக்கம் புதிய தீயணைப்பு மீட்பு பணி நிலையம் – சென்னை மாநகராட்சி பராமரிப்பில் உள்ள அரசு புறம்போக்கு நிலமான இராமாபுரம் பேருந்து நிலைய நிலத்தை தற்காலிகமாக தீயணைப்புத்துறை இயங்குவதற்கு அனுமதி அளித்ததற்கு பின்னேற்பு அனுமதி.</u>**

மாவட்ட அலுவலர் தீயணைப்பு மீட்பு பணித்துறை, மத்திய சென்னை அவர்களின் 27.05.2014 ஆம் நாளிட்ட கடிதத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர்கள் அறிவிப்பின்படி விருகம்பாக்கம் மற்றும் மதுரைவாயில் புதிய தியணைப்பு மிட்பு பணிகள் நிலையங்கள் அமைக்க வேண்டி அரசு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது என்றும் பொதுமக்களின் நலன் கருதி திறக்கப்பட்டுள்ள தீயணைப்பு நிலையங்களுக்கு வாகனம், செயற்கருவிகள், தளவாடங்கள் ஆகியவை வாங்கி தயார் நிலையில் உள்ளன என்றும் தெரிவித்து, மாநகராட்சிக்கு சொந்தமான 1) விருகம்பாக்கம், கம்பர் தெரு, ஆலங்குளம், இராமாபுரம் பேருந்து நிலையம் பயணிகள் நிழற்குடை அருகில் உள்ள ஒரு மனை பரப்பு நிலம் 2) மதுரவாயல் 150வது வார்டு, வேம்புலி அம்மன் கோயில் தெருவில் உள்ள நிலம் ஆகிய இடங்களில் தற்காலிகமாக புதிய தியணைப்பு மீட்புப்பணிகள் நிலையம் அவசர அவசியத்தை முன்னிட்டு உடனடியாக அமைக்க நிலம் ஒதுக்கீடு செய்து உரிய அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

11–வது மண்டல அலுவலரின் 29.05.2014 நாளிட்ட குறிப்பில் மண்டலம்–11, வார்டு–154, கம்பர் தெரு, ஆலங்குளம், புல எண்.188ல் சுமார் 17900 ச.மீ, அரசு புறம்போக்கு நிலமானது பேருந்து நிலையமாகவும், குளமாகவும் முந்தைய இராமபுரம் ஊராட்சியின் பராமரிப்பில் இருந்து தற்போது சென்னை மாநகராட்சி பராமரிப்பில் உள்ளது என்று தெரிவித்து மேற்படி இராமாபுரம் பேருந்து நிலையத்தில் விருகம்பாக்கம் புதிய தீயணைப்பு மிட்புப்பணிகளுக்கான நிலையம் அமைக்க சுமார் 2400 சதுர அடி நிலம் 11–வது மண்டல வார்டு குழு பரிந்துரையை எதிர்நோக்கி தீயணைப்புத்துறைக்கு ஒதுக்கீடு செய்யலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, மண்டலம்–11, வார்டு–154 கம்பர் தெரு, புல எண்–158ல் உள்ள சென்னை மாநகராட்சி பராமரிப்பில் உள்ள அரசு புறம்போக்கு நிலமான இராமாபுரம் பேருந்து நிலைய நிலத்தை தீயணைப்புத்துறை தற்காலிகமாக இயங்குவதற்கு கோருவதாலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த திட்டமாதலாலும் இதன் அவசர அவசியம் கருதி 11–வது மண்டல வார்டு குழு, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மாமன்றம் ஆகியவற்றின் பின்னேற்பிற்கு உட்பட்டு தீயணைப்பு மிட்புப்பணித்துறைக்கு மேற்படி நிலத்தில் 2400 சதுர அடி நிலம் மட்டும் அந்நிலத்தில் எந்த ஒரு நிரந்தர கட்டுமானமும் அமைக்கக்கூடாது என்னும் நிபந்தனைக்குட்பட்டு ஒரு ஆண்டுகளாத்திற்கு மட்டும் பயன்படுத்திக்கொள்ள முன்நுழைவு வழங்குவதற்கு, முதன்மை செயலர்/ஆணையரின் 12.06.2014ஆம் நாளிட்ட ஆணைப்படி முன்நுழைவு அனுமதி அளிக்கப்பட்டது.

தீயணைப்பு–மீட்புப்பணித்துறைக்கு ஒராண்டு காலத்திற்கு தற்காலிகமாக இயங்குவதற்கு அனுமதி கோருவதாலும் இது மாண்புமிகு முதலமைச்சர் மானிய கோரிக்கையின்போது அறிவித்த திட்டமாதலாலும், இதன் அவசர அவசியம் கருதி வார்டு குழுவின் தீர்மானம் பெறப்படவேண்டும் என்ற நிபந்தனையுடன் தீயணைப்பு மீட்புப்பணித்துறைக்கு அந்நிலத்தில் எந்த ஒரு நிரந்தர கட்டுமானமும் அமைக்க கூடாது என்ற நிபந்தனைக்குட்பட்டு ஓராண்டு காலம் மட்டும் பயன்படுத்த முன் நுழைவு அனுமதி வழங்கியதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

> ‘‘ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 20.06.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 25.06.2014 அன்று தீர்மான எண்.309/2014ன்படி வார்டுகுழு தீர்மானம் பெறப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலமாக பெருபான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.’’

‘‘இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது’’

*******

**மவதுநகஎண்.இ3/946/2014 / கதுநகஎண்.பி6/4434/2013**

**முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 24.06.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.356/2014 **பொருள் எண்.38**

**ஒப்பந்தப்புள்ளி ஏற்பு**

கோட்டம் எண்:72 மண்டலம்:6

| | |
|---|---|
| பணியின் பெயர் மற்றும் விவரங்கள் | மத்திய வட்டார அலுவலகம் – கட்டடத்துறை – மண்டலம் –6, கோட்டம் – 72, புளியந்தோப்பு வ.உ.சி.நகர் முதல் தெருவில் உள்ள சமுதாயக் கூடத்திற்கு கூடுதலாக முதல் தளம், முகப்பு மற்றும் சுற்றுச்சுவர் கட்டும் பணி |
| மதிப்பீட்டின் எண். குழுவின் மன்றத்தின் தீர்மான எண் / நாள் | 03/2014 நாள்:24.01.2014 |
| ஒப்புதல் பெற்ற மதிப்பீட்டின் தொகை அலுவலக விலைப்பட்டியல் எடுத்துக்கொள்ளப்பட்ட ஆண்டு | ரூ.1,80,00,000/– 2013–2014 |
| எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது / நாள் | சென்னை மாநகராட்சி செய்தி மலர் நாள்:27.02.2014 |
| ஒப்பப்படிவம் பெற குறிக்கப்பட்ட இறுதி நாள் | 12.03.2014 |
| ஒப்பந்தப்புள்ளி எற்றுக்கொள்வதற்கானகடைசி நாள் | 14.03.2014 |
| ஒப்பம் செய்தித்தாள்களில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து ஒப்பம் பெறுவதற்கு குறைந்தது 15 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா ? இல்லை எனில் உரிய அலுவலரின் ஒப்புதல் பெற்ற விவரம் குறிப்பிடவும் | ஆம் |
| எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன | ஒன்று |

ஒப்பப்படிவங்கள் பெறப்பட்ட விவரங்கள்

| வ.எண் | ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர் திரு/திருவாளர்கள் | பணியின் அலுவலக மதிப்பு | ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை | 2013–2014 ஆம் ஆண்டின் விலைவிகிதம் விழுக்காடு அதிகம் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | திருவாளர்கள். சாம் கன்ஸ்ட்ரக்ஷன் | 1,55,31,630.85 | 1,69,15,499.15 | (+) 8.91 % அதிகம் |
| | | | | |

| | |
|---|---|
| குறைந்த ஒப்பம் அளித்தவருடன் பேச்சு வார்த்தை தேவையா ? ஆம் எனில் நடத்தப்பட்ட நாள் | ஆம், 27.05.2014. |
| பேச்சுவார்த்தைக்குப்பின் / ஒப்பத்தொகை ஒப்ப சதவீதம் | ரூ. 1,68,51,819.47/– (+) 8.50 % அதிகம் |
| பரிந்துரைக்கப்பட்ட ஒப்பந்ததாரரின் பெயர் | திருவாளர்கள். சாம் கன்ஸ்ட்ரக்ஷன் |
| இறுதி ஒப்பந்தத்தொகை | ரூ. 1,68,51,819.47/– |
| இறுதி ஒப்ப சதவிகிதம் (2013–2014 ஆம் ஆண்டின் விலைப்படி) | (+) 8.50 % அதிகம் |
| ஒப்பந்தப்புள்ளி செல்லத்தக்க காலம் | 22.08.2014 |

மேற்கண்ட பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு ஒப்ப இறுதி நாளான 23.05.2014 அன்று ஒரு ஒப்பம் பெறப்பட்டன. இதில் குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள். சாம் கன்ஸ்ட்ரக்ஷன் அவர்கள் அளித்துள்ள ஒப்ப விழுக்காடு (+) 8.91 % அதிகம் மற்றும் ஒப்பத்தொகை ரூ.1,69,15,499.15 ஆகும். இது 2013–2014 ஆம் ஆண்டின் இவ்வலுவலக பணி மதிப்பீட்டுத் தொகையான ரூ.1,55,31,630.85 யைவிட (+) 8.91 % அதிகம். எனவே, 27.05.2014 அன்று நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைக்குப்பின் குறைந்த ஒப்பந்ததாரர் ஒப்ப விழுக்காட்டை (+)0.41 % குறைவு. இதன் படி குறைந்த ஒப்பந்ததாரர் திருவாளர்கள். சாம் கன்ஸ்ட்ரக்ஷன் அவர்கள் அளித்துள்ள இறுதி ஒப்பத்தொகை ரூ. 1,68,51,819.47 மற்றும் ஒப்ப விழுக்காடு (+)8.50 % அதிகமாகும்.

மன்றத்தீர்மானம் எண்.512/2007 நாள்.25.09.2007ன்படி சந்தை விலைகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட இப்பணியின் சந்தை மதிப்பு ரூ. 1,77,97,421.15 ஆகும். The Hindu (Habitat) dated 24.05.2014 தேதியிட்ட சந்தை விலைப்படி கணக்கிட்டு ஒப்பிடுகையில் ஒப்பந்ததாரர் அளித்துள்ள இறுதி ஒப்பத்தொகையான ரூ.1,68,51,819.47 அதிகமாக உள்ளது.

மேலும் 12.06.2014 அன்று ஒப்ப ஆய்வுக்குழுவில் (TENDER SCRUTINY COMMITTEE) மேற்கண்ட பணிக்காக ரூ.1,68,51,819.47 க்கான அதாவது 2013–2014 ஆம் ஆண்டின் அலுவலக விலையைவிட (+)8.50 % அதிகமான ஒப்பத்தை ஏற்று இவ்வொப்பப்பணியை திருவாளர்கள். சாம் கன்ஸ்ட்ரக்ஷன் அவர்களுக்கு வழங்கலாம் என பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

எனவே குறைந்த ஒப்பந்ததாரர் அளித்துள்ள ரூ.1,68,51,819.47 (ரூபாய் ஒரு கோடியே அறுபத்து எட்டு இலட்சத்து ஐம்பத்து ஒன்றாயிரத்து எட்நூற்று பத்தொன்பது மற்றும் நாற்பத்தேழு பைசா) அதாவது 2013–2014 ஆம் ஆண்டு அலுவலக விலையைவிட (+)8.50 % அதிகமான ஒப்பத்தை ஏற்று இவ்வொப்பப்பணியை திருவாளர்கள். சாம் கன்ஸ்ட்ரக்ஷன் அவர்களுக்கு அளிக்க சென்னை மாநகர முனிசிபல் சட்டம் விதி 1919 ல் விதி 80(2)ன்படி நிலைக்குழுக்கள் (பணிகள்) மற்றும் (வரிவிதிப்பு(ம)நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 19.06.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 25.06.2014 அன்று தீர்மான எண்.305/2014ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 20.06.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 25.06.2014 அன்று தீர்மான எண்.312/2014ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலமாக பெருபான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**ம.வ.து.ந.க.எண்.இ3/939/2014 / க.து.ந.க.எண்.பி8/4154/2013**

**முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 24.06.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.357/2014 **பொருள் எண்.39**

**ஒப்பந்தப்புள்ளி ஏற்பு**

கோட்டம் எண்:96 மண்டலம்:8

| | |
|---|---|
| பணியின் பெயர் மற்றும் விவரங்கள் | மத்திய வட்டார அலுவலகம் – கட்டடத்துறை – மண்டலம் –8, கோட்டம் – 96, அயனாவரம் யுனைடேட் இந்தியா நகரில் அமைந்துள்ள மருத்துவர் குடியிருப்பு (RMO Quarters) மற்றும் பள்ளி வளாகத்தில் உள்ள மருந்தகம் ஆகியவற்றை இடித்து விட்டு புதியதாக மருந்தகம் கட்டும் பணி. |
| மதிப்பீட்டின் எண். குழுவின் மன்றத்தின் தீர்மான எண் / நாள் | 2013–2014, மன்றத்தீர்மான எண் 93/2014. நாள்:23.01.2014 |
| ஒப்புதல் பெற்ற மதிப்பீட்டின் தொகை அலுவலக விலைப்பட்டியல் எடுத்துக்கொள்ளப்பட்ட ஆண்டு | ரூ.1,38,00,000/– 2013–2014 |
| எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது / நாள் | சென்னை மாநகராட்சி செய்தி மலர் நாள்.27.02.2014. |
| ஒப்பப்படிவம் பெற குறிக்கப்பட்ட இறுதி நாள் | 14.03.2014 |
| ஒப்பந்தப்புள்ளி எற்றுக்கொள்வதற்கானகடைசி நாள் | 12.03.2014 |
| ஒப்பம் செய்தித்தாள்களில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து ஒப்பம் பெறுவதற்கு குறைந்தது 15 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா ? இல்லை எனில் உரிய அலுவலரின் ஒப்புதல் பெற்ற விவரம் குறிப்பிடவும் | ஆம் ஒதுக்கப்பட்டது. |
| எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன | மூன்று |

ஒப்பப்படிவங்கள் பெறப்பட்ட விவரங்கள்

| வ.எண் | ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர் திரு/திருவாளர்கள் | பணியின் அலுவலக மதிப்பு | ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை | 2013–2014 ஆம் ஆண்டின் விலைவிகிதம் விழுக்காடு அதிகம் / குறைவு |
|---|---|---|---|---|
| 1. | ஸ்ரீ ரமேஸ் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | 1,18,56,705.67 | 1,21,08,068.00 | (+) 2.12 % அதிகம் |
| 2. | சாம் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | 1,18,56,705.67 | 1,19,74,084.00 | (+) 0.99 % அதிகம் |
| 3. | V.S.B. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | 1,18,56,705.67 | 1,15,34,203.00 | (–) 2.72 % குறைவு |

| | |
|---|---|
| குறைந்த ஒப்பம் அளித்தவருடன் பேச்சு வார்த்தை தேவையா ? ஆம் எனில் நடத்தப்பட்ட நாள் | இல்லை |
| பேச்சுவார்த்தைக்குப்பின் / ஒப்பத்தொகை ஒப்ப சதவீதம் | ரூ.1,15,34,203.00 (–) 2.72 % குறைவு |
| பரிந்துரைக்கப்பட்ட ஒப்பந்ததாரரின் பெயர் | V.S.B. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் |
| இறுதி ஒப்பந்தத்தொகை | ரூ.1,15,34,203.00 |
| இறுதி ஒப்ப சதவிகிதம் (2013–2014 ஆம் ஆண்டின் விலைப்படி) | (–) 2.72 % குறைவு |
| ஒப்பந்தப்புள்ளி செல்லத்தக்க காலம் | 22.08.2014 |

மேற்கண்ட பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு ஒப்ப இறுதி நாளான **14.03.2014** அன்று மூன்று ஒப்பங்கள் பெறப்பட்டன. இதில் குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள். V.S.B. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்கள் அளித்துள்ள ஒப்ப விழுக்காடு (–)**2.72** % குறைவு மற்றும் ஒப்பத்தொகை ரூ. ரூ.**1,15,34,203.00** ஆகும். இது **2013–2014** ஆம் ஆண்டின் இவ்வலுவலக பணி மதிப்பீட்டுத் தொகையான ரூ.**1,18,56,705.67** யைவிட (–) **2.72** % குறைவு.

மன்றத்தீர்மானம் எண்.**512/2007** நாள்.**25.09.2007**ன்படி சந்தை விலைகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட இப்பணியின் சந்தை மதிப்பு ரூ. **1,34,87,665.17** ஆகும். The Hindu (Habitat) dated 24.05.2014 தேதியிட்ட சந்தை விலைப்படி கணக்கிட்டு ஒப்பிடுகையில் ஒப்பந்ததாரர் அளித்துள்ள இறுதி ஒப்பத்தொகையான ரூ.**1,15,34,203.00** குறைவாக உள்ளது.

மேலும் **12.06.2014** அன்று ஒப்ப ஆய்வுக்குழுவில் (TENDER SCRUTINY COMMITTEE) மேற்கண்ட பணிக்காக ரூ.**1,15,34,203.00** க்கான அதாவது **2013–2014** ஆம் ஆண்டின் அலுவலக விலையைவிட (–) **2.72** % குறைவான ஒப்பத்தை ஏற்று இவ்வொப்பப்பணியை திருவாளர்கள். V.S.B. கன்ஸ்ட்ரக்ஷன் அவர்களுக்கு வழங்கலாம் என பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

எனவே குறைந்த ஒப்பந்ததாரர் அளித்துள்ள ரூ.**1,15,34,203.00** (ரூபாய் ஒரு கோடியே பதினைந்து இலட்சத்து முப்பத்தி நான்காயிரத்து இருநூற்று மூன்று மட்டும்) அதாவது **2013–2014** ஆம் ஆண்டு அலுவலக விலையைவிட (–) **2.72**% குறைவான ஒப்பத்தை ஏற்று இவ்வொப்பப்பணியை திருவாளர்கள். V.S.B. கன்ஸ்ட்ரக்ஷன் அவர்களுக்கு அளிக்க சென்னை மாநகர முனிசிபல் சட்டம் விதி **1919** ல் விதி **80(2)**ன்படி நிலைக்குழுக்கள் (பணிகள்) மற்றும் (வரிவிதிப்பு(ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் **19.06.2014** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **25.06.2014** அன்று தீர்மான எண்.**304/2014**ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

> ‘‘ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் **20.06.2014** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **25.06.2014** அன்று தீர்மான எண்.**311/2014**ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலமாக பெருபான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.’’

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**ம.வ.து.ந.க.எண்.இ3/1847/2014 / க.து.ந.க.எண்.பி10/4135/2013**

**முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 24.06.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.358/2014 **பொருள் எண்.40**

**ஒப்பந்தப்புள்ளி ஏற்பு**

கோட்டம் எண்:142 மண்டலம்:10

| | |
|---|---|
| பணியின் பெயர் மற்றும் விவரங்கள் | மத்திய வட்டார அலுவலகம் – கட்டடத்துறை – மண்டலம்–10, கோட்டம்–142, சைதாப்பேட்டையில் உள்ள சலவையாளர் காலனியில் சலவைக்கூடம், உலர்த்தும் அறை, தேய்ப்புக்கூடம் மற்றும் ஓய்வறைகள் (Phase –I ) கட்டும் பணி |
| மதிப்பீட்டின் எண். குழுவின் மன்றத்தின் தீர்மான எண் / நாள் | 828/2013, நாள்: 27.12.2013 |
| ஒப்புதல் பெற்ற மதிப்பீட்டின் தொகை அலுவலக விலைப்பட்டியல் எடுத்துக்கொள்ளப்பட்ட ஆண்டு | ரூ.3,10,00,000.00 2013–14 |
| எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது / நாள் | சென்னை மாநகராட்சி செய்தி மலர் |
| ஒப்பப்படிவம் பெற குறிக்கப்பட்ட இறுதி நாள் | 05.02.2014 |
| ஒப்பந்தப்புள்ளி எற்றுக்கொள்வதற்கானகடைசி நாள் | 07.02.2014 |
| ஒப்பம் செய்தித்தாள்களில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து ஒப்பம் பெறுவதற்கு குறைந்தது 15 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா ? இல்லை எனில் உரிய அலுவலரின் ஒப்புதல் பெற்ற விவரம் குறிப்பிடவும் | ஆம் |
| எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன | ஒன்று |

ஒப்பப்படிவங்கள் பெறப்பட்ட விவரங்கள்

| வ.எண் | ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர் திரு/திருவாளர்கள் | பணியின் அலுவலக மதிப்பு | ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை | 2013–2014 ஆம் ஆண்டின் விலைவிகிதம் விழுக்காடு அதிகம் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | திருவாளர்கள். பியர்ல் இன்ஜினியர்ஸ் கன்ஸ்ட்ரக்ஷன் கோ–ஆப்ரேடிவ் சொசைட்டி லிமிடெட் | ரூ.2,62,71,205.63 | ரூ.2,82,73,000.00 | (+) 7.62 % |

| | |
|---|---|
| குறைந்த ஒப்பம் அளித்தவருடன் பேச்சு வார்த்தை தேவையா ? ஆம் எனில் நடத்தப்பட்ட நாள் | ஆம், |
| பேச்சுவார்த்தைக்குப்பின் / ஒப்பத்தொகை ஒப்ப சதவீதம் | ரூ.2,82,73,000.00 |
| பரிந்துரைக்கப்பட்ட ஒப்பந்ததாரரின் பெயர் | திருவாளர்கள். பியர்ல் இன்ஜினியர்ஸ் கன்ஸ்ட்ரக்ஷன் கோ–ஆப்ரேடிவ் சொசைட்டி லிமிடெட் |
| இறுதி ஒப்பந்தத்தொகை | ரூ.2,82,73,000.00 |
| இறுதி ஒப்ப சதவிகிதம் (2013–2014 ஆம் ஆண்டின் விலைப்படி) | (+) 7.62 % |
| ஒப்பந்தப்புள்ளி செல்லத்தக்க காலம் | 06.08.2014 |

மேற்கண்ட பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு ஒப்ப இறுதி நாளான **07.02.2014**அன்று ஒரு ஒப்பம் பெறப்பட்டன. இதில் குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள். பியர்ல் இன்ஜினியர்ஸ் கன்ஸ்ட்ரக்ஷன் கோ–ஆப்ரேடிவ் சொசைட்டி லிமிடெட் அவர்கள் அளித்துள்ள ஒப்ப விழுக்காடு (+)7.62% அதிகம் மற்றும் ஒப்பத்தொகை ரூ.**2,82,73,000.00** ஆகும். இது **2013–2014** ஆம் ஆண்டின் இவ்வலுவலக பணி மதிப்பீட்டுத் தொகையான ரூ.**2,62,71,205.63**யைவிட (+)7.62% அதிகமாகும். **27.5.2014** அன்று நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைக்குப்பின் குறைந்த ஒப்பந்ததாரர் தன்னுடைய ஒப்ப விழுக்காட்டை மேலும் குறைக்க இயலாது என தெரிவித்துள்ளார். இதன் படி குறைந்த ஒப்பந்ததாரர் திருவாளர்கள். பியர்ல் இன்ஜினியர்ஸ் கன்ஸ்ட்ரக்ஷன் கோ–ஆப்ரேடிவ் சொசைட்டி லிமிடெட் அவர்கள் அளித்துள்ள இறுதி ஒப்பத்தொகை ரூ.**2,82,73,000.00** மற்றும் ஒப்ப விழுக்காடு (+)7.62% அதிகம்

மன்றத்தீர்மானம் எண்.**512/2007** நாள்.**25.09.2007**ன்படி சந்தை விலைகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட இப்பணியின் சந்தை ஒப்பசதவீதம் (–)**(10.55)** ஆகும். The Hindu (Habitat) dated 24.05.2014 தேதியிட்ட சந்தை விலைப்படி கணக்கிட்டு ஒப்பிடுகையில் ஒப்பந்ததாரர் அளித்துள்ள இறுதி ஒப்பத்தொகையான ரூ.**2,82,73,000.00** குறைவாக உள்ளது.

மேலும் **06.06.2014** அன்று ஒப்ப ஆய்வுக்குழுவில் (TENDER SCRUTINY COMMITTEE) மேற்கண்ட பணிக்காக ரூ.**2,82,73,000.00** க்கான அதாவது **2013–2014** ஆம் ஆண்டின் அலுவலக விலையைவிட (+)7.62% அதிகம் ஒப்பத்தை ஏற்று இவ்வொப்பப்பணியை திருவாளர்கள். பியர்ல் இன்ஜினியர்ஸ் கன்ஸ்ட்ரக்ஷன் கோ–ஆப்ரேடிவ் சொசைட்டி லிமிடெட் அவர்களுக்கு வழங்கலாம் என பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

எனவே குறைந்த ஒப்பந்ததாரர் அளித்துள்ள ரூ.**2,82,73,000.00** (ரூபாய் இரண்டு கோடியே எண்பத்தி இரண்டு இலட்சத்தி எழுபத்தி மூன்றாயிரம் மட்டும்) அதாவது **2013–2014** ஆம் ஆண்டு அலுவலக விலையைவிட (+)7.62% அதிகம் ஒப்பத்தை ஏற்று இவ்வொப்பப்பணியை திருவாளர்கள். பியர்ல் இன்ஜினியர்ஸ் கன்ஸ்ட்ரக்ஷன் கோ–ஆப்ரேடிவ் சொசைட்டி லிமிடெட் அவர்களுக்கு அளிக்க சென்னை மாநகர முனிசிபல் சட்டம் விதி **1919** ல் விதி **80(2)**ன்படி நிலைக்குழுக்கள் (பணிகள்) மற்றும் (வரிவிதிப்பு(ம)நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் **19.06.2014** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **25.06.2014** அன்று தீர்மான எண்.**303/2014**ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் **20.06.2014** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **25.06.2014** அன்று தீர்மான எண். **310/2014**ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலமாக பெருபான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**அ.து.ந.க.எண்.அ3/756/2014**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின்02.04.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.359/2014 பொருள் எண்.41

**சென்னை மாநகராட்சி விளையாட்டுத் திடல்களில் – விளையாட்டுப் போட்டிகள் மற்றும் பயிற்சி மேற்கொள்ள கட்டணம் உயர்த்துதல் மற்றும் புதிதாக கட்டணம் நிர்ணயம் செய்ய அனுமதி.**

சென்னை மாநகராட்சி விளையாட்டுத் திடல்களில் விளையாட்டுப் போட்டிகள் மற்றும் பயிற்சி மேற்கொள்ள மன்ற தீர்மான எண்.3031/93, நாள்.09.07.1993ன்படி கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டது. 1993 ஆம் ஆண்டுக்குப் பின் இது நாள் வரை கட்டணம் ஏதும் உயர்த்தப்படவில்லை.

சென்னை மாநகராட்சி விளையாட்டுத்திடல்களை தரம் உயர்த்துவதற்கும், புதிய விளையாட்டுத்திடல்கள் அமைப்பதற்கும், புதிய உடற்பயிற்சி கூடங்கள், உள் விளையாட்டரங்கங்கள், நீச்சல் குளங்கள் கட்டுவதற்கும், மின்சார வசதி, தண்ணீர் வசதி, கழிவறை வசதி போன்ற பணிகளை மேற்கொள்ள தற்போது அதிக அளவில் நிதி செலவிடப்படுகிறது. மேலும், தற்போது மாநகராட்சி விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளதால், புதிய விளையாட்டுத் திடல்களை அமைத்தல் மற்றும் தரம் உயர்த்துதல் போன்ற பணிகளையும் மேற்கொள்ள வேண்டியுள்ளது. மேலும், தணிக்கை துறையும், விளையாட்டுத்திடல்களில் போட்டிகள் / பயிற்சிகள் மேற்கொள்ள கட்டணங்களை உயர்த்த வேண்டும் என வலியுறுத்தி வருகின்றனர். எனவே, விளையாட்டுத்திடல்களில் விளையாட்டுப் போட்டிகள் மற்றும் பயிற்சிகள் மேற்கொள்ள கட்டணம் உயர்த்துவது மற்றும் புதிதாக கட்டணம் நிர்ணயம் செய்யப்படாத விளையாட்டுகளுக்கும் மற்றும் மாநகராட்சி விளையாட்டுத் திடலை பயன்படுத்தி வரும் தனியார் பள்ளிகளிடமிருந்தும் ஒரு ஆண்டுக்கு நிபந்தனைகளுக்குட்பட்டு கட்டணம் நிர்ணயம் செய்வது அவசியமாகிறது.

கட்டண விவரம்

| வ. எண் | விளையாட்டின் பெயர் | தற்போதைய கட்டணம் ரூ. | உயர்த்தப்படவேண்டிய கட்டணம் ரூ. |
|---|---|---|---|
| 1. | ஹாக்கி | 150 | 1000 |
| 2. | கூடைப்பந்து | 150 | 1000 |
| 3. | கைப்பந்து | 150 | 500 |
| 4. | கபடி | 150 | 500 |
| 5. | டென்னிஸ் | 300 | 3000 |
| 6. | பூபந்து | 150 | 1000 |
| 7. | டென்னிகாய்ட் | 150 | 500 |
| 8. | கோ–கோ | 150 | 500 |
| 9. | கால்பந்து | 250 | 1000 |
| 10. | கிரிக்கெட் | 600 | 3000 |
| 11. | விளையாட்டு விழா | 600 | 3000 |
| 12. | நீச்சல் | 5000 | 5000 |
| 13. | இறகு பந்து | 1000 | 3000 |
| 14. | கேரம், செஸ், டேபிள் டென்னிஸ் | 500 | 3000 |
| 15. | கராத்தே, ஜூடோ, குத்துச் சண்டை, மல்யுத்தம், சிலம்பம் | 500 | 1000 |
| 16. | இறகு பந்து பயிற்சி – ஒரு மாதத்திற்கு (உள் விளையாட்டரங்கம்) | 100 | 500 |

<u>புதிய கட்டணம் நிர்ணயம் செய்தல்</u>

| வ.எண் | விளையாட்டின் பெயர் | புதிய கட்டண நிர்ணயம் ரூ. |
|---|---|---|
| 1. | ஹேண்ட்பால் | 500 |
| 2. | ஸ்கேட்டிங் பயிற்சி – 1 மாதத்திற்கு<br>ஸ்கேட்டிங் போட்டி | 1000/–<br>3000/– |
| 3. | தனியார் பள்ளிகள் – 1 ஆண்டுக்கு<br>I) 1 முதல் 5ம் வகுப்பு வரை<br>II) 6 முதல் 12ம் வகுப்பு வரை<br>III) 1 முதல் 12ம் வகுப்பு வரை | <br>6000/–<br>12000/–<br>15000/– |

<u>தனியார் பள்ளிகளுக்கான நிபந்தனைகள்:</u>

1. பொது மக்கள் பயன்பாட்டிற்கு எவ்வித இடையூறும் இன்றி விளையாட்டுத் திடலை பயன்படுத்த வேண்டும். மேலும் விளையாட்டுத் தொடர்பான நிகழ்ச்சிகளுக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும். மற்ற பொது நிகழ்ச்சிகளுக்குப் பயன்படுத்தக் கூடாது.
2. மாநகராட்சியால் விளையாட்டுப் போட்டிகள் மற்றும் விளையாட்டுத் தொடர்பான நிகழ்ச்சிகளுக்கு அனுமதி வழங்கப்பட்ட நாட்களில் விளையாட்டுத் திடலை பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும். மேலும் மாநகராட்சிக்கு தேவைப்படும் நாட்களில் விளையாட்டுத் திடலைப் பயன்படுத்த அனுமதி இல்லை.
3. ஒவ்வொரு ஆண்டும் உரிய கட்டணம் செலுத்தி அனுமதியினை புதுப்பிக்க வேண்டும்.
4. எவ்வித முன்னறிவிப்பும், எவ்வித காரணமும் இன்றி அனுமதியினை ரத்து செய்ய மாநகராட்சிக்கு உரிமை உண்டு.

எனவே,

அ) மேற்கண்ட அட்டவணையின்படி உயர்த்தப்பட்ட மற்றும் புதிதாக நிர்ணயிக்கப்பட்ட கட்டணங்களின்படி சென்னை மாநகராட்சி விளையாட்டுத் திடலை தனியார் பள்ளிகள் பயன்படுத்திக் கொள்ள அனுமதி வழங்கவும்,

ஆ) உயர்த்தப்பட்ட கட்டணங்களின் அடிப்படையில் சென்னை மாநகராட்சியில் ஏற்கனவே உள்ள நடைமுறைகள் மற்றும் விதிமுறைகளைப் பின்பற்றி விளையாட்டுப் போட்டிகள் / பயிற்சிகள் நடத்த அரங்கத்துறையின் மூலமாக தொடர்ந்து அனுமதி வழங்கவும்,

மேற்கண்ட ‘அ’ மற்றும் ‘ஆ’ ஆகிய இனங்களுக்கு நிலைக்குழு (கல்வி) மற்றும் நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (கல்வி) கூட்டம் 16.06.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 25.06.2014 அன்று தீர்மானஎண்.15/2014–ன்படி நிலைக்குழு(கல்வி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று, நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 20.06.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 25.06.2014 அன்று தீர்மான எண். 313/2014ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலமாக பெருபான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**ம.அ.9.வ.து.ந.க.எண்.ஆர்3/4676/2012**

**ஆணையாளர் அவர்களின் 08.05.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.360/2014 **பொருள் எண்.42**

**சொத்துவரி செலுத்துவதிலிருந்து விலக்கு அளித்தல்**

தேசரத்னா டாக்டர் இராஜேந்திர பிரசாத் நினைவு அறக்கட்டளைக்கு சொந்தமான கட்டிடம் மண்டலம்–9, வார்டு–111, கோபாலபுரம், தாமோதரன் தெரு, கதவு எண்.17ல் உள்ளது. இந்த அறக்கட்டளையின் மேனேஜிங் டிரஸ்டி திரு.சோபாகாந்த் தாஸ் அவர்கள் இக்கட்டிடத்திற்கு சொத்து வரி செலுத்த அறிவுறுத்தி அளிக்கப்பட்ட இறுதி கேட்பு அறிவிப்பை ரத்து செய்ய கோரியும், கட்டிடத்திற்கு சொத்து வரி செலுத்துவதிலிருந்து விலக்களிக்க ஆணை வழங்க கோரியும் சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிப்பேராணை மனு எண்.18110/2009 ன்படி வழக்கு தாக்கல் செய்தார்.

இவ்வழக்கில் சென்னை உயர்நீதிமன்றம் தனது 20.10.2009 நாளிட்ட ஆணையில், பின்வருமாறு உத்தரவிட்டது.

" 3. ..... the writ petition is disposed of directing the petitioner to deposit 50 % of the amount under the demand notice dated: 31.08.2009 within a period of four weeks from today. Having regard to the fact that the petitioner has made a representation as early as 22.2.2008, till the disposal of the representation, the present demand to the extent of 50 % shall stand stayed. The petitioner shall make a fresh representation once again to the Government enclosing the earlier representation, for the consideration of the Government"….

இந்த அறக்கட்டளையின் மேனேஜிங் டிரஸ்டி திரு. சோபாகாந்த் தாஸ் அவர்களின் 18.11.2009 நாளிட்ட மனுவில், தேசரத்னா டாக்டர் இராஜேந்திர பிரசாத் நினைவு அறக்கட்டளைக்கு சொந்தமான கட்டிடம் பல ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டதாகவும், அறக்கட்டளை மூலம் சேவை மனப்பான்மையுடன் தர்ம நோக்கத்திற்காக ஏழை எளிய மக்களுக்கு கல்வி உதவித்தொகை மற்றும் கடன் வழங்கப்படுவதாகவும், கட்டிடத்தின் தரை தளம் ஆண்டுதோறும் துர்கா பூஜையும், மாதந்தோறும் பூர்ணிமா பூஜையும் நடத்தப் பயன்படுத்தப்படுவதாகவும், தரைதளம் ஏழைகளுக்கு திருமணம் செய்ய இலவசமாக வழங்கப்பட்டு வருவதாகவும், திருமணக் கூடம் மற்றும் ஐந்து அறைகள் கொண்ட முதல் தளம் குறைந்த அளவு தொகை நன்கொடையாக பெற்று அளிக்கப்–படுவதாகவும், இரண்டாம் தளத்தில் " இந்தியன் வெஜிடேரியன் காங்கிரஸ் " என்ற அமைப்பிற்கு வாடகையின்றி அளிக்கப்பட்டுள்ளது என்றும், இரண்டாம் தளத்தில் உள்ள ஐந்து அறைகள் பராமரிப்பிற்காக குறைந்தளவு நன்கொடை பெற்று அளிக்கப்படுவதாகவும், மூன்றாம் தளத்தில் எட்டு அறைகள் உள்ளதாகவும், அவை குறைந்தளவு நன்கொடை பெற்று அளிக்கப்படுவதாகவும், இந்த அறக்கட்டளை இலாப நோக்கின்றி செயல்பட்டு வருகிறது என்றும், இந்த அறக்கட்டளையின் நடவடிக்கைகள் யாவும் நன்கொடைகளின் மூலமே எதிர் கொள்ளப்பட்டு வருவதால் சொத்து வரி செலுத்துவது கூடுதல் சுமையாக உள்ளது என்றும் தெரிவித்து மேற்கண்ட அறக்கட்டளை கட்டிடத்திற்கு சொத்துவரி செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்க கோரப்பட்டுள்ளது.

கதவு எண்.17, தாமோதரன் தெரு, கோபாலபுரம், சென்னை–86 என்ற முகவரியில் தேசரத்னா டாக்டர் இராஜேந்திர பிரசாத் நினைவு அறக்கட்டளைக்கு சொந்தமான கட்டிடம் தரைதளம்–3000 ச.அடி, முதல் தளம்–3000 ச.அடி, இரண்டாம் தளம்–3000 ச.அடி மற்றும் மூன்றாம் தளம்–3000 ச.அடி கொண்டதாகும். தரைதளம் உரிமையாளர்–வணிகப்பயன்பாடு மற்றும் இதர தளங்கள் வாடகைதாரர்–குடியிருப்பு என்ற அடிப்படையில் 2/1998–99 முதல் ரூ.17,095/– அரையாண்டு வரியாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இக்கட்டிடத்திற்கு 2/2011–12 வரை சொத்து வரி செலுத்தப்பட்டுள்ளது. மேற்படி கட்டிடத்தில் ஆய்வு மேற்கொண்டதில், பிற மாவட்டங்களிலிருந்து சென்னைக்கு மருத்துவ சிகிச்சைக்காக வரும் ஏழை எளிய மக்களுக்கு சிறிய அளவு நன்கொடை பெற்று உணவு மற்றும் தங்கும் வசதி செய்து தரப்பட்டு வருவது கண்டறியப்பட்டது.

சென்னை மாநகர முனிசிபில் சட்ட விதி 1919ன்படி 101 (b)ன்படி சத்திரங்களில் தங்குவதற்காக வசூலிக்கப்படும் வாடகை முழுவதும் தர்ம நோக்கத்திற்காக பயன்படுத்தப்படும்பட்சத்தில், அவற்றிற்கு சொத்துவரி விலக்கு அளிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

துணை ஆணையர் (வருவாய் மற்றும் நிதி) அவர்களின் **19.12.2013** நாளிட்ட குறிப்புரையில், தேசரத்னா டாக்டர் இராஜேந்திர பிரசாத் நினைவு அறக்கட்டளைக்கு சொந்தமான கட்டிடம் மேற்கண்ட பிரிவின் கீழ் வருவதால், சொத்து வரி செலுத்துவதிலிருந்து விலக்களிக்க மன்றத்தின் அனுமதி பெற்று அரசுக்கு செயற் குறிப்பு அனுப்பலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, **30.05.2014** அன்று நடைபெற்ற மாமன்ற கூட்டத்தில் இப்பொருள் குறித்த தீர்மானத்தில், ‘‘முற்றிலும் சேவை நிறுவனமாக இருந்தால் இந்த தீர்மானத்தை ஏற்கலாம் எனவும், சேவை நிறுவனம் என்ற பெயரில் சுயலாபத்திற்காக இருந்தால் இந்த தீர்மானத்தை நிராகரிக்கலாம் என்றும், இப்பொருளினை மீண்டும் மறு ஆய்வு செய்து அதன் பின் தீர்மானிக்கலாம்’’ என்று மன்றம் முடிவெடுத்தது.

இப்பொருள் குறித்து மீண்டும் கள ஆய்வு செய்ததில், தேசரத்னா டாக்டர் இராஜேந்திர பிரசாத் நினைவு அறக்கட்டளை முற்றிலும் தர்ம நோக்கத்திற்காக செயல்பட்டு வருகிறது என்று கண்டறியப்பட்டது.

எனவே, தேசரத்னா டாக்டர் இராஜேந்திர பிரசாத் நினைவு அறக்கட்டளை தர்ம நோக்கத்திற்காக செயல்பட்டு வருவதால் இந்த அறக்கட்டளைக்கு சொந்தமான கட்டிடத்திற்கு **2/2011–12** வரை ஏற்கனவே செலுத்தப்பட்ட அரையாண்டு சொத்துவரியினை திரும்ப கோரக்கூடாது என்ற நிபந்தனையின் அடிப்படையில் **1/2012–13** முதல் சென்னை மாநகர முனிசிபில் சட்ட விதி **1919**ன் பிரிவு **101 (b)** ன் படி சொத்துவரி செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்க மன்றத்தின் அனுமதி வேண்டி மீளச் சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**ப.து.ந.க.எண்./சி.தி./1808/ 2014**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 25.06.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.361/2014 **பொருள் எண்.43**

**மதிப்பீடு – 2013 –2014 ஆண்டிற்கான பணி – மண்டலம் –10, வார்டு – 132,133 மற்றும் 134ல் உள்ள டாக்டர். அம்பேத்கர் சாலை, அசோக்நகர், 4வது, 1வது மற்றும் 11 வது நிழற்சாலைகள் ( அசோக்நகர் 2வது நிழற்சாலையில் மின்சார வாரிய மின்வடம் புதைக்க Duct –கள் அமைக்கும் பணியுடன்) ஆகிய நான்கு முக்கிய முதன்மை சாலைகள் சர்வதேச தரத்தில் மேம்படுத்தும் பணிக்கு – 2013–2014 ஆண்டின் அலுவலக விலைப்பட்டியல்களின் அடிப்படையில் தோராய மதிப்பீடு ரூ.135 கோடிக்கான அரசின் ஆட்சி முறை ஒப்பளிப்பு மற்றும் உலகவங்கி உதவிபெற்ற TNSUDP கடன் பெறுவதற்கும், அதற்குரிய உலகவங்கியின் நிபந்தனைக்குட்பட்ட ஒப்பம் கோருவதற்கு அனுமதி**

கீழ் குறிப்பிட்ட பணிகளுக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பிடு அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

01. பணியின் பெயர்.

| வ. எண். | மண்டலம் / வார்டு எண். | பணியின் பெயர் | பணியின் விவரம் | மதிப்பீட்டுத் தொகை |
|---|---|---|---|---|
| 1 | 10 / 132,133 மற்றும் 134 | டாக்டர். அம்பேத்கர் சாலை, அசோக்நகர், 4வது, 1வது மற்றும் 11 வது நிழற்சாலைகள் ஆகிய நான்கு முக்கிய முதன்மை சாலைகள் சர்வதேச தரத்தில் மேம்படுத்தும் பணி | புதை மின் கம்பிக்கான வழிதடம் (CableDuct), கிரானைட்டிலான நடைபாதை, பசுமை பகுதி மற்றும் அனைத்து சாலை வசதிகளுடன்கூடிய சர்வதேச தரத்தில் மேம்படுத்தும் பணி | ரூ.135,00,00,000/– |

| | | | |
|---|---|---|---|
| 02 | பரிந்துரை செய்தவரின் விவரம் | : | மேற்பார்வைபொறியாளர்/சிறப்பு திட்டங்கள் துறை |
| 03 | எந்த துறைக்காக இப்பணி செயலாக்கம் | : | சிறப்பு திட்டங்கள் துறை |
| 04 | சம்பந்தப்பட்ட துறையால் அனுமதி | : | ஆம், அனுமதி அளிக்கப்பட்டது |
| 05 | தொழில் நுட்ப ஒப்புதல் அளித்த அதிகாரி செயல்முறை ஆணை எண் | : | தலைமைப்பொறியாளர்/சிறப்பு திட்டங்கள் பின்னர் பெறப்படும் |
| 06 | மதிப்பீடு எந்த வருடத்தின் அட்டவணை விலைப்பட்டியல் முன் வைத்து தயாரிக்கப்பட்டது | : | 2013 – 2014 |
| 07 | மதிப்பீட்டின் தொகை: | | |
| | அ) பணி செலவினம் மட்டும் | : | ரூ.100,18,70,000.00 |
| | ஆ) 2014 – 2015ஆம் ஆண்டிற்கான உத்தேச விலை உயர்வுக்காக பட்டியல் – 10 % | : | ரூ. 10,01,87,000.00 |
| | இ) செலவுகள் உத்தேச உயர்வுக்காக – 7.5 % | : | ரூ. 7,51,40,250.00 |
| | ஈ) மேலான செலவீனம் மட்டும் – 10 % | : | ரூ. 10,01,87,000.00 |
| | உ) சிறு மேற்பார்வை செலவு – 2.5 % | : | ரூ. 2,50,46,750.00 |
| | ஊ) சிறு அவசர செலவு (Contingency) | : | ரூ. 2,50,31,600.00 |
| | எ) தரக்கட்டுப்பாடு செலவு – 1 % | : | ரூ. 1,00,18,700.00 |
| | ஏ) உடல் உழைப்போர் நலத்திட்டத் தொகை– 1 % | : | ரூ. 1,00,18,700.00 |
| | ஐ) மற்றைய எதிர்பாரா செலவு | : | ரூ. 25,00,000.00 |
| | | | **ரூ. 135,00,00,000.00** |

| | | | |
|---|---|---|---|
| 08 | ஏற்கனவே எப்போது செய்யப்பட்டது | : | புதிய பணி |
| 09 | வரைப்படம் வைக்கப்பட்டுள்ளதா ? | : | ஆம் |
| 10 | நிதியின் மூலத்தன்மை | : | உலக வங்கி கடன் -<br>TNSUDP (60%)- 81.00கோடி<br>மூலதன மான்யம் –<br>TNSUDP (30%)- 40.50கோடி<br>சென்னை மாநகராட்சி<br>பங்களிப்பு –(10%) - 3.50 கோடி |
| 11 | இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி | : | 135 கோடி |

மேற்குறிப்பிட்டுள்ள பணிக்காக தயாரிக்கப்பட்டுள்ள ரூ.135 கோடி க்கான மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதியை தமிழக அரசிடமிருந்து பெறுவதற்கும் மற்றும் உலகவங்கி உதவிபெற்ற TNSUDP கடன் பெறுவதற்கும், அதற்குரிய உலகவங்கியின் நிபந்தனைக்குட்பட்ட ஒப்பம் கோருவதற்கும், சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம் விதி 1919ன் கீழ் திருத்தப்பட்ட சட்டப்பிரிவு விதி 78 (பி) ன்படி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வ.வி.(ம) நிதி.) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

> ‘‘ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 19.06.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 25.06.2014 அன்று தீர்மான எண்.307/2014ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

> ‘‘ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 20.06.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 25.06.2014 அன்று தீர்மான எண்.315/2014ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலமாக பெருபான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.’’

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**ப.து.ந.க.எண்./சி.தி./1807/ 2014**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 25.06.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.362/2014 **பொருள் எண்.44**

**மதிப்பீடு – 2013 –2014 ஆண்டிற்கான பணி – மண்டலம் –10, வார்டு – 136 மற்றும் மண்டலம் –9, வார்டு – 117ல் தியாகராய நகர் பாண்டிபஜாரில் உள்ள சர் தியாகராயா சாலையில் நடைபாதை வளாகம், சிமெண்ட் கான்க்ரீட் சாலை, மிதி வண்டி பாதை மற்றும் இயற்கை காட்சிகள் பசுமை புல்வெளிகள் அமைக்கும் பணிக்கு – 2013–2014 ஆண்டின் அலுவலக விலைப்பட்டியல்களின் அடிப்படையில் தோராய மதிப்பீடு ரூ.83 கோடிக்கான அரசின் ஆட்சி முறை ஒப்பளிப்பு மற்றும் உலகவங்கி உதவிபெற்ற TNSUDP கடன் பெறுவதற்கும், அதற்குரிய உலகவங்கியின் நிபந்தனைக்குட்பட்ட ஒப்பம் கோருவதற்கு அனுமதி.**

கீழ் குறிப்பிட்ட பணிகளுக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பிடு அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

01. பணியின் பெயர்.

| வ. எண். | மண்டலம் / வார்டு எண். | பணியின் பெயர் | பணியின் விவரம் | மதிப்பீட்டுத் தொகை |
|---|---|---|---|---|
| 1 | 9,10 /117,136 | தியாகராய நகர் சர் தியாகராயா சாலையில் பாண்டிபஜார் நடைபாதை வளாகம் (PondyBazar Pedestrian Plaza) மற்றும் மிதி வண்டி பாதையுடன்கூடிய கான்ட்க்ரிட் சாலை அமைக்கும் பணி | நடைபாதை வளாகம், சிமென்ட் கான்ட்க்ரீட் சாலை மிதி வண்டி பாதை மற்றும் இயற்கை காட்சிகள் பசுமை புல்வெளிகள் அமைக்கும் பணி | ரூ.83,00,00,000/– |

| | | | |
|---|---|---|---|
| 02 | பரிந்துரை செய்தவரின் விவரம் | : | மேற்பார்வை பொறியாளர்/ சிறப்பு திட்டங்கள் துறை |
| 03 | எந்த துறைக்காக இப்பணி செயலாக்கம் | : | சிறப்பு திட்டங்கள் துறை |
| 04 | சம்பந்தப்பட்ட துறையால் அனுமதி | : | ஆம், அனுமதி அளிக்கப்பட்டது |
| 05 | தொழில் நுட்ப ஒப்புதல் அளித்த அதிகாரி செயல்முறை ஆணை எண் | : | தலைமைப்பொறியாளர் / சிறப்பு திட்டங்கள் பின்னர் பெறப்படும் |
| 06 | மதிப்பீடு எந்த வருடத்தின் அட்டவணை விலைப்பட்டியல் முன் வைத்து தயாரிக்கப்பட்டது | : | 2013 – 2014 |
| 07 | மதிப்பீட்டின் தொகை: | | |
| | அ) பணி செலவினம் மட்டும் | : | ரூ.61,48,40,000.00 |
| | ஆ) 2014 – 2015ஆம் ஆண்டிற்கான உத்தேச விலை உயர்வுக்காக பட்டியல் – 10 % | : | ரூ. 6,14,84,000.00 |
| | இ) செலவுகள் உத்தேச உயர்வுக்காக – 7.5 % | : | ரூ. 4,61,13,000.00 |
| | ஈ) மேலான செலவீனம் மட்டும் – 10 % | : | ரூ. 6,14,84,000.00 |
| | உ) சிறு மேற்பார்வை செலவு – 2.5 % | : | ரூ. 1,53,71,000.00 |
| | ஊ) சிறு அவசர செலவு (Contingency) | : | ரூ. 1,54,11,200.00 |
| | எ) தரக்கட்டுப்பாடு செலவு – 1 % | : | ரூ. 61,48,400.00 |
| | ஏ) உடல் உழைப்போர் நலத்திட்டத் தொகை– 1 % | : | ரூ. 61,48,400.00 |
| | ஐ) மற்றைய எதிர்பாரா செலவு | : | ரூ. 30,00,000.00 |
| | | | **ரூ. 83,00,00,000.00** |

| | | | |
|---|---|---|---|
| 08 | ஏற்கனவே எப்போது செய்யப்பட்டது | : | புதிய பணி |
| 09 | வரைப்படம் வைக்கப்பட்டுள்ளதா ? | : | ஆம் |
| 10 | நிதியின் மூலத்தன்மை | : | உலக வங்கி கடன் - TNSUDP (60%)- 49.80கோடி<br>மூலதன மான்யம் – TNSUDP (30%)- 24.09கோடி<br>சென்னை மாநகராட்சி பங்களிப்பு –(10%) - 8.30 கோடி |
| 11 | இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி | : | 83 கோடி |

மேற்குறிப்பிட்டுள்ள பணிக்காக தயாரிக்கப்பட்டுள்ள ரூ.83 கோடிக்கான மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதியை தமிழக அரசிடமிருந்து பெறுவதற்கும் மற்றும் உலகவங்கி உதவிபெற்ற TNSUDP கடன் பெறுவதற்கும், அதற்குரிய உலகவங்கியின் நிபந்தனைக்குட்பட்ட ஒப்பம் கோருவதற்கும், சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம் விதி 1919ன் கீழ் திருத்தப்பட்ட சட்டப்பிரிவு விதி 78 (பி) ன்படி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வ.வி.(ம) நிதி.) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

''ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 19.06.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 25.06.2014 அன்று தீர்மான எண்.308/2014ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 20.06.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 25.06.2014 அன்று தீர்மான எண்.316/2014ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலமாக பெருபான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**ம.நீ.வ.து.ந.க.எண்.பி4/1599/2013**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 25.06.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.363/2014 **பொருள் எண்.45**

**தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியின் கீழ் தமிழ்நாடு நிலையான நகர்ப்புற வளர்ச்சி திட்டம் (TNSUDP)ன் மேற்கொள்ளப்படும் மழைநீர் வடிகால் துறையின் திட்ட மதிப்பீட்டுத் தொகைக்கு உலக வங்கியின் மூலம் கடன் பெறுவதற்கு அரசின் நிர்வாக ஒப்புதல் பெறுவதற்கு அனுமதி**

சென்னை மாநகர் விரிவாக்கப்பட்ட பகுதிகளில் மழைநீர் வடிகால் துறையால் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியின்கீழ் தமிழ்நாடு நிலையான நகர்ப்புற வளர்ச்சி திட்டம் (TNSUDF) மூலம் மேற்கொள்ளப்படும் கூவம் நீர்ப்புடிப்பு பகுதி மற்றும் அடையாறு நீர்ப்பிடிப்பு பகுதியில் ஒருங்கினைந்த மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி மற்றும் நாராயணபுரம் ஏரியை புனரமைக்கும் பணி மேற்கொள்ள விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி மற்றும் உட்கட்டமைப்பு நிதி (TNUIFSL) நிறுவனத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி மற்றும் உட்கட்டமைப்பு நிதி (TNUIFSL) நிறுவனத்தின் **09.06.2014** நடைபெற்ற கூட்டத்தின் குறிப்பின்படி, சென்னை மாநகரில் விரிவாக்கப்பட்ட பகுதிகளில் கூவம் நீர்ப்பிடிப்பு பகுதி மற்றும் அடையாறு நீர்ப்பிடிப்பு பகுதியில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணிகளுக்கும் மற்றும் நாராயணபுரம் ஏரியில் புனரமைப்பு பணிகளுக்கும் விரிவான திட்ட அறிக்கையின்படி கடன் தொகை பெற மன்றத்தின் அனுமதி பெற்று அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இதன் மூலம் தெரிவிப்பது யாதெனில், மழைநீர் வடிகால் துறையின் மூலம் மேற்கொள்ளப்படும் பணிகளான சென்னை மாநகரில் விரிவாக்கப்பட்ட பகுதிகளில் கூவம் நீர்ப்பிடிப்பு பகுதி மற்றும் அடையாறு நீர்ப்பிடிப்பு பகுதியில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணிகளுக்கும் மற்றும் நாராயணபுரம் ஏரி புனரமைப்பு பணிகளுக்கும் கீழ்கண்டவாறு நகர்ப்புற வளர்ச்சி நிதியின் (TNUDF) ஒப்புதல் பெறப்பட்டள்ளது.

| Details | Loan from TNUDF under TNSUDP (60%) | Capital Grant under TNSUDP (30%) | ULB contribution (10%) | TOTAL |
|---|---|---|---|---|
| | (Rs. in crores) | | | |
| I SWD | 660.86 | 330.43 | 110.14 | 1101.43 |
| Restoration of Narayanapuram lake | 9.40 | 4.70 | 1.57 | 15.67 |
| Total Project cost | 670.26 | 335.13 | 111.71 | 1117.10 |

மேற்குறிப்பிட்டுள்ளபடி தெரிவிப்பது யாதெனில், சென்னை மாநகரில் விரிவாக்கப்பட்ட பகுதிகளில் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணிகளுக்கு தோரயமான மதிப்பீட்டு தொகை ரூ.**1101.43** கோடி மற்றும் நாராயணபுரம் ஏரி ஆகிய பணிகள் புனரமைப்பு பணிகளுக்கு தோரயமான மதிப்பீட்டு தொகை ரூ.**15.67** கோடி மொத்தம் தோரயமான மதிப்பீட்டு தொகை ரூ.**1117.10** கோடிக்கு அரசின் ஆட்சிமுறை ஒப்பளிப்பு பெறுவதற்கும் மற்றும் உலக வங்கி கடன் பெறுவதற்கும் அதற்குரிய உலக வங்கியின் நிபந்தனைக்குட்பட்ட ஒப்பம் கோருவதற்கும் நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் **19.06.2014** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **25.06.2014** அன்று தீர்மான எண்.**309/2014**ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் **20.06.2014** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **25.06.2014** அன்று தீர்மான எண்.**317/2014**ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலமாக பெருபான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**ம.அ.9.ந.க.எண்.இ1/17537/2014**

**முதன்மைச் செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 28.02.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.364/2014 **பொருள் எண்.46**

**சென்னை மாநகராட்சியின் பல்வேறு மண்டலங்களில் சாலைகளை புதுப்பிக்க வேண்டி 10000 சாலைகள் திட்டத்தின் கீழ் ஒப்பங்கள் பெறப்பட்டு ஒப்பங்கள் சீராய்வுக் குழு பரிந்துரைக்கப்பட்டு – மன்றத்தின் அனுமதி.**

சென்னை மாநகராட்சி, மண்டலம் 1 முதல் 15 வரையுள்ள பகுதிகளில் சாலைகளை மேம்படுத்த 10000 சாலைகள் திட்டத்தின் கீழ் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு ஒப்பங்கள் கோரப்பட்டன. மேற்படி ஒப்பங்களில் தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்கள் அளித்த ஒப்பந்தப் புள்ளிகளை 28.02.2014 அன்று நடைபெற்ற ஒப்பங்கள் சீராய்வுக் குழு முன் சமர்ப்பிக்கப்பட்டது. ஒப்பங்கள் சீராய்வுக் குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட ஒப்பங்கள் சீராய்வு செய்து கீழ்கண்டவாறு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | மண் டலம் எண் | கோட் டம் எண் | கோப்பு எண்/ சிப்பம் எண் | பணியின் பெயர் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பத் தொகை | ஒப்ப சதவிகிதம் 2013–14 |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 1 | 9 | 109,110 | இ1/17537/1/13 | பேவர் இயந்திரம் மூலம் தார்சாலை அமைக்கும் பணி (28 சாலைகள்) | திருவாளர். ஆர்.ராமாராவ். | ரூ.2,39,50,065.40 | (+)4.41% (–) 0.14 % தற்போதைய சந்தை விலையில் இருந்து குறைவு |
| 2 | 9 | 111,118, 119 | இ1/17537/2/13 | பேவர் இயந்திரம் மூலம் தார்சாலை அமைக்கும் பணி (29 சாலைகள்) | திருவாளர். எஸ்.எம். எண்டர்பிரைசஸ் | ரூ.2,75,12,995.98 | (+)4.40% (–) 5.47 % தற்போதைய சந்தை விலையில் இருந்து குறைவு |
| 3 | 9 | 116,121 | இ1/17537/3/13 | பேவர் இயந்திரம் மூலம் தார்சாலை அமைக்கும் பணி (31 சாலைகள்) | திருவாளர். ஆர்.ராமாராவ். | ரூ.1,78,09,018.35 | (+)4.32% (–) 0.18 % தற்போதைய சந்தை விலையில் இருந்து குறைவு |
| 4 | 9 | 114,116, 121 | இ1/17537/9/13 | சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைக்கும் பணி (10 சாலைகள்) | திருவாளர். சிவா இஞ்சினியரிங் கம்பெனி. | ரூ.3,91,29,807.00 | (+)16.82% (–) 0.3 % தற்போதைய சந்தை விலையில் இருந்து குறைவு |

மேற்கண்ட பணிகளுக்கு இப்பணியின் அவசரம் மற்றும் அவசியத்தினை கருத்தில் கொண்டு பத்தி 6ல் உள்ள ஒப்பந்ததாரர்களுக்கு பத்தி 7ல் உள்ள ஒப்ப தொகைக்கு பணியாணை வழங்கியமைக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 19.06.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 25.06.2014 அன்று தீர்மான எண்.310/2014ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 20.06.2014 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 25.06.2014 அன்று தீர்மான எண்.318/2014ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலமாக பெருபான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.''

''இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது''

*******

**ம.நீ.வ.து.ந.க.எண்.பி5/2182/2014**

**முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 25.06.2014 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.365/2014 **பொருள் எண்.47**

**ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத்திட்டம் – கால்வாய் மேம்படுத்தும் பணிகள் தொகுப்பு – கேப்டன் காட்டன் கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் நீர்வழிக்கால்வாய் மேம்படுத்தும் பணிக்காக – பணி கால நீட்டிப்பு வழங்க அனுமதி**

கேப்டன் காட்டன் கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் நீர்வழிக்கால்வாய் மேம்படுத்தும் பணிக்காக ரூ.56,92,23,059.64பைக்கு ஒப்பந்ததாரர் திருவாளர்கள் ஸ்ரீ சரவணா இன்ஜீனியரிங் பவானி பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு 28.06.2010 அன்று பணி ஆணை வழங்கப்பட்டு, பணி நடைபெற்று வந்தது. இப்பணியின் காலம் 26 மாதங்கள் ஆகும். அதாவது 27.08.2012க்குள் முடிக்கப்பட வேண்டும். மேலும் சில எதிர்பாராத காரணங்களுக்காக இரு முறை ஆறு மாத காலம் முறையாக ஒப்பந்த கால நீட்டிப்பு வழங்கப்பட்டது. அதாவது 27.08.2013க்குள் முடிக்கப்பட வேண்டும். மேலும் 2012ஆம் ஆண்டின் பருவ மழை காரணமாகவும் இப்பகுதி தாழ்வான பகுதி என்பதால் மழைக்காலங்களில் மழைநீர் கால்வாய் பள்ளங்களில் ஊற்று தண்ணீர் மற்றும் கழிவு நீர் தேங்குவதாலும் ஏழு மாத கால நீட்டிப்பாக 31.03.2014 வரை பெறப்பட்டது.

மன்ற தீர்மானத்தின் எண்.302/2014, நாள்.30.05.2014ன்படி மேலும் சில இடர்பாடுகளின் காரணமாக ஒப்பந்தாரருக்கு 30.06.2014 வரை ஒப்ப கால நீட்டிப்பு வழங்கப்பட்டது.

கேப்டன் காட்டன் கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் வியாசர்பாடி கால்வாய் பகுதியில் இருபுறங்ளிலும் குடியிருப்பு பகுதிகள் ஆக்கிரமிப்புகள் இருப்பதினால் வழி தடம் ஏதும் இல்லாததாலும் இப்பணி துரிதமாக 30.06.2014க்குள் முடிக்க இயலாத நிலையாக இருப்பதாலும், மேலும், சிறப்பு நிலையாக கருதி 01.04.2014 முதல் பணி கால நீட்டிப்பு வழங்கப்பட்டதற்கு வேலை விகிதாச்சார உயர்வுடன் (Escalation Charges) இப்பணிகளை முழுவதுமாக முடித்து 31.12.2014 வரை கால நீட்டிப்பு வழங்க கேட்டுக்கொண்டுள்ளனர்.

இதன் மூலம் தெரிவிப்பது யாதெனில், கேப்டன் காட்டன் கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் நீர்வழிக்கால்வாய் மேம்படுத்தும் பணியில் திருவாளர்கள் ஸ்ரீ சரவணா இன்ஜீனியரிங் பவானி பிரைவேட் லிமிடெட் அவர்கள் பணி மேற்கொள்ளும் இடத்தில் வியாசர்பாடி கால்வாய் பகுதியில் இருபுறங்ளிலும் குடியிருப்பு பகுதிகள் இருப்பதினால் வழி தடம் ஏதும் இல்லாததாலும் இப்பணி துரிதமாக 30.06.2014க்குள் முடிக்க இயலாத நிலையாக இருப்பதாலும், கொடுங்கையூர் கால்வாய் மற்றும் வியாசர்பாடி கால்வாயில் உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றுவதற்காக தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் மூலம் ஒக்கியம் துரைபாக்கத்தில் அடுக்குமாடி வீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன. மேலும் வியாசர்பாடி மற்றும் கொடுங்கையூர் கால்வாயில் உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றி மறு குடி அமர்த்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், இப்பகுதியில் மறுகுடி அமர்த்த காலதாமதமின்றி உடன் பணி மேற்கொள்ள வேண்டிய நிலை உள்ளதால் இவ் ஒப்பந்ததாரருக்கு கால நீட்டிப்பு வழங்கப்படுவதன் மூலம் ஆக்கிரமிப்புகள் அகற்றும் பகுதியில் உடனே மேற்கொள்ள ஏதுவாக அமையும்.

மேலும், இப்பணிக்கான 2009 – 2010 ஆம் ஆண்டின் அலுவலக விலைப்பட்டியலின்படி பணி ஆணை வழங்கப்பட்டதின் மூலம் தற்சமயம் பணிபுரியும் பணிக்களுக்கான பணப்பட்டுவாடா 2009 – 2010ஆம் ஆண்டு விலைப்பட்டியலின்படியே வழங்கப்படுகிறது. மேலும் தற்போது சிமெண்ட், கம்பி மற்றும் கட்டிட தளவாடா பொருட்களின் விலை வெகுவாக உயர்ந்துள்ளதாலும், இப்பணிக்கு புதிய ஒப்பம் கோரும் பட்சத்தில் இப்பணிக்கு கூடுதல் செலவினம் ஏற்படும் என்பதினாலும், இப்பணிக்கு வேலை விகிதாச்சார உயர்வு (Escalation Charges) வழங்குவதின் மூலம் புதிய ஒப்பம் கோரி பணி துவக்கும் செலவினத்தை விட குறைவாகவே இருக்கும். மேலும் இவ் ஒப்பந்ததாரரின் மூலமே இப்பணிகளை முழுவதுமாக முடிக்க 31.12.2014 வரை கால நீட்டிப்பு வழங்கலாம் என கருதப்படுகிறது.

எனவே, கேப்டன் காட்டன் கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் நீர்வழிக்கால்வாய் மேம்படுத்தும் பணிகளை முழுவதுமாக முடிக்க 01.07.2014 முதல் 31.12.2014 வரை கால நீட்டிப்பு வழங்கலாம் என கருதப்படுகிறது.

இதனால் இப்பணிக்கு **30.06.2014** வரை இறுதியான கால நீட்டிப்பு வழங்கியதற்கு விலக்களித்து **01.07.2014** முதல் **31.12.2014** வரை இறுதியாக பணி நீட்டிப்பு வழங்கலாம் என கருத்து தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே,

**(1)** திருவாளர்கள் ஸ்ரீ சரவணா இன்ஜீனியரிங் பவானி பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு மேற்கூறிப்பிட்ட இனத்திற்கு ஒப்பந்த துணை விதி 7 – F. ஒப்பந்த சிறப்பு விதிகளின் கீழ், கேப்டன் காட்டன் கால்வாய் நீர்ப்பிடிப்புப் பகுதியில் கால்வாய் மேம்படுத்தும் பணிகள் முழுவதுமாக முடிப்பதற்கு **30.06.2014** வரை இறுதியான கால நீட்டிப்பு வழங்கியதற்கு விலக்களித்து **01.07.2014** முதல் **31.12.2014** வரை இறுதியாக பணி நீட்டிப்பு வழங்கவும்,

**(2)** கேப்டன் காட்டன் கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் கால்வாய் மேம்படுத்தும் பணிக்கு வேலை விகிதாச்சார உயர்வு (Escalation Charges) **01.04.2014** முதல் வழங்குவதற்கும்

**(3)** மேற்கண்ட பணிக்கு ஒப்ப விதிகளின் அடிப்படையில் திருத்திய மைல் கல் (Milestone) **01.07.2014** தேதியில் நிர்ணயம் செய்யவும்.

மேற்கண்ட **(1)** முதல் **(3)** வரையிலான இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) யின் மூலம் மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் **19.06.2014** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **25.06.2014** அன்று தீர்மான எண்.**311/2014**ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் **20.06.2014** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **25.06.2014** அன்று தீர்மான எண்.**319/2014**ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலமாக பெருபான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**<u>ம.நீ.வ.து.ந.க.எண்.பி5/2185/2013</u>**

**<u>முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 25.06.2014 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.366/2014 **பொருள் எண்.48**

**<u>ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத்திட்டம் – கால்வாய் மேம்படுத்தும் பணிகள் தொகுப்பு – ஓட்டேரி நல்லா நீர்ப்பிடிப்பு பகுதியில் நீர்வழிக்கால்வாய் மேம்படுத்தும் பணிக்காக – பணி கால நீட்டிப்பு வழங்க அனுமதி</u>**

ஓட்டேரி நல்லா நீர்ப்பிடிப்பு பகுதியில் நீர்வழிக்கால்வாய் மேம்படுத்தும் பணிக்காக ரூ.13,52,91,117.52பைக்கு ஒப்பந்ததாரர் திருவாளர்கள் எஸ்.பி.எல்.இன்ப்ரா ஸ்ட்ரக்ட்சர் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு 02.11.2010 அன்று பணி ஆணை வழங்கப்பட்டு, பணி நடைபெற்று வந்தது. இப்பணியின் காலம் 20 மாதங்கள் ஆகும். அதாவது 01.07.2012க்குள் முடிக்கப்பட வேண்டும். மேலும் சில எதிர்பாராத காரணங்களுக்காக இரண்டு முறை 31.03.2014 வரை ஒப்ப கால நீட்டிப்பு வழங்கப்பட்டது. மேலும் மன்ற தீர்மான எண்.303/2014ன்படி ஒப்பந்தாரருக்கு 30.06.2014 வரை ஒப்ப கால நீட்டிப்பு வழங்கப்பட்டது.

ஓட்டேரி நல்லா நீர்ப்பிடிப்பு பகுதியில் டி.வி.எஸ்.கால்வாய் மற்றும் ஏகாங்கிபுரம் கால்வாய் பகுதிகளில் பணி மேற்கொள்ள ஏதுவாக உள்ளதால் பணி நடைபெற்று வருவதாகவும், இப்பணி துரிதமாக 30.06.2014க்குள் முடிக்க இயலாத நிலையாக இருப்பதாலும், மேலும், சிறப்பு நிலையாக கருதி 01.04.2014 முதல் பணி கால நீட்டிப்பு வழங்கப்பட்டதற்கு வேலை விகிதாச்சார உயர்வுடன் (Escalation Charges) இப்பணிகளை முழுவதுமாக முடித்து 31.12.2014 வரை கால நீட்டிப்பு வழங்க கேட்டுக்கொண்டுள்ளனர்.

இதன் மூலம் தெரிவிப்பது யாதெனில், ஓட்டேரி நல்லா நீர்ப்பிடிப்பு பகுதியில் மேம்படுத்தும் பணியிடத்தில் ஏகாங்கிபுரம் கால்வாயில் பணியிடம் வழங்கப்பட்டு பணி துரிதமாக நடைபெற்று வருகிறது. டி.வி.எஸ்.கால்வாயில் பணி மேற்கொள்ள மொத்த இடமும் ஏதுவாக உள்ளது என முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற கலந்தாய்வு கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பாக இணை ஆணையர் (பணிகள்) அவர்கள் டி.வி.எஸ்.கால்வாயில் பணி மேற்கொள்ள உத்திரவிட்டார். இதன் பேரில் டி.வி.எஸ்.கால்வாயில் ஒப்பந்தாரர் பணியினை துரிதமாக மேற்கொண்டு வருகின்றனார். மேலும், ஏகாங்கிபுரம் கால்வாயில் உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றுவதற்காக தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் மூலம் ஒக்கியம் துரைபாக்கத்தில் அடுக்குமாடி வீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன. மேலும் ஏகாங்கிபுரம் கால்வாய் உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றி மறு குடி அமர்த்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், இப்பகுதியில் மறுகுடி அமர்த்த காலதாமதமின்றி உடன் பணி மேற்கொள்ள வேண்டிய நிலை உள்ளதால் இவ் ஒப்பந்ததாரருக்கு கால நீட்டிப்பு வழங்கப்படுவதன் மூலம் ஆக்கிரமிப்புகள் அகற்றும் பகுதியில் உடனே மேற்கொள்ள ஏதுவாக அமையும்.

மேலும், இப்பணிக்கான 2009 – 2010 ஆம் ஆண்டின் அலுவலக விலைப்பட்டியலின்படி பணி ஆணை வழங்கப்பட்டதின் மூலம் தற்சமயம் பணிபுரியும் பணிக்களுக்கான பணப்பட்டுவாடா 2009 – 2010ஆம் ஆண்டு விலைப்பட்டியலின்படியே வழங்கப்படுகிறது. மேலும் தற்போது சிமெண்ட், கம்பி மற்றும் கட்டிட தளவாடா பொருட்களின் விலை வெகுவாக உயர்ந்துள்ளதாலும், இப்பணிக்கு புதிய ஒப்பம் கோரும் பட்சத்தில் இப்பணிக்கு கூடுதல் செலவினம் ஏற்படும் என்பதினாலும், இப்பணிக்கு வேலை விகிதாச்சார உயர்வு (Escalation Charges) வழங்குவதின் மூலம் புதிய ஒப்பம் கோரி பணி துவக்கும் செலவினத்தை விட குறைவாகவே இருக்கும். மேலும் இவ் ஒப்பந்ததாரரின் மூலமே இப்பணிகளை முழுவதுமாக முடிக்க 31.12.2014 வரை கால நீட்டிப்பு வழங்கலாம் என கருதப்படுகிறது.

எனவே, ஏகாங்கிபுரம் கால்வாயில் பணி மேற்கொள்ள ஏதுவாக உள்ள இடத்தில் பணியை முடிக்கவும், டி.வி.எஸ் கால்வாயில் முழுவதுமாக பணியினை முடிக்கவும் இப்பணிக்காக 01.07.2014 முதல் 31.12.2014 வரை கால நீட்டிப்பு வழங்கலாம் என கருதப்படுகிறது.

இதனால் இப்பணிக்கு 30.06.2014 வரை இறுதியான கால நீட்டிப்பு வழங்கியதற்கு விலக்களித்து 01.07.2014 முதல் 31.12.2014 வரை இறுதியாக பணி நீட்டிப்பு வழங்கலாம் என கருத்து தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே,

**(1)** திருவாளர்கள் எஸ்.பி.எல்.இன்ப்ரா ஸ்ட்ரக்ட்சர்ஸ் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு மேற்கூறிப்பிட்ட இனத்திற்கு ஒப்பந்த துணை விதி 7 – F. ஒப்பந்த சிறப்பு விதிகளின் கீழ், ஓட்டேரி நல்லா நீர்ப்பிடிப்புப் பகுதியில் கால்வாய் மேம்படுத்தும் பணிகள் முழுவதுமாக முடிப்பதற்கு **30.06.2014** வரை இறுதியான கால நீட்டிப்பு வழங்கியதற்கு விலக்களித்து **01.07.2014** முதல் **31.12.2014** வரை இறுதியாக பணி நீட்டிப்பு வழங்கவும்,

**(2)** ஓட்டரி நல்லா கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் கால்வாய் மேம்படுத்தும் பணிக்கு வேலை விகிதாச்சார உயர்வு (Escalation Charges) **01.04.2014** முதல் வழங்குவதற்கும்

**(3)** மேற்கண்ட பணிக்கு ஒப்ப விதிகளின் அடிப்படையில் திருத்திய மைல் கல் (Milestone) **01.07.2014** தேதியில் நிர்ணயம் செய்யவும்.

மேற்கண்ட **(1)** முதல் **(3)** வரையிலான இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) யின் மூலம் மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் **19.06.2014** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **25.06.2014** அன்று தீர்மான எண்.**312/2014**ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் **20.06.2014** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **25.06.2014** அன்று தீர்மான எண்.**320/2014**ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலமாக பெருபான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

********